ஏற்றம் புரிய வந்தாய்

ரமணி சந்திரன்

கன்றிச் சிவந்த முகத்துடன் அபிராமி தன் அலுவலகத்துக்குள் புயலெனப் புகுந்த வேகத்தில், உள்ளே வேலையில் ஈடுபட்டிருந்த மற்ற மூன்று பெண்களும் திகைப்படைந்தனர்.

பொதுவாக, அபிராமியிடம் ஒரு நிதானம் இருக்கும். செய்கையில் விரைவு இருந்தாலும் பரபரப்பு இராது. விளம்பரம் சரியாக அமையவில்லை என்று வாடிக்கையாளர் பத்துத் தடவை திருப்பி அனுப்பினாலும், 'என்ன காரணம்?' என்று அமைதியாக யோசிப்பாளே தவிர ஆத்திரப்பட மாட்டாள். அவளிடம் பணிபுரியும் மற்றவர்கள் கோபப்பட்டாலும் 'அநாவசியமாகத் திருப்பி அனுப்ப அவர்களுக்கு என்ன பைத்தியமா? எங்கே குறை என்று பார்ப்போம்' என்று அமைதிப்படுத்துவாள்.

'அவளுக்குக் கோபம் வரும். ஆனால், வெளிக் காட்டாமல் அடக்கிக்கொள்வாள்' என்று அபிராமியோடு 'இல்லத்'தில் சேர்ந்து வளர்ந்த மகாலட்சுமி கூறுவாள். ஆனால், கூட வளர்ந்தவள் சொல்கிறாள் என்று கேட்டுக் கொண்டாலும் மற்ற இரு பெண்களுக்கும் அந்தக் கூற்றில் நம்பிக்கை கிடையாது. இன்றுவரை நம்பும்படி எதுவும் நேர்ந்ததும் இல்லை.

அப்படிப்பட்டவள் முகத்தில் இவ்வளவு சீற்றமா?

திகைப்பை சமாளித்துக்கொண்டு மற்ற பெண்கள் வரவேற்பாக முறுவலிக்குமுன், யாரையும் நிமிர்ந்து பாராமல், அந்த அறையில் ஒருபுறமாக பிளைவுட் தடுப்பால் பிரிக்கப்பட்டிருந்த அவளது பகுதிக்குள் அபிராமி சென்றுவிட்டாள்.

மலர்ந்த முகத்துடன் ஓரிரு வார்த்தைகளேனும் பேசாமல், அவள் இப்படிச் சென்றதே இல்லை. வியப்பும் கவலையுமாக மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

தனிமையை நாடி உள்ளே சென்ற அபிராமி, தன்னை அடக்கி மனதைச் சமநிலைக்குக் கொண்டு வர பெருமுயற்சி செய்து பார்த்தாள். அது முடியாது போலத் தோன்றவே, கைப்பையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

மகாலட்சுமியை அழைத்து சாவியை கொடுத்தாள். ''எனக்கு தலை வலிக்கிறது. நீங்களே வேலை முடிந்ததும் பூட்டிக்கொண்டு வந்துவிடுங்கள். வரட்டுமா? நாளை பார்ப்போம்'' என்று பொதுவான ஒரு பார்வையுடன் கூறிவிட்டு மடமட வென்று வெளியே சென்றுவிட்டாள்.

அவளது ஒற்றைப் படுக்கையறை ஃப்ளாட்டுக்கு சென்று, குளிர்நீரில் நன்றாகக் குளித்த பிறகும் ஆத்திரம் அடங்க மறுத்தது. இருந்திருந்து அவளையா இப்படிச் சொல்வது?

ஒன்றரை ஆண்டு காலம் – படித்து முடித்ததில் இருந்து பதினெட்டு மாதங்கள். அவள் என்னமாய் உழைத்திருக்கிறாள்! படிக்கும் காலத்தில்கூட, அவள் சோம்பியிருந்தது இல்லை. இல்லத்தில் அவரவருக்கு உரிய வேலையோடு கல்வியிலும் இரு மடங்கு கவனம் செலுத்திப் படிப்பாள்.

வேலை தொடங்கியதிலிருந்து அவள் இரவு, பகல் பார்த்ததில்லை. உடம்பு நோவு எண்ணியதில்லை. கண்ணில் பூச்சி பறக்கிற அளவுக்கு வரைவதும்; திருத்துவதும்; எழுதுவதும்; அதைத் திருத்துவதும் 'மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்' என்று 'கருமமே கண்ணாயினார்' பாட்டில் வருமே... அதுபோலத்தான் உழைப்பாள். அந்த உழைப்புக்கு மதிப்பு தராவிட்டாலும் பழித்துப் பேசாமலேனும் இருக்கலாம் அல்லவா? 'உடம்பு நோகாமல் சொகுசாக இருக்க விருப்ப மாம். பணக்காரனைப் பிடிக்க குறுக்கு வழிதான், அவளது விளம்பரத் தொழிலாம். ஏனென்றால், இந்தத் தொழிலில் பெரிய பெரிய தொழிலதிபர் களை சந்திக்க முடியும் அல்லவா? திட்டமிட்டபடி அப்படி ஒருவனைக் கண்டுவிட்டவள், அவனை வலை போட்டு பிடித்துக் கொண்டிருக்கிறாளாம். மற்றபடி, விளம்பரமாவது மண்ணாவது?'

சற்றும் நியாயமற்று என்ன பேச்சு இது?

அப்படி நோகாதுவாழ அபிராமி விரும்பியிருந்தால் இல்லத்து அன்னை ஏற்பாடு செய்த வேலையை செய்து கொண்டு, வருவதில் நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்திருக்கலாமே! யாருக்காகச் சேர்க்க வேண்டும்? யாருக்காக செலவழிக்க வேண்டும்? ஒருத்திதானே?!

அந்த வேலையில், இருக்கையில் அமர்ந்து கணக்கு எழுதிவிட்டு, மாதாமாதம் சம்பளத்தை வாங்கி செலவு போகக் கொஞ்சம் சேமித்திருக்கலாம். எத்தனையோ லட்சக்கணக்கான பெண்களில் அவளும் ஒருத்தியாக, உண்டு, உறங்கி, செத்தும் போயிருக்கலாம். பெற்றோர் உற்றார் என்று எந்தவிதப் பின்புலமும் இல்லாத அநாதையாக இருந்ததால் அந்த நிலைமை பலமுறை குத்திக் காட்டப்பட்டு, மனம் நொந்ததா லேயே தன் பெயரை நிலைநாட்ட ஆசைப்பட்டாள்.

அப்போதும் அவள் ஒன்றும் அரசாள ஆசைப்பட வில்லையே! 'அபிராமி' என்றால், மற்றவர்கள் மதிப்பு மரியாதையாக பார்க்க வேண்டும். அவ்வளவு தானே?

இதற்காக என்ன பாடு பட்டிருப்பாள்? எத்தனை படிகளில் ஏறி, ஏமாற்றத்தோடு இறங்கி யிருப்பாள்?

'ஓசியில் செய்யக்கூட இங்கே வேலையில்லையே அம்மா!', 'உனக்கு உட்கார இடம் ஒதுக்கவே வழி இல்லையே!', 'அப்படியெல்லாம் பயிற்சியாளராக நாங்கள் யாரையும் சேர்த்துக் கொள்வதில்லையே!', 'புதுஆட்களுக்கு கற்றுக்கொடுக்க இங்கு நேரமில்லை.'

வேலை கேட்டு, அது இல்லாவிட்டாலும் பயிற்சி யாக சம்பளம் இல்லாத பணி கேட்டு, அதுவும் பலன் இன்றி, எத்தனை விளம்பர நிறுவனங்களிலிருந்து கவலையுடன் வெளியேறியிருக்கிறாள் என்று அவளைத் தரக்குறைவாகப் பேசிய பெண்ணுக்குத் தெரியுமா?

நாக்கில் நரம்பின்றி, இன்னும் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்?

அதிலும் சிவா... அந்த சிவசந்திரனைப் பற்றி அவள் கூறியது முழு அபாண்டம் அல்லவா? நினைக்கவே அபிராமிக்கு மனம் கூசியது. ரொம்பவும் அநியாயமான குற்றச்சாட்டு! அந்தமாதிரி அவள் நினைத்துப் பார்த்ததே கிடையாதே... சே!

வேலை வேலை என்று வேறு நினைப்பே இல்லா மல் பாடுபட்டதற்கு, பயங்கர பட்டம் கிடைத்தது.

அபிராமியின் நெற்றிப்பொட்டில் 'விண்விண்' என்று வலித்தது.

எதற்கும் இருக்கட்டும் என்று வாங்கி வைத்து, இதுவரையிலும் பயன்படுத்தியிராத தலைவலித் தைலத்தை எடுத்து, வலித்த இடத்தில் லேசாகத் தடவிக்கொண்டு அபிராமி படுக்கையில் சரிந்தாள்.

இல்லத்துக்கு பணம் அனுப்பும் போது மட்டும் வேகமாக வந்து போகும் பழைய நினைவுகள், இன்றைய பழக்கமற்ற ஓய்வில் வரிசையாக வரத் தொடங்கின!

படிக்கும்போதே ஆசிரமத்தில் வளர்கிறவளுக்கு, கலைக்கல்லூரி படிப்பே பெரிய வரம் என்று உணர்ந்ததுமே அப்போதும் வெகு வாக யோசித்துதான் நுண்கலையை தேர்ந்தெடுத்தாள். கல்லூரிக் காலத்தில் அவள் வரைந்த ஓவியங்கள் எளிதாக விற்பனையானது அவளது தன்னம்பிக்கையை வளர்த்தது. ஆனால், தன் ஓவியங்களை விற்றே பெரிய ஆளாகிவிட முடியும் என்று அவள் கனவு கண்டுவிட வில்லை. அந்த வழியில், வாழ்க்கைக்குத் தேவையான பணத்தை முழுமையாக ஈட்ட முடியும் என்றும் அவள் எதிர்பார்க்கவில்லை.

'தன்னெஞ்சறிய பொய்யற்க' என்பதன்படி, அந்த அளவுக்கு தான் ஒரு பிறவிமேதை இல்லை என்பதை அவள் உணர்ந்திருந்தாள். ஆனால் புத்திசாலித்தனம் இருந்தது. உழைப்புக்கு அஞ்சுகிறவளும் அல்ல. கூடவே, விடாமுயற்சியும் இருந்தது.

தன்னைத்தானே விருப்பு வெறுப்பற்று சீர்தூக்கிப் பார்த்து விட்டு, படித்து, பலரிடம் விசாரித்து, அபிராமி தன் உயர்வுக்கென்று தேர்ந்தெடுத்த ஒன்றுதான் விளம்பரத்துறை. ஆனால், அதன் உள்ளே நுழையவே அவள் அரும்பாடு பட்டுப்போனாள்!

அபிராமி அவ்வளவு எளிதில் நம்பிக்கை இழக்கிறவள் அல்ல! ஆயினும், உள்ளூர கவலையுடன்தான் இரண்டாம் தடவை 'ரேயன் அட்வர் டைசிங்' நிறுவனத்துக்குச் சென்றாள்.

படித்துப் பார்த்து முடிவு கூறுவதாகச் சொல்லி, அவளது தகுதிச் சான்றுகளையும் படங்களை யும் நிறுவன உரிமையாளர் வாங்கி வைத்துக் கொண்டதை நினைத்துப் பார்க்கும்போது அவளுக்குக் கொஞ் சம் நம்பிக்கை தலைநீட்டத்தான் செய்தது. அவளது தகுதிக்கு குறை வில்லை. முதல் வகுப்புதான். மேலும், அவளது படங்களும் எல்லோரது பாராட்டையும் பெற்றவையே!

கூடவே, 'ரேயன் அட்வர் டைசிங் அசோசியேட்'சின் உரிமை யாளர் சி.எம். ரேயனின் ஐம்பதை எட்டும் தோற்றமும் கதர் ஜிப்பா, வேட்டியும் குழைவும் கனிவுமாக அவர் பேசியதும் சேர்ந்து, அவளது நம்பிக்கையை அதிகப் படுத்தின.

ஆனால், மைத்ரேயன் என்ற அழகிய பெயரை அவர் சி. எம். ரேயனாக சுருக்கியிருந்ததுதான் கொஞ்சம் உறுத்தியது. அழகான பெயர்! இப்படியா சிதைப்பது?

ஆனால், அது அவருடைய பெயர்! அதை என்ன செய்வதும் அவரது உரிமை. அதில் தலையிட அவளுக்கு உரிமை கிடையாது. எனவே, அது பற்றி நினையாதிருப்பது நல்லது.

மைத்ரேயனைப் பொறுத்தவரை அவளுக்கு வேலை தருவாரா இல்லை யா என்பதை மட்டும் அபிராமி யோசித்தால் போதும். மற்றது, அவளுக்கு அநாவசியம்!

ஆனால், மைத்ரேயன் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் போய், வெகுநேரம் காத்திருந்தபோது அங்கேயும் வேலை தராவிட்டாலும் வேலைக்குரிய பயிற்சியேனும் கிடைத்தால், அதுவே பெரிது போல தோன்றியது. பொதுவாக பயிற்சிக் காலத்தில் ஊதியம் கிடைப்பது கடினம். பயிற்சியின்போது அவளது பணி பிடித்தமா னதாக இருந்தால், சம்பளத்துடன் கூடிய வேலையாக அதை மாற்றக் கூடும். பெரும்பாலும் அப்படி மாற்றிவிடுவார்கள் என்று அபிராமி கேள்விப்பட்டிருந்தாள்.

ஆனால், அப்படியொரு பயிற்சிக்கு இடம் கிடைக்குமா என்பதே அவளுக்கு இப்போது ரொம்பவும் சந்தேகமாக இருந்தது. இதுவரை, அவள் சென்று பார்த்த அத்தனை இடங்களிலும் எதிர்மறையான பதில்தானே கிடைத்தது?

பேசாமல், ஆசிரமத்து 'அம்மா' சொல்லி அனுப்பியதுபோல், அந்த கணக்கெழுதும் வேலையில் சேர்ந்திருக்க வேண்டுமோ என்றுகூட அபிராமிக்கு தோன்றத் தொடங்கி யிருந்தது.

மாதம் ஆயிரத்து இருநூறு ரூபாய் சம்பளம். கொஞ்சம் சாதாரணமானதாக உள்ள, வேலை பார்க்கும் மகளிர் தங்கும் விடுதி ஒன்றில் தங்கிக் கொண்டு, உணவிலும் உடையிலும் எளிமையைக் கடைப்பிடித்தால், நிறையவே சேமிக்கவும் முடியும் என்றும் ஆலோசனை தந்திருந்தார்கள்.

அதையே செய்திருக்கலாமோ?

நாளைய பலாப்பழத்துக்கு ஆசைப்பட்டு, இன்றைய களாப் பழத்தையும் கைநழுவ விட்டுவிட்டாளோ?

காத்திருக்கும் நேரத்தில், மனதைத் தளரவிடக்கூடாது என்று தீர்மானித்து, மனதை மாற்றுவதற்காக சுற்றுமுற்றிலும் பார்வையைச் சுழற்றி ஆராய்ந்தாள் அபிராமி.

ஒருபுறமாக கம்ப்யூட்டரின் முன் ஒரு பெண். வயது பின் இருபதுகளில் இருக்கக் கூடுமா? அந்த வயதுக்குரிய உற்சாகமோ, நிமிரவோ இல்லாமல், கடனே என்று உட்கார்ந்து, ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். 'கடனே' என்று செய்வதாகக் கூட சொல்ல முடியாது.

அவளிடம் ஏதோ ஒரு தப்பு, ஒரு பொருந்தாமை இருப்பதாக அபிராமிக்குத் தோன்றியது. முதல் நாளன்றும் அதே எண்ணம் தோன்றியது நினைவு வந்தது. ஆனால், அந்தப் பெண்ணின் பிரச்னை எதுவாக இருந்தாலும், அது இவளுக்குச் சம்பந்தம் இல்லாதது. அதோடு, அனுமதியில்லாமல் மற்றவரின் சொந்த வாழ்வில் மூக்கை நுழைப்பது சரியுமல்ல.

இந்த எண்ணம் தோன்றவும் அவளிடமிருந்து பார்வையை வேறிடம் திருப்பினாள்.

அடுத்த மேஜையில், முழுக்க முழுக்கத் தலை நரைத்த ஒருவர், வீட்டில் சாய்வு நாற்காலியில் சுகமாகச் சாய்ந்து கிடந்து டி.வி. பார்த்துக் கொண்டிருக்க வேண்டியவர், இங்கே ஏதோ லெட்ஜரில் மூழ்கியிருந்தார்.

அடுத்து, 'நான்தான் ஆபீஸ் பையன்' என்று சொல்லாமல் சொல்வது போல, காக்கி உடுப்பில் ஒருவன் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தான்.

அப்போதைக்கு அபிராமியின் கண்ணில் பட்டவர்கள் இந்த மூவரும்தான். இதற்குமேல் இவர்களைப் பார்த்தால், அநாகரிகமாக வெறிப்பது போலத் தோன்றும்.

உள்ளே, ஏ.சி. அறையிலிருந்து அந்த ரேயன் வெளியே வரும் அறிகுறியையே காணவில்லை! என்ன வேலை என்றாலும் 'உண்டு, இல்லை' என்று அவளுக்கு ஒரு பதிலைச் சொல்லி விட்டுப் போய்ச் செய்யக்கூடாதா? இப்படி, வயிற்றுக்குள் இறுக்கத்துடனேயே எவ்வளவு நேரம் காத்திருப்பது?

ஆனால், இது எருதின் நோய். காக்கைக்குத் தெரிய வாய்ப்பில்லை!

அலுப்பை அடக்கி, மறைக்க முயன்றவாறே அபிராமி நிமிர்ந்தபோது, கம்ப்யூட்டரின் முன் இருந்த பெண் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிய வர, அவசரமாக முறுவலித்தாள். சிநேகமாக நோக்கி, உள்ளே கையைக் காட்டி 'வர நேரமாகுமா?' என்று சைகையால் விசாரித்தாள்.

ஒருவித மரத்த முகபாவம், அந்தப் பெண்ணுக்கு. கவனத்துடன் உணர்ச்சி துடைத்த முகமா அல்லது முகமே அப்படித்தானா?

அந்தப் பெண் ஒரு கணம் யோசித்தவள், எழுந்து ஏ.சி. அறையினுள் சென்றாள். சென்ற விரைவிலேயே திரும்பி வந்து, அபிராமியை ஏறிட்டும் பாராமல், அவளது இருக்கையில் அமர்ந்து வேலையில் ஈடுபட்டாள்.

சில நிமிடங்களில் அபிராமிக்கு அழைப்பு வந்தது.

கிட்டத்தட்ட அவள் எதிர்பார்த்த விதத்தில்தான் மைத்ரேயனின் தொடக்கம் இருந்தது.

இப்போதெல்லாம் தொழில் ரொம்பவும் 'டல்'லாம். உள்ளவர்களுக்கே செய்வதற்கு வேலை இல்லையாம். இதைவிட ஆள்குறைப்பு செய்ய முடியாதே என்று சும்மா உட்கார வைத்து சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறாராம்!

இதில், வெறும் பயிற்சிக்கே என்றாலும் அவளுக்கு, யாருடைய வேலையை பிடுங்கிக் கொடுப்பது? இருப்பவர்களில் ஒருவரை வீட்டுக்கு அனுப்பினால்தான் அது முடியும். ஆண்டுக்கணக்கில் பணிபுரிகிறவர்களை அப்படி அனுப்ப முடியுமா? அதனால்...

'இடத்தைக் காலி பண்ணுகிறாயா?' என்ற வார்த்தைகளை மைத்ரேயன் சொல்லி முடிக்குமுன், கதவைத் தட்டக்கூட இல்லாமல் ஏ.சி. அறையின் கதவைத் திறந்துகொண்டு, சற்று தாட்டியான ஒருவர் ஆரவாரத்துடன் உள்ளே வந்தார். ''என்னய்யா ஆள் வைத்திருக்கிறாய்? என்ன கேட்டாலும் முடியாது, முடியாது என்று சொல்வதற்காக சம்பளம் கொடுத்து ஒருத்தனை போட்டிருக்கிறாயாக்கும்?'' என்று அவர் படபடக்க, மைத்ரேயன் அவரை அமைதிப்படுத்த முயன்றார்.

''நீங்கள் முதலில் உட்காருங்கள் சார்... என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று உபசாரம் செய்தார்.

தான் வெளியே போகவேண்டிய நேரம் என்று அபிராமிக்குத் தோன்றியது. ஆனால், அவளது கோப்புகள் இன்னமும் கைக்கு வரவில்லையே? வெளியே போய், அந்தப் பெண்ணிடமோ, பெரிய வரிடமோ வாங்கிக் கொள்ளும்படி மைத்ரேயனிட மிருந்து ஒரு வார்த்தை வந்தால் போய்விடலாம்! சான்றிதழ்களையும் படங்களையும் இங்கே விட்டு விட்டு, பிற்பாடு அதற்காக அலையும்படி ஆகிவிடக் கூடாதே!

அபிராமி தயக்கத்துடன் நிற்க, அவள் நிற்பதை சற்றும் பொருட்படுத்தாமல், வந்தவர் மீண்டும் பொரியத் தொடங்கிவிட்டார்.

''ஆமாம்... நான் இங்கே உட்கார்ந்து சம்பிரம மாக விருந்து சாப்பிட்டுப்போக வந்தேன், பார்... சொல்லு, நான் கேட்ட மாதிரி ஏற்பாடு பண்ண முடியுமா, இல்லையா? உன் ஆள் மாதிரி இப்படிக் காரணம், அப்படிக் காரணம் என்று வளவளக்காமல் வெட்டு ஒண்ணு, துண்டு இரண்டு என்று பளிச்சென்று சொல்லு!'' என்று அதட்டினார்.

வந்தவருக்குத் தேவையான பதில் மைத்ரேயனிடம் இல்லை போலும்!

''அதுல பாருங்க சார், நீங்கள் பரந்தாமன்! உங்களால் ஆகாததில்லை. நாங்கள் அப்படியா? சாதாரண மனிதர்கள்...'' என்று இழுத்தார்.

''சுற்றி வளைத்து, முடியாது என்றுதான் நீயும் சொல்கிறாய்... அப்படித்தானே?''

''பின்னே என்ன பரந்தாமன் சார்... மொத்தப் பத்திரிகையையும் எடுக்காமல் விட்டுவிடலாம். ஆனால், சென்னைப் பதிப்பு மட்டிலுமாவது முழுமையாக எடுத்து விளம்பரத்தைக் கொடுப்பதானால், அது என்னால் முடியும்...'' விளம்பர விஷயம்! தன்னை மீறிய ஆவலுடன் அபிராமி, அவர்கள் உரையாடலை உற்றுக் கவனிக் கலானாள். அந்த உரையாடல், அவளது வாழ்க்கை யின் அடித்தளமாக அமையப்போகிறது என்று அப்போது அவளுக்கு நிச்சயமாகத் தெரியாது!

2

பரந்தாமன் நல்ல உயரமாக, அந்த உயரத்தை குள்ளமாக்கிக் காட்டும் உருவ அமைப்புடன் பேச்சைப் போலவே ஆளும் ஆரவாரமாக இருந்தார்!

மூன்று விரல்களில் ஜாதிக் கற்கள் பதித்த மோதிரங்களும் மணிக்கட்டில் பட்டை தங்கச் சங்கிலியும் பளபளத்தன.

மைத்ரேயனின் பதிலைக் கேட்டதும் ஆத்திரத்தில் அவரது விழிகளும் பளபளத்தன.

''அதற்கு நீ எதற்கு? நானே நேரடியாக பணம் கட்டி விளம்பரம் போட்டு 'கமிஷனை' வாங்கிக் கொள்வேனே! உன்னிடம் ஏன் வரவேண்டும்? இங்கே ஓர் இடத்தை எடுத்து, பத்தாயிரம் ரூபாய் வாடகை கொடுத்து, விளம்பர ஏஜென்சி எதற்கு நடத்திக் கொண்டிருக்கிறாய்? எல்லாம் தண்டம்! முழு சென்னைப் பதிப்புக்கு, எவ்வளவு காசு ஆகும்? எனக்கு வேண்டியது, அடையாறு பகுதி மட்டும்தான்! அதற்குப் போய், அவ்வளவு பணம் கட்டுவார்களா? தண்டமில்லையா? விளம்பர ஏஜென்சி! என் சம்பாத்தியத்துக்கு உதவி செய்ய வேண்டியவன்! நீயே வீண்செலவுக்கு வழி சொல்கிறாயே?''

''அதுதான் பிட்நோட்டீஸ் அடித்து, அங்கங்கே ஆள் வைத்து கொடுக்கச் சொல்லலாம் என்று...''

''ஓகோ! அப்படி உன் ஆள் முரளி உளறியது, நீ சொல்லித்தானா? ஐயா

கேள், அந்த பிட் நோட்டீசை குழந்தை கையில் கொடுத்தானா, கிழவன் கையில் கொடுத்தானா? படித்தவனிடம் கொடுத்தானா, பாமரனிடம் கொடுத்தானா? இதெல்லாம் எப்படித் தெரியும்? நல்ல பத்திரிகை படிக்கிறவன் கையில் என் விளம்பரம் இருக்கவேண்டும். ஆனால், அதற்காக உரிய தொகைக்குமேல் நான் ஒரு பைசாகூட வீணாக்க மாட்டேன். உன்னால் முடியுமா, இல்லையா? அதை மட்டும் சொல்லு...''

மைத்ரேயனைவிட வயதில் பெரியவர்தான்! ஆனால், அவரை, அவருடைய அலுவலகத்துக்கே வந்து ஒருமையில் அழைப்பது என்றால், ஒன்று அதிக நாள் பழக்கமோ, உறவோ இருக்க வேண்டும்! அல்லது, ரொம்பப் பெரிய ஆளாயிருப்பாரோ?

இந்த எண்ணம் சற்று தயக்கத்தை ஏற்படுத்திய போதும் மைத்ரேயன் வாய்திறவாது நிற்கக் கண்டு அபிராமி இடைபுகுந்தாள்.

''முடியாமல் என்ன சார்? தாராளமாக செய்யலாம்!'' என்றாள் தெளிவாக.

அதன்பிறகே அவள் ஒருத்தி அங்கே இருப்பதையே உணர்ந்தது போல, இருவரும் அவளிடம் பார்வையைத் திருப்பினார்கள்.

ஆத்திரத்துடன் ஏதோ சொல்ல வாயைத் திறந்த மைத்ரேயன், சட்டென்று வாயை மூடிக்கொண்டு யோசனையோடு அபிராமியைப் பார்த்தார்.

பரந்தாமன் நன்றாகத் திரும்பி, அவளை ஏறஇறங்க பார்த்து விட்டு புருவத்தை உயர்த்தினார்.

''இந்த அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு இல்லாத மூளை, சின்னப் பெண் உனக்கு இருக்கிறது என்கிறாயாக்கும்? அதையும் பார்க்கலாம். எப்படி செய்யலாம்? சொல்லு'' என்று அலட்சியமாகவே வினவினார்.

''விஷயம் ரொம்ப எளிது என்பதாலேயே பெரியவர்கள் கவனத்துக்கு வராமல் விடுபட்டிருக்கும் என்பது என் கருத்து சார்'' என்று மற்றவர்களுக்காக – முக்கியமாக மைத்ரேயனுக்காக வக்காலத்து வாங்கிவிட்டு, அபிராமி விஷயத்துக்கு வந்தாள்.

''சார், உங்கள் விளம்பரம், படித்தவர்கள் கையில் இருக்க வேண்டும் என்பதுதானே முக்கியம்? அது, பத்திரிகை விளம்பரமாக இருந்தால் என்ன? துண்டுப் பிரசுரமாக போய்ச் சேர்ந்தால் என்ன?''

''ஓகோ! ஒவ்வொரு வீடாகப் போய், நீ படித்தவனா என்று கேட்டு, கையில் கொடுக்கப் போகிறாயா?'' என்று அசட்டையாக கேட்டவரிடம் ''அப்படியில்லை சார்...'' என்றாள் அபிராமி.

புருவச் சுருக்கத்துடன் பரந்தாமன் திரும்பவும் ''உங்கள் விளம்பரம் படித்தவர்களுக்குப் போய்ச் சேர, இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, இப்போதெல்லாம் அந்தந்தப் பகுதி மக்களுக்காக மட்டும் என்று தனியாகப் பத்திரிகை வருகிறது...'' என்று அவள் முடிக்குமுன் உச்சுக் கொட்டினார் அவர்.

''பாரம்மா... என் விளம்பரம், நல்ல வெள்ளை பேப்பரில் நாலு வண்ணத்தில் வரவேண்டும். நீ சொல்கிற வழி சரிப்படாது. உருப்படியாக எதையும் சொல்ல முடியாது என்றால் வாயை மூடிக்கொண்டு சும்மாயிருக்க வேண்டும்'' என்றார் எரிச்சலாக.

அவரது எரிச்சலைக் கவனியாதது போல, அபிராமி தொடர்ந்தாள்.

''அடுத்தது, நல்ல வெள்ளைக் காகிதத்தில் கண்ணைக் கவரும் வண்ணம் விளம்பரத்தை அச்சிட்டு, உங்களுக்கு எந்தப் பத்திரிகை வேண்டுமோ, அந்தப் பத்திரிகையை உங்களுக்கு வேண்டிய பகுதியில் விநியோகம் செய்யும் உரிமை பெற்றவரிடம் கட்டணத்தோடு கொடுத்து, பத்திரிகையினுள் வைத்து போடச் சொல்ல வேண்டியது!''

''அந்தமாதிரி சொருகல்களை எத்தனை பேர் என்னவென்று பாராமலே தூர எறிந்துவிடுகிறார்கள், தெரியுமா?''

''பத்திரிகையில் பிரசுரமாகும் விளம்பரங்களை மட்டும் எல்லோரும் படிக்கிறார்கள் என்றா சொல்கிறீர்கள்? அந்தந்த துறையைச் சார்ந்தவர்கள், அவர்களுக்குத் தேவையானதை பார்ப்பார்கள். அடுத்து கண்ணைக் கவரும்படி இருப்பது எதுவானாலும் பார்ப்பார்கள். அப்படி ஈர்க்கும் விதமாக விளம்பரத்தை அமைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்று முடித்தாள் அபிராமி.

ஒரு கணம் அவளை கூர்ந்து நோக்கிவிட்டு, ''இல்லை. உன் பொறுப்பு! அதாவது, இந்த நிறுவனத்தின் பொறுப்பு. வேறு எதற்காக விளம்பர நிறுவனம் என்று பெயரை வைத்துக்கொண்டு இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று அதட்டினார் பரந்தாமன்.

அவரது பேச்சின் பொருள் புரியவும் வாயெல்லாம் பல்லாக, ''நிச்சயமாக சார்... அதுபற்றி நீங்கள் குறைப்படவே தேவையிராது!'' என்று அவசரமாகக் கூறினார் மைத்ரேயன்.

''அதை அப்புறமாக நான் சொல்ல வேண்டும்'' என்று அமர்த்தலாக சொன்ன பரந்தாமன், மீண்டும் ஒரு தரம் அபிராமியை ஏற இறங்க பார்த்தார்.

''உன்னை நான் இதற்குமுன் இங்கே பார்த்ததே இல்லையே. யார் நீ?'' என்று வினவினார்.

என்னவென்று பதில் சொல்வது?

முகம் வாட, அவள் தொடங்குமுன் அவளை முந்திக்கொண்டு, ''புதிதாக பயிற்சியாளராக இன்றுதான் சேர்ந்தி ருக்கிறாள் சார். ரொம்ப கெட்டிக்காரி!'' என்று மைத்ரேயன் வழிந்தார்.

மைத்ரேயன் பேச்சின் பொருளை வியப்பும் மகிழ்ச்சியுமாக அபிராமி உணரும்போதே, ''ஓ! பயிற்சியா? கொஞ்சம் கவனத்துடனே இரும்மா. இல்லாவிட்டால், இவன் சக்கையாக பிழிந்துவிடுவான்'' என்று எச்சரித்தார் பரந்தாமன்.

அபிராமி திகைத்தாள். உடனே திகைப்பு மாற, முறுவலித்தாள். எவ்வளவு வேலை கொடுத்தால் என்ன? உழைப்புக்கு அஞ்சுகிறவள் அவள் இல்லையே!

அபிராமி ரேயனில் பயிற்சியாளராக சேர்ந்து அன்றோடு ஒரு மாதம் நிறைவுற்றது.

அதற்குள், பரந்தாமன் முதல் நாளன்று எவ்வளவு சரியாக எச்சரித்திருக்கிறார் என்று அபிராமி பலமுறை எண்ணிக்கொள்ள நேர்ந்தது. அந்தளவு மைத்ரேயன் அவளை விடாமல் விரட்டி விரட்டி வேலை வாங்கினார்!

முதல் நாளன்று எண்ணிக்கொண்டது போல அவள் உழைப்பை சுமையாகக் கருதவும் இல்லை! உண்மையான உழைப்பு ஒருநாளும் வீணாகாது. இன்றில்லாவிட்டாலும் என்றேனும் பலன் தரும் என்ற நம்பிக்கை இருந்தது.

அதோடு, எவ்வளவு வேலை செய்தாலும் அது அவளுக்குப் பயிற்சிதானே? அந்தத் துறையில் அவளுக்குக் கல்வி என்பதோடு, 'சித்திரமும் கைப்பழக்க'மாக செய்யச் செய்யத்தானே திறமை வளரும்?

சமையலறை சாமான்களைத் தயாரிக்கும் 'சுலபம்' நிறுவனத்தின் தயாரிப்பாளர் அந்த பரந்தாமன். கத்தியிலிருந்து கிரைண்டர் வரை, அவரது தயாரிப்புகளில் பல பொருட்கள் அடங்கும். சுகாதாரம், வசதி பற்றி விஞ்ஞானபூர்வமான விளக்கங்களுடன், தன் பொருட்களை விளம்பரப் படுத்துகிறவர். அதற்காகவே, தன் விளம்பரங்களை படித்தவர்கள் பார்க்க வேண்டும் என்பார். அங்கங்கே நேர்முக நிகழ்ச்சிகளின் மூலமாகவும் விளம்பரப்படுத்துவார்.

தேங்காய்த் துருவி, சப்பாத்திக் கட்டை, காய் வெட்டும் மணை, மிக்ஸி, வெட்கி ரைண்டர் என்று அவர் தயாரிப்பில் பல பொருட்கள் இருந்ததால் ரேயன் நிறுவனத் துக்கு அவர் மூலம் தொடர்ந்து விளம்பரங்கள் வந்துகொண்டிருந்தன. ஆனால், பல்வேறு பொருட்கள் என்பதால் விளம்பரங்களையும் பலவிதமாக தயாரிக்க வேண்டியிருந்தது. அதுவும், அவருக்குத் திருப்தி ஏற்படும்விதமாக.

மைத்ரேயனுக்கு வேறு வாடிக்கையா ளர்களும் இருந்தனர். சொல்லப்போனால், ஒரு நடுத்தரமான விளம்பர நிறுவனத்துக்கு சற்று அதிகப்படியான வருமானம்தான். அதற்குச் சரியான வேலையும்தான்! ஆனால், இவ்வளவு வருமானம் வந்தபோதும் கூடுதலாக நாலு பேரை வேலையில் சேர்த்துக் கொள்ள மைத்ரேயன் விரும்பவில்லை. இருப்பவர்களையே வைத்து சமாளித்தார். மிஞ்சி மிஞ்சி ஆளுக்கு இரண்டு கப் டீ வாங்கிக் கொடுத்தார். அந்த டீ கூட அபிராமிக்கு கிடையாது. அவளுக்குத் தேவையென் றால் சொந்தச் செலவில்தான் வாங்கி குடிக்க வேண்டும். அதுபற்றி, முதல் நாள் பரந்தாமன் சென்றதும் அபிராமியைக் கூப்பிட்டு மைத்ரேயன் சொல்லிவிட்டார்.

''பாரம்மா அபிராமி. இந்த நிறுவனத்தில் நிலையான வேலை பார்ப்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கவே நான் திணறிக்கொண்டி ருக்கிறேன். வேலையில் 'ஆனா, ஆவன்னா' தெரியாத உனக்கு ஊதியம் கொடுப்பது, என்னால் முடியாத காரியம்! ஓர் ஆறு மாதம் நீ இங்கே தொழிலை படித்துக்கொள். நன்றாகவே கற்றுக் கொள்! அதற்கு வேண்டிய வாய்ப்புகளை தருகிறேன். அதற்கு மேல் ஒரு பைசாகூட எதிர்பார்க்காதே. தரமாட்டேன். என்னால் தரமுடியாது'' என்று கறாராகக் கூறினார்.

இங்கே வேலை கற்றுக்கொள்ளும்வரை, கையிருப்பு தாங்குமா என்று அபிராமி மனதுள் கணக்கிட்டுப் பார்த்தாள். கல்லூரியில் படிக்கும்போது அவள் செய்த கைவினைப் பொருட்கள், வரைந்த படங்கள் எல்லாம் விற்றுச் சேர்த்த பணம், அவளிடம் ஓரளவு இருந்தது. சிக்கனமாக செலவு செய்து வந்தால், ஏழெட்டு மாதங்களுக்கே கட்டிவரும். அதற்குமேல் தாங்காது!

பணம் மிகவும் தேவை என்றாலும், அதை விடவும் அவளுக்கு பயிற்சி முக்கியம் அல்லவா? எதிர்கால வளர்ச்சிக்குரிய மூலதனம் அதுதானே!

அவளது யோசனையை தவறாக எண்ணி, ''முதலில் வேலை கற்றுக் கொள். நீ செய்கிற விதத்தைப் பார்த்து, ஆறு மாத பயிற்சிக்குப் பிறகு நல்ல சம்பளத்துடன் சேர்த்துக் கொள்கிறேன். என்னிடம் பயின்றாய் என்று தெரிந்தால், பெரிய பெரிய விளம்பர நிறுவனங்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு உன்னை வேலைக்கு அழைப்பார்கள், தெரியுமா? நீயே ஒரு கம்பெனி தொடங்கி 'ஓகோ' என்று வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!'' என்று குதிரைக்கு கேரட்டாய் பலவிதமாக ஆசை காட்டினார் மைத்ரேயன்.

யார் வார்த்தையாக இருந்தால் என்ன? நல்லதை, நமக்கு வேண்டியதை கேட்கும்போது நன்றாகத்தானே இருக்கிறது?

ஆரூடம் போல மைத்ரேயன் சொன்ன வார்த்தைகள் மகிழ்ச்சி தர... அபிராமி சம்மதமாகத் தலையாட்டினாள்.

அன்றிலிருந்து அவளது பயிற்சிக் காலம் தொடங்கியது. சூறாவளிப் பயிற்சி.

விளம்பரத் தொழிலைப் பற்றி மட்டுமின்றி, ஒருசில மனித இயல்புகளைப் பற்றியும் அறிந்து கொண்டாள். அப்போதுதான் தாய் – தந்தை, உற்றார் உறவினரின் உதவியோ, அரவணைப்போ இல்லாதிருந்தும்கூட, அநாதை இல்லத்தில் எவ்வளவு பாதுகாப் பாக வளர்ந்திருக்கிறோம் என்பதையும் புரிந்துகொண்டாள்.

முதலில், மைத்ரேயன்!

அவரது தோற்றத்திலிருந்த தூய, பெரிய மனிதத்தன்மைக்கும் அந்தத் தோற்றத்துக்குள் இருந்த அவரது கறுப்பு மனதுக்கும் எந்தவித ஒற்றுமையும் கிடையாது என்பதை வெகுவிரைவில் அபிராமி அறிய நேர்ந்தது.

சரியான, வடிகட்டின கஞ்சன். காசு விஷயத்தில் அவர் நாகரிகம் பார்ப்பதில்லை என்பது அவள் முதலில் அறிந்துகொண்ட விஷயம்!

வந்த முதல் நாளே, மாலை மூன்று மணிக்கு அலுவலகத்திலிருந்த எல்லாருக்கும் ஒரு சிறுவன் டீ கொணர்ந்து கொடுத்தான். அவளிடமும் டீ கப்பை நீட்ட அபிராமி சற்றே தயங்கினாள்.

''எடுத்துக்கொள் அபிராமி. டீ நன்றாயிருக்கும், தெம்பாகவும் இருக்கும்!'' என்று அவளை ஊக்கியது மைத்ரேயன்தான்.

''உள்ளே வந்து பணம் வாங்கிக்கொள்'' எனவும் அவரோடு உள்ளே சென்ற பையன், திரும்பிச் செல்கையில் அபிராமியிடம் வந்து நின்றான்.

''அக்கா, உங்க டீக்கு உங்ககிட்டே தனியா காசு வாங்கிக்கோனு சார் சொன்னார்!'' என்றான்.

இரண்டே ரூபாய்தான்! பைசா கணக்கிட்டு செலவு செய்யும் அவளைப் பொறுத்தவரைகூட 'பூ' என்று ஊதமுடியாதே தவிர, இது மிகச்சிறிய தொகைதான்!

அவளுக்கே சிறுதொகை எனும்போது, மைத்ரேய னுக்கு இது தூசு! அந்த தூசைக்கூட, அவளுக்காக செலவு செய்ய அவர் தயாரில்லை! அதுவும், அவ்வளவு நேரம் நிமிர முடியாமல் வேலை வாங்கிவிட்டு!

காபி, டீ போன்ற ஊக்க பானங்கள், அவள் வளர்ந்த இடத்தாலும் விதத்தாலும் அவளுக்கு சற்றும் பழக்கமற்றவை. எனவே, அவை தேவை என்பதும் கிடையாது. அவர் சொன்னாரே என்றுதானே...

உறுத்தலோடு பையைத் திறந்து காசை எடுத்து கொடுக்கும் போதே, பண விஷயத் தில் மைத்ரேயன் எப்படி என்று அவளுக்குப் புரிந்து போயிற்று!

அது புரிந்ததாலேயே, மற்ற அலுவலர்களின் முகத்திலிருந்த சோர்வின் காரணத்தையும் கிட்டத் தட்ட சரியாகவே ஊகித்தறிய முடிந்தது.

கிடைக்கிற வருமானத்துக்கு, மிக அதிகப்படியான உழைப்பாக இருக்க வேண்டும்!

மைத்ரேயன், அப்படி வேலை வாங்கக்கூடியவர் என்பது விரைவிலேயே அபிராமிக்கு தெரியவந்தது. எல்லோருக்குமே விழி பிதுங்கிக் கொண்டிருந்தது!

வைப்பு நிதி, சேம நிதி என்றெல்லாம் பிற்பாடு நிறைய கொடுக்க நேரும் என்பதால், நிலையான பணியாளர்களாக அதிகம் பேரை மைத்ரேயன் வைத்துக் கொள்ளவில்லை!

அலுவலக கணக்கு வழக்கு பார்க்க, முதியவர் வாகீசர். கம்ப்யூட்டரில் வடிவமைக்க, அந்த உணர்ச்சியற்ற முகத்துப் பெண் சாந்தி. மைத்ரேயனே அவளை பாதி நேரம் 'ஏ... மரக்கட்டை' என்றுதான் கூப்பிடுவார். வெளியே சென்று வாடிக்கையாளர் பணி செய்யும்

முரளி. பத்திரிகை, டி.வி. என்று 'மீடியா' பார்க்க ஒருவர். ஆக, நாலு பேருக்குத்தான் வேலை நிரந்தரம் ஆகியிருந்தது.

மற்றபடி, விளம்பர வாசகங்களை எழுதும் காப்பி ரைட்டர், விளம்பரத்தை வடிவமைக்கும் விஷுவலைசர், ஆர்ட்டிஸ்ட் என்று யாரும் அந்த அலுவலகத்தில் கிடையாது. தேவைப்படும்போது அததை மட்டும் தனியே செய்கிறவர்களிடம் கொடுத்து வாங்கிக் கொள்வார். மொழி பெயர்ப்புக்கும் வெளியாட்கள்தான்.

''செய்கிற வேலைக்கு மட்டும்தானே கூலி! சும்மா இருக்கிற நேரத்துக்கும் சேர்த்து, இங்கே இருப்பவர்களுக்கு கொடுப்பது போல, அவர்களுக்கும் தண்டச் சம்பளம் கொடுக்க வேண்டாமில்லையா?'' என்று அபிராமியிடம் ஒருநாள் விளக்கம் வேறு கொடுத்தார்.

தண்டச் சம்பளமா? உணவு இடைவேளைகூட இல்லாமல் வேலை செய்யும் மற்ற அலுவலர்களின் நினைவு வர, அபிராமிக்கு நெஞ்சு கொதித்தது.

இவரும்தானே பார்த்துக் கொண்டிருக்கிறார். பார்த்துக் கொண்டே இன்னும் அதிக வேலை கொடுப்பதும் இது சொத்தை, அது சொள்ளை என்று, செய்த வேலையில் சும்மாவேனும் ஏதாவது சொட்டை சொல்லும் வக்கிரமும் அபிராமி அறியாததா? அப்போதெல்லாம் அவளுக்கு ஆத்திரமாக வரும்!

ஆனால், ஆத்திரப்பட்டு என்ன பயன்? அவளே, காற்றடிக்கிற திசையில் பறக்கும் சருகின் நிலையில் இருப்பவள். நாளையே, இந்த அலுவலகத்துக்குள் நுழையாதே என்று மைத்ரேயன் சொன்னால், வெளியே நிற்கவேண்டியவள்தானே!

எனவே, என்ன கோபம் வந்தாலும் உள்ளேயே அடக்கிக் கொள்வாள். இன்றளவும்கூட, அபிராமி அப்படித்தான் இருந்து வந்தாள். இன்றுதான், அந்தப் பெண் கூறிய அத்தனையும் அவதூறு, முழுப் பொய் என்பதால், அவளால் சீற்றத்தை அடக்க முடியவில்லை!

ஆனால், அடக்கியாக வேண்டும். குறைந்தபட்சமாக திருப்பிக் கொடுக்கச் சக்தி கிட்டும்வரையேனும் அவள் இதையெல்லாம் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணர்ந்தபோது, அபிராமிக்கு இன்னமும் கஷ்டமாகத்தான் இருந்தது.

அந்த நிலை, ஒரு நாள் வந்தே தீரவேண்டும்!

3

ஆசிரமத்து அன்னைகூட, இதுபற்றி சொல்லியிருக்கிறார்.

''சிறுமை கண்டு பொங்குவது நல்ல தன்மைதான். தனக்கோ மற்றவர்களுக்கோ அநியாயம் நடக்கும்போது ஆத்திரம் வருவது இயல்புதான். ஆனால்,
நிலைமை அறிந்துதான் பொங்க வேண்டும். இடம், பொருள், ஏவல் அறிந்து செய்ய வேண்டும். அநியாயத்தைக்கண்டு குமுறுகிற குணம் உனக்கு இருப்பது தெரியும். ஆனால்,

உன்னால் எதுவும் செய்ய முடியாதபோது, செய்கையற்ற அந்தக் கோபத்தை விட்டுவிட பழகிக்கொள். இல்லாவிட்டால், என்றேனும் ஒரு நாள் அந்தக் கோபம் உன்னை வென்றுவிடக்கூடும்.'' என்று பொதுவாக எல்லோரையும் எச்சரிப்பவர், இல்லத்தை விட்டு கிளம்புமுன் அவளை தனியே கூப்பிட்டும் சொன்னார்.

இதுபோன்ற தருணங்களை அப்போதே அறிந்திருப்பார் போலும். தீர்க்கதரிசினி. அவ்வளவு வேலையிலும், அத்தனை பேருக்கு இடையில் அவளைப் பற்றி அன்னை இவ்வளவு அறிந்து வைத்திருக்கிறாரே என்று ஆச்சரியம் அபிராமிக்கு. நெகிழ்ச்சியும்கூட.

அடிக்கடி அன்னையின் அறிவுரைகளை எண்ணி, அபிராமி தன்னை அடக்கிக்கொள்வது வழக்கம். இருக்கட்டும், அவளுக்கும் ஒரு காலம் வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றே பொறுத்திருந்தாள்.

அதோடு, கையாலாகாத விஷயத்துக்கெல்லாம் கோபப்பட்டு, உள்ள தையும் கெடுத்துக்கொண்டால், அப்புறம் வெற்றி இலக்கை எட்டுவது எப்படி? அது, அவளுக்கு மூச்சுவிடுவதைவிட முக்கியமாயிற்றே.

சும்மா என்றால், இப்போது 'இப்படி வெளியாட்களிடம் கொடுத்து அலைவதைவிட, இந்த வேலைகளுக்கும் நீங்களே யாரையேனும் நியமிக்கலாமே சார்?' என்று, இந்தக் கருத்தைக்கூட அவள் வெளியிட்டிருக்கமாட்டாள்.

ஆனால், வெகுவிரைவிலேயே அபிராமியின் புத்திசாலித் தனத்தையும் ஆர்வத்தையும் புரிந்துகொண்ட மைத்ரேயன், விளம்பரங்களின் அடிப்படை தயாரிப்பில், கிட்டத்தட்ட முழுச்சுமையையும் அவள் தலையிலேயே ஏற்றினார். ஓசியில் நிறைய வேலை வாங்கிவிட்ட எக்களிப்பு அவருக்கு.

ஆனால், தன் எதிர்காலக் கனவுகளுக்கு அஸ்திவாரம் போடுவதாக நினைத்து அவள் அவற்றை செய்தாள்.

அதோடு, பரந்தாமன் அவளிடம் இலகுவாக பேசுகிறார் என்பதால், அவரது விளம்பரம் பற்றிய முதல் தேவையறிதலில் இருந்து, பணம் வாங்கி வருவதுவரை பெரும்பாலும் அபிராமியையே மைத்ரேயன் அனுப்பிவைத்தார். அப்படி சென்று வரும் போது, வழியில் காப்பிரைட்டரிடமும் ஆர்ட்டிஸ்டிடமும் எதையாவது கொடுத்துவிட்டோ அல்லது தயாரானதை வாங்கி வருமாறோ ஏவினார்.

இப்படி சென்று வரும்போது 'ஜல்தி, ஜல்தி' என்றாரே தவிர, 'இந்தா. ஆட்டோவுக்கு வைத்துக் கொள்' என்று ஒரு பைசா கொடுக்க மாட்டார். ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள இவ்வளவுகூட செலவாகாதா என்பது போல பேசுவார். சின்னமீனை போட்டால்தானே, பெரிய மீனை பிடிக்க முடியும்? இதற்கெல்லாம் பணம் கேட்கக்கூடாது என்று சொல்லாமல் சொன்னார்.

மைத்ரேயன் சொன்ன ஆறு மாதங்களுக்கு கையில் இருக்கும் பணம் தாக்குப்பிடிக்குமா என்ற கவலையில், செலவும் அலைச்சலும் குறையாதா என்ற நப்பாசையில்தான் அவள் கேட்டது.

அதையும், பயிற்சி பெறுகிறவள் என்கிற முறையில், விவரம் கேட்கிற பாவனையில்தான் கேட்டாள். அதற்குக் கிடைத்த பதிலால், அவளது குமுறல் அதிகமாயிற்றே தவிர, வேறு லாபம் ஏதும் விளையவில்லை.

சமயம் பார்த்து, மீடியா பார்ப்பவர் உடம்பு சரியில்லாது ஒரு வாரம் லீவு போட்டுவிட, மைத்ரேயன் கொதிநிலைக்கே போய்விட்டார் எனலாம்.

மீடியா பற்றி ஓரளவு தெரிந்திருந்த சாந்தியை சாட்டை எடுக்காத குறையாக விரட்டினார். அன்றாட வேலையோடு இதையும் சேர்த்து முடிக்க முடியாமல் அவள் திணற, ''மட்டி... மரமண்டை. இதைக்கூட செய்ய முடியாமல் என்னடீ? எதற்கும் லாயக்கில்லாத மரக்கட்டை'' என்று கண்டபடி ஏசியவர், சட்டென அவள் தலையில் ஓங்கிக் குட்டி விட்டார். விதிர்விதிர்த்துப் போயிற்று அபிராமிக்கு.

கண்ணும் முகமும் கலங்கிச் சிவந்தபோதும் சாந்தி ஒன்றும் சொல்லவில்லை. மீண்டும் அவர் கை ஓங்கியபோது தடுக்கவும் முயற்சிக்க வில்லை. தலைகுனிந்து அவள் அசையாமல் நிற்க, மற்றவர்களும் எங்கோ திருப்பிக் கொள்வதை கண்டு அபிராமி மேலும் திகைத்தாள்.

இங்கே, ஏதோ தப்பு இருக்கிறது.

கண்ணெதிரே, இன்னொருத்தி அவமானப்படுத்தப்படுவதை தாங்க முடியாமல் மனம் கொதித்தபோதும் அன்னையின் அறிவுரையை நினைவில் கொண்டு அமைதியாக, ''வேண்டாம் சார். பாவம்... அவர்களுக்கு உடம்பு சரியில்லை. விடுங்கள்... அதை நான் செய்கிறேன்'' என்றாள்.

எவ்வளவு பெரிய இக்கட்டில் மாட்டிக்கொள்ள முன்வந்திருக்கிறாள் என்று அப்போது அவளுக்கு கொஞ்சமும் தெரியாது.

மைத்ரேயன் அலுவலகத்தில், அவரிடம் ஒன்றை செய்யவேண்டாம் என்று யாரும் சொல்லியதில்லை போலும். மற்றவர்கள் சிலைகளாக நிலைத்துவிட, மைத்ரேயன் ஆத்திரத்துடன் அபிராமி பக்கம் திரும்பினார்.

''என்னது? நீ செய்யப் போகிறாயா? என் நிறுவனத்தை இழுத்துமூடி விட கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாயா? மீடியா வேலை, உனக்கு என்ன தெரியும்? என்.ஆர். எஸ். என்றால் என்னவென்று தெரியுமா? அல்லது, சாராயக் கடைக்கு போய் 'மில்லி ரேட்' பார்த்து வருவாயா?'' என்று எகத்தாளமாகக் கேட்டார்.

அதற்குள் அபிராமியும் கொஞ்சம் சுதாரித்துக் கொண்டிருந்தாள். இந்த மனிதன் பாம்பாகவே இருந்தாலும், இவனை பகைத்துக் கொள்வது நல்லதல்ல. அப்புறம், இவரும் வேலை தரமாட்டார். இவர் தப்பும் தவறுமாக எழுதி வைத்தால், மற்ற இடங்களிலும் உள்ளே விட மாட்டார்கள். இந்த மாதிரி காரணங்களினால் தான் மற்ற அலுவலர்கள் பேசாதிருந்தார்களோ என்னவோ. வேலையென்ன, நம் நாட்டில் தெருவிலா கிடக்கிறது, இஷ்டப்படி பொறுக்கிக் கொள்ள?

நூறு கோடியை தாண்டி விட்ட மக்கள்தொகை கொண்ட இந்த நாட்டில், ஓட்டலில் மேஜை துடைக்கிற வேலைக்குக்கூடபோட்டி தானே!

அவசரமாக யோசித்து, ''என்ன சார் இப்படி சொல்கிறீர்கள்? நிறுவனத்தை மூடி விட்டால், இப்படியொரு சிறந்த பயிற்சிக்கு நான் எங்கே போவது? சாந்தி சிஸ்டருக்கு உடம்பு சரியில்லை என்று உதவிசெய்ய நினைத்தேன்...'' என்று இழுத்தாள்.

மைத்ரேயனின் முகக் கடுப்பு அப்படியே இருக்கவும், ''என்.ஆர்.எஸ்., மில்லி ரேட் பற்றியெல்லாம் விரல்நுனியில் வைத்திருப்பது என் பார்களே... அப்படி தெரியாவிட்டாலும், ஓரளவு படித்து வைத்திருக்கிறேன் சார். என். ஆர்.எஸ். என்றால் 'நேஷனல் ரீடர்ஷிப் சர்வே'! மில்லிரேட், ஒரு பத்திரிகையின் விளம்பர விகிதம். ஆயிரம் காப்பிக்கு, ஒரு காலம் சென்டிமீட்டருக்கு எவ்வளவு என்று. உங்கள் திற மையான வழிகாட்டல் கொஞ்சம் இருந்தால், பிரமாதமாக செய்ய முடியும் சார்!'' என்று ஐஸ் வைத்தாள்.

அப்போதும் ''பயிற்சி என்கிற பெயரில், சும்மா உண்பதும் வம்பு பேசுவதுமாக இருக்கிறாய் என்று தெரிகிறது. மற்றபடி, இந்த வேலையை எப்போது செய்வதாக உத்தேசம்?'' என்று இகழ்ச்சியாகவே கேட்டார் மைத்ரேயன்.

என்ன அநியாயம்! உட்கார்ந்து சாப்பிட நேரமில்லாமல் இட்லியோடு கொண்டுவரும் சட்னி ஊசிப்போகிறதே என்று மிளகாய்ப்பொடிக்கு மாறிக்கொண்டவள் அபிராமி. பசி, பட்டினி பாராமல் உழைப்பவளை என்ன வார்த்தை சொல்கிறான் இந்த ஆள்! வயதுக்குரிய மரியாதைகூட, விட்டுப் போய்விடும் போலிருக்கிறதே.

சிரமப்பட்டு மனதை அடக்கிக்கொண்டு, ''அலுவலக நேரத்தில் எனக்கு அவகாசம் கிடையாது என்று உங்களுக்கே தெரியும். மாலையில் இருந்து, இந்த வேலையை முடித்துத்தருகிறேன் சார்.'' என்றாள் பொறுமையாக.

உடனே, ஏதேனும் தப்பாகச் சொல்லிவிட்டோமோ என்று குழப்பம் உண்டாயிற்று. அந்த அளவுக்கு ஒரு மாற்றம். மூச்சு விடும் அசைவுகூட மற்றவர்களிடம் நின்றுபோன மாதிரி ஓர் எண்ணம். ஏன்? என்னாயிற்று? அல்லது, அப்படித் தோன்றியது வெறும் கற்பனையா?

சற்றுமுன் போலவே, எல்லோரும் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கவும் தனக்குத் தோன்றியது கற்பனையாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவுகட்டி, ''மெய்யாகத்தான் சொல்கிறேன் சார். என்னால் முடியும். இப்போது ஆர்ட்டிஸ்டிடம் ஒரு மெட்டீரியல் வாங்கிவர வேண்டும். அதற்கு நான் போகாமல், ஆபீஸ் பையனை அனுப்பிவிடலாம். உங்களுக்கும் கொஞ்சம் ஓய்வு கிடைக் குமானால், கொஞ்சம் கோடி காட்டினால்கூட சமாளித்து விடுவேன் சார்'' என்று நயந்தே பேசினாள் அபிராமி.

அப்போதைக்கு சாந்தியைக் காப்பாற்றுவதுதான் அவளது நோக்கம். பலவீனமான பெண், மேலும் கஷ்டப்படக் கூடாது என்று நினைத்தாள். அதற்காக பேசிக் கொண்டிருக்கும்போதே, இந்த மீடியா பற்றி நன்றாக அறிந்து கொள்வது நல்லதுதானே என்றும் தோன்றிவிட்டது.

ஒரு விளம்பர நிறுவனத்தில், விளம்பரத்தை தயாரிப்பது பாதி வேலை என்றால், அந்த விளம்பரம் எந்தெந்த பத்திரிகைகளில் அல்லது டி.வி. சேனலில் எப்படியெப்படி வெளியாக வேண்டும் என்பது அடுத்த பாதி வேலை யாகும். இரண்டும் தெரிந்தால்தானே, அவள் நினைத்தபடி இந்தத் தொழிலில் முன்னேற முடியும்.

முதலில், பெரிய வேலைக்குரிய தகுதி பெறவேண்டும். தகுதிக்குத் தகுந்த ஊதியத்துடன் பதவி பெறவேண்டும். அதில் சேமித்து, தொழில் தொடங்கி, உயர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அடிப்படை, இந்தத் தகுதிதானே. அந்த வகையில், இது கடவுளே கொடுத்த வாய்ப்பாகப்பட்டது. முழுமையாக பயன்படுத்திக் கொண்டாள். தூக்கத்தில்கூட

ஏபிசி, என்.ஆர்.எஸ். ஃபிகர்களை பேத்துகிற அளவுக்கு ஆர்வத்துடன் அவள் உழைத்தது, மைத்ரேயனுக்கும் வசதியாகத்தான் இருந்தது. சும்மா கிடைத்த உழைப்புதானே? தாராளமாக பயன்படுத்திக் கொண்டார்.

ஆறுமாத பயிற்சிக்குப் பின்னர் 'ரேயனி'ல் வேலை கிடைக்கும் என்ற எண்ணத்தில் அபிராமி இவ்வளவு உழைக்கிறாள் என்பது மைத்ரேயன் கருத்து. செய்கிறவரை செய்யட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணம். அப்பன், ஆயி இல்லாதவள். எங்கே போய்விடுவாள்?

சில மாதங்கள் இப்படியே கழிந்தன.

குறுகிய கால விளம்பரங்கள் நாலைந்து கிடைக்கவும் 'ரேயனி'ன் அலுவலர்கள் பல நாட்கள், இரவுபகல் என்றில்லாமல் உழைக்கும்படி ஆயிற்று. அதிசயத்திலும் அதிசயமாக, மற்றவர்களோடு அபிராமி குடித்த டீக்கு, அவளிடம் பணம் வாங்க டீக்கடைப் பையன் வரவில்லை!

அவளே கூப்பிட்டுக் கொடுத்தபோது, ''சார் தந்துட்டாங்க அக்கா'' என்று கூறிச் சென்றுவிட்டான்.

ஆச்சரியமாக அபிராமி நோக்க, ''நீ செய்யும் பணி என் கண்ணில் பட்டிருக்கிறது. அதற்கான பரிசு என்று வைத்துக்கொள்'' என்று அமர்த்தலாக உரைத்தார் மைத்ரேயன்.

அப்பப்பா. பத்து பவுன் சங்கிலியை கொடுக்கிற வள்ளல் கூட இப்படி பெருமையடித்துக் கொள்ளமாட்டான். அதோடு, அவளது வேலைக்கு பரிசு கொடுத்துக் கட்டுமா இவருக்கு? மட்டான வேலையா செய்கிறாள்? மற்ற அலுவலர்களுக்கும் அதே கருத்துதான் என்று காட்டுவது போல, காது கேளாத பாவனையில் அவரவர் பணியில் ஈடுபட்டிருந்தனர். மைத்ரேயனைப் போன்ற அகங்காரம் கொண்டவர்களுக்கு அது 'மவுனம் சம்மதமாக'வும் தோன்றலாம்.

அப்படித்தான் எண்ணினார் என்பதை அவரது பெருமித பார்வை காட்ட, ''எதற்கு சார் உங்களுக்கு வீண்செலவு? ரெண்டே ரூபாய். நானே கொடுத்திருக்க மாட்டேனா? நீங்கள் அளிக்கும் பயிற்சியே பெரிது. அதற்குமேல் இது எதற்கு சார்?'' என்றாள் இயல்பான குரலில்.

அவள் 'ரெண்டே ரூபாய்' என்று குறிப்பிட்டது ஏனென்று மைத்ரேயன் யோசித்ததாக தெரியவில்லை. மாறாக, பயிற்சி பற்றி கூறியதை மட்டும் எடுத்துக்கொண்டு, ''ம்ம்.. அந்த நன்றி உன் மனதில் இருந்தால் சரிதான். சில மரக்கட்டைகளுக்கு செய்தநன்றி நினைவிருப்பதே இல்லை. நீயும் அப்படி ஆகிவிடாதே'' என்று அம்பை எய்து விட்டு சென்றார்.

மீண்டும் அலுவலர்கள் சிலையாகிப் போனார்கள்.

மைத்ரேயன் எய்த அம்பின் குறி சாந்திதான் என்பது அபிராமிக்கும் புரிந்தது. கொடுத்த வேலை முழுவதையும் ஒரு முணுமுணுப்பு கூட இல்லாமல் செய்யும் சாந்தியை, நன்றி கெட்டவள் என்று எப்படிச் சொல்லலாம்?

அதைப்பற்றி யாரும் பேசாமல் ஒதுங்கிக் கொள்வதும் அவளுக்கு புதிராகத்தான் இருந்தது.

அபிராமியாவது புதிதாக – அங்கிருப்பவர்களில் கடைசியாக வந்தவள். வெறும் பயிற்சி பெற வந்தவள் என்கிற அளவில் உள்ளவள். அவர்களுக்குப் படியளக்கிற வரைப் பற்றி அவளிடம் பேச தயங்குகிறார்கள் என்று விட்டுவிடலாம். ஆனால், அவர்களுள் ஒருத்தியை மிக மட்டமாக நடத்துகிறார், கேவலமாகப் பேசுகிறார், அதையும் கண்டு கொள்ளாததுபோல நடிப்பது என்னவோ போலிருந்தது.

இருக்கட்டும். இவ்வளவு கடுமையாக உழைத்துக் காட்டியபின் மைத்ரேயன் அவளுக்கு வேலைதராமல் வெளியேற்றிவிடப் போவதில்லை. அப்போது, அதாவது அவளும் இந்த நிறுவனத்துடைய அலுவலர்களுள் ஒருத்தியாக ஆனபிறகு, இவர்களிடம் நேரிலேயே கேட்டுவிட வேண்டியதுதான்.

அவளது ஆறு மாதப் பயிற்சி முடிய, இன்னமும் இரு வாரங்களே பாக்கி என்ற நிலையில், ஒரு நாள் மைத்ரேயன், அபிராமியை அழைத்து ஏ.பி.சி. புத்தகத்தை அவளிடம் கொடுத்தார்.

''இந்தப் புத்தகத்தின்படி, நாட்டின் வடமேற்கு மாகாணங்களின் ஒவ்வொரு பகுதியிலும் அதிகப் பிரதிவிற்கும் முதல் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் பெயரையும் விற்பனையாகும் பிரதிகளின் எண்ணிக்கையோடு எழுதி வை. அவைகளை படிக்கிறவர்கள் விவரம், விளம்பரக்கட்டணம் எல்லாமும் வேண்டும். தாமதமானாலும், சற்று இருந்து வேலையை முடித்துவிட்டே போ. முடிந்தால், நானும் வந்து உனக்கு உதவுகிறேன்.'' என்றார்.

நாடெங்கும் பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைகள், எத்தனை பிரதிகள் விற்கின்றன என்று தணிக்கை செய்து அறிவிப்பது அந்த ஏ.பி.சி. புத்தகம். மிகவும் தடிமனான புத்தகம். இதை புரட்டிப் பார்த்து, மைத்ரேயன் கேட்ட விவரத்தை கண்டுபிடித்து, குறிப்பு எடுப்பது எளிதானகாரியமல்ல. கூடவே, என்.ஆர். எஸ்–ஸையும் பார்த்தாக வேண்டும். நேரம் பிடிக்கும்.

ஆனால், வேலைக்கு சுணங்குகிறவள் அல்ல என்பதால் அப்போதே மற்ற வேலைகளின் இடையிடையே கிடைத்த நேரத்தில் இந்தக் குறிப்பையும் எடுக்கலானாள்.

மாலையில், மற்றவர்கள் கிளம்பிச் செல்ல தொடங்கியபோதும் அபிராமி அந்தப் புத்தகத்தில்தான் மூழ்கியிருந்தாள்.

கிளம்புவதற்கான எந்தச் செயலிலும் ஈடுபடாமல், அபிராமி தொடர்ந்து வேலையில் மூழ்கியிருப்பதைக் கவனித்த சாந்தி, சின்னவளிடம் வந்தாள்.

''என்ன, கிளம்பவில்லையா அபிராமி?'' என்று விசாரித்தாள்.

புத்தகத்திலிருந்து பார்வையை அகற்றாமலே, ''இல்லை அக்கா. இன்னும் ரொம்ப நேரம்... இரவில்கூட தாமதமாகத்தான் கிளம்ப முடியும் என்று நினைக்கிறேன். இந்தக் குறிப்பு நாளைக் காலைக்குள் வேண்டுமாம். ஏன் சாந்திக்கா, புதிதாக ஏதேனும் பெரிய விளம்பர ஒப்பந்தம்... மும்பை பக்கம் பிரசுரிக்க வேண்டியது நமக்கு வந்திருக்கிறதா? அந்தப் பக்கத்து விவரம் முழுசும் வேண்டு மாமே?'' என்றாள் அபிராமி.

சாந்தி சிலையாக நின்று, சின்னவளை வெறித்து நோக்கினாள்.

4

கேட்ட கேள்விக்கு சாந்தியிடமிருந்து சற்று நேரம் பதில் வராது போகவும் விழி உயர்த்தி அவளைப் பார்த்து, ''என்னக்கா, உங்களுக்கே தெரியாதா? பாஸ் ரகசியமாக வைத்திருக்கிறார் போல. திடீரென்று சொல்லி, எல்லோரையும் இரவுபகலாக வேலை வாங்கப் போகிறார். எனக்கு இன்றே தொடங்கி விட்டது. சரி, நீங்க போங்க. நான் இதை முடித்து விட்டு கிளம்புகிறேன்...'' என்று மீண்டும் வேலையில் மூழ்கினாள்.

அப்போதும் சாந்தி அசையவில்லை. சிறுமவுனத்தின் பின், ''இது வெகுநேரமாகுமே அபிராமி?'' என்று மெல்லிய குரலில் வினவினாள்.

அவள் கிளம்பிப் போய்விடவில்லை என்பதையே, அப்போதுதான் உணர்ந்த அபிராமிக்கு ஆச்சரியமாக இருந்தது. நிமிர்ந்து பார்த்து, ''இதென்ன புதிதா அக்கா? எத்தனைநாள் இருந்திருக்கிறோம். அதிகப்படியாக ஒரு நாள் கண்விழிப்பு என்று நினைத்துக்கொள்ள வேண்டியது தான்.'' என்று முறுவலித்தாள்.

''ஆனால், இப்போது நீ தனியாக இருப்பாயே. யாராவது வந்தால்... யாராவது திருடன்...''

''அவன் திருட என்னிடம் என்னக்கா இருக்கிறது? பிளாஸ்டிக் மணிமாலை, தோடு. கையிலும் அதுதான். அப்படியே எவனாவது திருட வந்தாலும் என்னைப் பார்த்ததும் ஏமாந்து போவான்.'' அரிசிப்பல் காட்டி சிரித்தாள் அபிராமி.

அப்போதும் சாந்தி, கூடச் சேர்ந்து சிரிக்க வில்லை. அவளது முகத்தை பார்த்த அபிராமிக்கு 'மரக்கட்டை' என்று மைத்ரேயன் அடிக்கடி கூறுவது சரிதானோ என்று அப்போது தோன்றி விட்டது.

என்ன இப்படி இருக்கிறாள் என்று அவளது யோசனை ஓடும் போதே, மற்றவள் பேசினாள்.

''வந்து... அவனுக்கும் வேண்டியது ஏதாவது இருக்கும் அபிராமி. ஆனால் தனியாக இராமல் துணையோடு இருந்தால், எவனுக்கும் திருட துணிவு வராது. உன் விடுதி அருகில்தானே இருக்கிறது? அங்கே எல்லோரும் நல்லவர்கள், விடுதிக் காப்பாளர்கூட நல்ல குணம் என்பாயே. அவர்களிடம் சொல்லி, உன் அறைத் தோழியை இங்கே வரவழைத்து கூட வைத்துக் கொள்ளேன். ஒருவருக்கு இருவராக இருந்தால், எப்போதும் பாதுகாப்பு. என்ன, வரவழைத்துக் கொள்கிறாயா? நான்... நான் சொன்னதை மறக்க மாட்டாயே. நான் இதற்குமேல் நிற்கமுடியாது. வரட்டுமா? தனியே இருக்க மாட்டாயில்லையா? நாமே திருடனுக்கு வசதி செய்து கொடுக்கக்கூடாது. என்ன?'' என்று மேஜையைப் பார்த்தபடியே சொல்லிவிட்டு, மடமடவென்று வெளியேறிச் சென்றுவிட்டாள்.

இவ்வளவு நீளமாக சாந்தி பேசுவாளா?. ஆச்சரியம் சிந்தனையைத் தூண்டிவிட, அபிராமி யோசிக்கத் தொடங்கினாள்.

சுமார் ஒன்பது மணியளவில் அலுவலகத்தின் வெளிக்கதவு மெள்ள திறக்கப்பட்டது.

தன் சாவி கொண்டு கதவை திறந்துகொண்டு வந்தவர் மைத்ரேயன்தான்.

''பாவம், சாப்பிடக்கூட இல்லாமல், பசியோடு வேலை செய்து கொண்டிருப்பாயே... அதோடு, இதுபோலெல்லாம் நீ எங்கே சாப்பிட்டிருக்கப் போகிறாய் என்று, உனக்கும் சேர்த்து வாங்கி வந்தேன். செட்டிநாடு சமையல். வெகு ருசியாக இருக்கும். சேர்ந்து சாப்பிட்டு விட்டு, நாம் இருவருமாகச் சேர்ந்து வேலையைப் பார்ப்போம். ஏ.சி. அறைக்குள் போய்விடலாம், வா...'' என்ற வாறே உள்ளே வந்து, சாவிக்கொத்தில் அவரது அறைக்கதவின் சாவியைப் பிரித்தபடி, அவரது அறையை நோக்கி நடந்தார்.

அவர் இல்லாத நேரத்தில் யாராவது ஏ.சி.யை பயன்படுத்திவிடக்கூடும் என்று எப்போதும் அந்த அறைக்கதவை பூட்டியே வைத்திருப்பார்.

''செட்டிநாட்டு சாப்பாடா சார்? சுவையாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கி றேன். ஆனால், மூன்று பேருக்குப் போதுமா சார்? மகியை விட்டுவிட்டு, நான் மட்டும் சாப்பிட முடியாதே.'' என்று அபிராமி கூறவும் திகைத்து நின்று, ''மகியா? யார் அது?'' என்று எரிச்சலும் குழப்பமுமாகக் கேட்டார்.

அப்பாவித்தனமாக விழிகளை விரித்து, ''மகி, சார். விடுதியில் என் அறைத் தோழி சார். எங்கள் 'இல்ல'த்தில் வளர்ந்து, எனக்கு ஓர் ஆண்டு முன்னதாக வெளியே வந்தவள். அவள் மூலமாகத்தான், இந்த விடுதியில் எனக்கு இடம் கிடைத்தது என்று உங்களிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே சார்'' என்று விவரித்தாள் அபிராமி.

பொறுமையற்ற ஒரு கையசைவுடன், ''அதற்காக அவளுக்கு இந்தச் சாப்பாட்டை எப்படிக் கொடுக்க முடி...'' என்ற மைத்ரேயனின் பேச்சு, பார்வையாளர் அறையிலிருந்து வெளியே வந்த வாட்டசாட்டமான பெண்ணைக் கண்டதும் பாதியில் நின்றது.

ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தாள் அபிராமி. ''நான் சொன்னேனே மகி என்று... முழுப் பெயர் மகாலட் சுமி. சார் எங்கள் பாஸ்.''

மகாலட்சுமியின் வணக்கத்தை கவனியாதது போல, ''இவள் இங்கே எப்படி வந்தாள்?'' என்று சற்றுக் கடுமையான குரலில் மைத்ரேயன் கேட்டார்.

''எனக்கு துணைக்கு வரவழைத்ததேன் சார். இரவு நேரம்... யாராவது திருடன், எதையாவது திருட வந்தால்? தனியாளாய் தடுக்க முடியுமா? அதனால், நான் தனியே இருக்க நேர்ந்தால், மகி துணைக்கு வருவாள். அவள் துணைக்கு நான் போவேன்'' என்று அப்பாவியாய் விளக்கினாள்.

''ஓகோ. எப்போதும் இப்படித்தான் ஏற்பாடா?''

''எப்போதும் இப்படித்தான்'' என்றபோது அபிராமியின் குரலில் உறுதியிருந்தது.

சிறு அமைதிக்குப் பின், ''சரி சரி... நீயும் அந்தப் பெண்ணும் கிளம்புங்கள். இரவில் எவனாவது வந்து, இரண்டு பேரையும் அடித்துப் போட்டுவிட்டு கம்ப்யூட்டர், பிரின்டர் என்று எதையாவது எடுத்துப் போய்விட்டால் எனக்குத்தானே இழப்பு. மின்சாரத்துக்குக் கேடாக யாரும் இருக்க வேண்டாம்...'' என்றார் மைத்ரேயன்.

''ஐயோ... வேலை சார்?'' என்று புருவம் உயர்த்திக் கவலை காட்டினாள் அபிராமி.

''அது... அந்த விவரம் தாமதமாகத்தான் வேண்டியிருக்கும் போல. அப்போது பார்த்துக் கொள்ளலாம். கிளம்புங்கள்.'' கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக விரட்டியடித்தார் அவர்.

''செட்டிநாட்டு சாப்பாட்டை தராமலே கொண்டு போய் விட்டாரே'' என்று மகி சோகம் காட்ட, இருவரும் சிரித்தனர்.

இரு வாரங்கள் கழிந்தபின், ''உன் பயிற்சி முடிந்துவிட்டது. நாளையிலிருந்து நீ வரவேண்டாம். உன் வேலை பற்றி என் சான்றிதழ் சாந்தியிடம் இருக்கிறது. வாங்கிக்கொண்டு போ.'' என்று கூறிவிட்டு மைத்ரேயன் அடுத்த ஃபைலை பிரித்தபோது கூட அபிராமி கலங்கிவிடவில்லை. அன்றைய இரவின் எதிரொலி போலும். இதில்லாவிட்டால் இன்னோர் இடம் என்ற தைரியம்தான்.

ஆனால், 'கிட்டத்தட்ட சுமார் ரகம்' என்று சான்றிதழில் அவளது வேலைத் திறனை மதிப்பிட்டிருந்ததை பார்த்ததும் கலங்கிப்போனாள்.

இதைப் பார்த்த பிறகு, யார் வேலை கொடுப்பார்கள்? கையில் வைத்திருந்த பணம் பெரும்பாலும் காலியாகி விட்டிருக்க, எதிர்காலம் அபிராமிக்கு வெகுபயங்கரமாகத் தோன்றியது.

ஆறு மாத காலம். எப்படி உழைத்திருக்கிறாள். அவ்வளவு உழைப்பையும் பயன்படுத்திக் கொண்டு, எவ்வளவு அலட்சியமாக... 'அலட்சியமாக' என்று சொல்ல முடியாது. 'குரூரமாக' என்பதுதான் சரியான வார்த்தை. முழு வக்கிரம். அப்படி வெளியேற்றிவிட்டாரே.

இந்தமாதிரி அவர் செய்யக்கூடும் என்று எண்ணவே முடியாத படி, முன்தினம்கூட, முக்கியமான வாடிக்கையாளர் ஒருவரின் விளம்பரம் ஒன்றை முழுமையாக அவளையே வடிவமைக்கச் செய்தாரே. அதற்குப் பாராட்டுதல் வேறு.

நாளையிலிருந்து வேலை நிச்சயம் என்றே எண்ணினாளே. அவளது திறமையில் நம்பிக்கை வந்துவிட்டது. இனி, இங்கிருந்து வெளியேற விடமாட்டார் என்று நினைத்து மகிழ்ந்ததை எண்ணி, அவமானமாக உணர்ந்தாள் அவள்.

மனித மனம் பற்றி இன்னமும் அவளுக்கு ஒன்றுமே தெரியவில்லை என்றுதானே பொருள்.

அதுமட்டுமல்ல... இரு வாரங்களுக்கு முந்தைய அந்த இரவில், மைத்ரேயனை தவறாகக் கணித்ததாக எண்ணி வருந்த வேறு செய்தாள். பழுதை பாம்பாக எண்ணுகிற உம்மணாமூஞ்சி சாந்தி யால் வந்தது என்று, அவளுக்கு அசட்டுப் பட்டம் கட்டினாள். ஆனால், பாம்பு 'கரம்' வைத்துக் கொத்தியிருக்கிறது.

எப்படியாயினும் இதையெல்லாம் நினைத்தோ, கொதித்தோ எந்தவித பயனும் இல்லை. ஒருவேளையேனும் அரைப்பட்டினி கிடந்துதான், இந்த மாதத்தையே ஓட்டவேண்டும் என்பது இன்றைய நிலைமை. இதை மாற்ற என்ன செய்வது என்று யோசித்து முடிவு செய்தாக வேண்டும்.

ஆனால், செய்வதற்கு என்ன இருக்கிறது? 'கையில் காசில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை' என்பதோடு, வேறு வேலை கிடைக்கவும் வழியில்லை.

யோசிக்க யோசிக்க, நிலைமை இன்னமும் அதிக பயங்கரமாக அவளுக்குத் தோன்றியது.

பேசாமல் மைத்ரேயனிடமே கெஞ்சிப் பார்க்க லாமா என்று யோசித்தாள். ஆனால், இனி அது புதைகுழியில் இறங்குவது போலத்தான். இவ்வளவு வந்த பிறகு, அவர் சும்மா எதுவும் செய்ய மாட்டார்.

முதல்நாள் பரந்தாமன் கூறியது, இப்போது வேறு மாதிரி புரிந்தது! ஆனால், அப்படியெல்லாம் அசிங்கப்பட முடியாது. அதைவிட பட்டினியில் சாக லாம். இன்று அவளைப் பற்றி இழிவாகப் பேசினாளே, அதுபோல கேவலமான புத்தியிருந்தால் மைத்ரேயனிடமே சரணடைந்திருக்க மாட்டாளா?

மாறாக 'ஐம்பது வயது. தலை நரைத்துவிட்டது. புத்தி போகிற போக்கைப்பார்' என்று ஆத்திரம் தானே, அடுத்த மாத சாப்பாட்டுக்கே வழியில்லாத அந்த நேரத்திலும் அபிராமிக்கு வந்தது?

மைத்ரேயனைப் பற்றி வெறுப்பும் கோபமுமாக நினைத்து, உள்ளூரத் திட்டிக்கொண்டு போனது, இப்போது நடப்பதுபோல நினைவுக்கு வந்தது.

கூடவே, அப்போது 'சுலபம்' அதிபர் பரந்தாமனை சந்தித்ததும்!

ஏமாற்றமும் சினமுமாக, மனதுள் மைத்ரேயனுக்கு அர்ச்சனை செய்தபடி அவள் நடக்கையில் யாரோ வழியில் வந்து நின்றார்கள்.

ஆத்திரமாக நிமிர்கையில், ''என்னம்மா... கூப்பிடக்கூப்பிட காதே கேட்காதது போல போகிறாய்? எந்தக் கோட்டையை பிடிக்க இந்த யோசனை?'' என்று அவர் கேட்கவும்தான், அபிராமி நனவுல கத்துக்கு வந்து நிமிர்ந்து பார்த்தாள்.

பரந்தாமன்!

இந்த மனிதரிடம் பேசி, விளம்பரம் கிடைத்த தால்தான் மைத்ரேயன், அவளை பயிற்சியாளராக எடுத்துக்கொண்டதே! இல்லாவிட்டால் ஆறு மாத மும் வீணாகி, இப்படி நடுத்தெருவில் நிற்கும்படி நேர்ந்திராது.

''வெறும் பொட்டல் தரை. கட்டடத்துக்கே வழி யில்லை, கோட்டைக்கு எங்கே போவது?'' என்றாள் வெறுப்புடன்.

''அருமையான வார்த்தை அமைப்பு! பொட்டல், கட்டடம், கோட்டை! எதுகை, என்னமாய் துள்ளி விளையாடுகிறது. இதனால்தான் உன்னுடன் பேச எனக்குப் பிடிப்பதே...'' என்று சிலாகித்தவர், பிறகே அந்தப் பேச்சின் பொருளை உணர்ந்தவராக, ''என்னம்மா பிரச்னை?'' என்று விசாரித்தார்.

ஒரு கணம் தயங்கிவிட்டு, மைத்ரேயன் தன்னை வெளியேற்றிய விவரத்தை அபிராமி சொன்னாள்.

''உன்னைப் போய் வேலை மட்டம் என்றானா? எப்போது? அப்படியா? ஆனால், அந்த வக்கிரம் தொழிலைப் பாதிக்க விட்டுவிடுவானா? உன்னை அவன் வெளியே விட்டதை, என்னால் நம்பவே முடியவில்லையே! ரொம்ப நன்றாகச் செய்தாயேம்மா. ம், போகட்

டும்...அவன் தலையெழுத்து. இனி, நீ என்ன செய்யப்போகிறாய்? அதைச் சொல்லு'' என்று வினவினார்.

அபிராமி சட்டெனப் பரபரப்புற்றாள். இவருக்கு, அவளது வேலைத்திறமை தெரியும். ஓரளவு அக்கறையும் இருக்கிறது.

''இன்னும் ஒன்றும் தெரியவில்லை சார். ஆனால், யாராவது, என் மூலமாக விளம்பரம் செய்தால்... செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும்.'' என்று, ஆவலோடு அவரைப் பார்த்தாள்.

புரிந்துகொண்டாற்போல, லேசாக முறுவலித்தார் அவர். ''அப்படியே உன் மூலம் விளம்பரம் செய்தாலும் பத்திரிகைகளில் அதை ஏற்கமாட்டார்களே அம்மா?'' என்றார்.

சற்று திகைத்துவிட்டு, ''செய்வார்கள் சார். முன்பணம் கட்டி, விளம்பரத்தை கொடுத்தால்...'' என்று இழுத்தவள், அவர் பேசாதிருக்கவும், ''விளம்பரம் போட்டு இரண்டு மாதம் கழித்து பணத்தைக் கொடுக்க வழியிருக்கிறபோது, எந்த விளம்பரதாரரும் முன்பணம் கொடுக்க முன்வரமாட்டார்தான். இதற்கு இன்னும் ஒரு வழி இருக்கிறது சார். எனக்குக் கிடைக்கும் விளம்பரங்களை, அங்கீகாரம்பெற்ற வேறு நிறுவனத்தின் மூலம் கொடுத்தால், பத்திரிகைகளில் ஏற்றுக்கொள்வார்கள். வருவதில், அந்த நிறுவனத்துக்கு கொஞ்சம் கொடுக்க வேண்டும். அவ்வளவுதான். சார், அதனால்... உங்களால், எனக்கு உதவ முடியுமா சார்?'' என்று அபிராமி நேரடியாகவே கேட்டாள்.

''கடைசியில் என் தலையிலேயே கைவைக்கிறாயா?'' என்று சிரித்தார் பரந்தாமன்.

''ப்ளீஸ் சார்!'' என்று கெஞ்சலாகக் கேட்டாள் அவள்.

''ம்ம்... செய்யலாம். ஆனால், இதில் எனக்கும் சில சிரமங்கள் இருக்கின்றன. முதலில், 'ரேயன்' மூலம் ஒழுங்காக வெளிவரும் விளம்பரங்களில்தான், உனக்குக் கொஞ்சம் பிரித்துக் கொடுக்க வேண்டும். மைத்ரேயன் எப்படியும் எதிர்ப்பார். அப்புறம், நீ அணுகும் விளம்பர நிறுவனத்திடமும் நான்தான் உனக்காக பேச வேண்டியிருக்கும். வருங்காலத்தில் எப்படியோ? இன்றைய நிலையில், உன் பெயரை மட்டும் வைத்துக் கொண்டு, நீ எதையும் சாதிக்க முடியாது. பணத்துக்கு நான் உத்தரவாதம் கொடுக்காமல், எந்த விளம்பர நிறுவனமும் நீ கொடுக்கும் விளம்பரங்களை பத்திரிகைகளுக்கு அனுப்ப சம்மதிக்க மாட்டார்கள். இதெல்லாம் செய்வதானால், எனக்கும் லாபம் வேண்டுமல்லவா? அங்கீகாரம் பெற்ற நிறுவனத்துக்கு பங்கு கொடுப்பது போல, எனக்கும் கொடு'' என்று அவரும் வெளிப்படையாகக் கேட்டார்.

திகைப்புடன் பார்த்தாள் அபிராமி. எல்லோருமே சுய லாபம்தான் பார்ப்பார்களா? இவர்கூடவா அப்படி!

ஆனால், 'தனக்கு மிஞ்சித்தான் தானம்' என்று அந்தக் காலத்திலேயே எழுதி வைத்துத்தான் இருக்கிறார்கள்.

போகட்டும். இப்போதைக்கு காலூன்ற இடம் கொடுக்கிறாரே. அதுவே பெரிது. 'ஞாலத்தின் மாணப் பெரிது'!

''சரி சார்.'' என்றாள். ''வரும் பதினைந்து சதவிகிதத்தில், விளம்பர நிறுவனத்துக்கு மூன்றில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். உங்களுக்கும் அதேபோல கொடுத்தால்,

அப்புறம் எனக்கு செலவுக்கே போதாதே சார். வேண்டுமானால், இரண்டு சதவிகிதம் தருகிறேன்...''

தொழில்முறை பேச்சாக பேசத் தொடங்கியவள், ''ம்ம்...'' என்று அவர் யோசிக்கவும் பயந்துவிட்டாள்! ''ப்ளீஸ், இதை எனக்கு ஓர் உதவியாக செய்யுங்கள் சார்'' என்று காலில் விழாத குறையாக கெஞ்சினாள். அவரது பதிலில், அவளது எதிர்காலமே தொங்கிக் கொண்டிருப்பது போல ஒரு பிரமை.

யாசிப்பது ஒன்றும் மகிழ்ச்சிகரமான செய்கை அல்ல, யாசகர்களுக்குக்கூட! தன்மதிப்பை துடைத்தெறிந்து விட்டு தான் பிச்சை கேட்க முடியும். அந்த மாதிரி எத்தனை வேதனைகளை அபிராமி வலியோடு விழுங்கியிருக்கிறாள் என்று, அந்த வம்புப் பேச்சுக்காரிக்கு என்ன தெரியும்?

அவளது வம்புக்கதையின் நாயகனான சிவசந்திரனை அபிராமி சந்தித்ததே, அவள் யாசிக்கச் சென்றபோதுதான்.

ஆனால், அவனிடம் யாசித்தது மட்டும் அவளுக்கு சிறு வருத்தத்தைக்கூட அளித்ததில்லை என்பது ஆச்சரியம். மாறாக, எத்தனையோ முறை எண்ணிப் பார்த்து உற்சாகம் பெற்றிருக்கிறாள்.

அதையெல்லாம் கொச்சைப்படுத்திவிட்டாளே அந்தப் பெண்.

(தொடரும்)

5

வருத்தத்தினூடே, நினைவுச் சங்கிலி தொடர்ந்தது.

அன்று, அவளது வேண்டுகோளை உடனே ஒப்புக் கொண்டுவிடாமல் பரந்தாமன் யோசித்ததும் மறுத்துவிடு வாரோ என அவள் கலங்கியதும் கொஞ்சமும் மறக்கவில்லை. ஆனால், அவரும் மறுக்கவில்லை. ஏதோ மனதுள் கணக்கிட்டு, ''இரண்டரை சதவிகிதம் கொடு. சரியான முறைப்படி, நான் இப்படி உள்கமிஷன் வாங்கக்கூடாது தான். ஆனால், நிலைமையைப் பார்த்தால் விளம்பரத்தை தயாரிக்கவே உனக்கு நான்தான் முன்பணம் தரநேரும் போலிருக்கிறது. அதற்கு வட்டி போட்டால் என்னாகும், பார். கஷ்டத்தில் இருப்பவருக்கு உதவி செய்ய வேண்டியதுதான். ஆனால், ஒருவரை கைதூக்கி விடுவதற்காக நான் கீழிறங்கக் கூடாது. அதாவது நஷ்டப்பட கூடாது. புரிகிறதில்லையா?''

நன்றியுடன் கைகூப்பினாள் அவள். ''புரிகிறது சார். முதல் நாள் உங்களை பார்த்ததாலேயே இந்தத் தொழிலில் நான் பயிற்சி பெறமுடிந்தது. இப்போதும் எனது நல்விதிதான் நான் உங்களை சந்திக்குமாறு செய்திருக்கிறது. முன்னேறிவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உறுதிப்பட்டு விட்டது சார்.''

''கெட்டிக்காரி! இந்த வெளிப்படையான நன்றி அறிவிப்பின் மூலம், இனி நான் பின்வாங்க முடியாதபடி செய்துவிட்டாய். இதேபோல் வேலையையும் திறம்படச் செய். முன்னேறுவாய்!'' என்று ஆசிகூறினார் அவர். ''இன்னொன்றையும் நினைவு வைத்துக்கொள். இதுபோன்ற 'சென்டிமென்ட்'டுக்கு எல்லாம் தொழிலில் மதிப்பு கிடையாது. நன்றாக செய்தால் நிலைப்பாய். அல்லது, காணாமல் போய்விடு வாய். அதாவது, இது ஒரு முயற்சி தான். தக்கவைத்துக் கொள்வது உன் சாமர்த்தியமே!'' என்று கறார் குரலில் எச்சரிக்கவும் செய்தார்.

லேசாக முகம் சுண்ட, ''நான் சொன்னது வெறும் முகமன் என்று எண்ணாதீர்கள். அடிமனதிலிருந்து வந்தது சார். இனி, நன்றியை என் வேலையில் காட்டுகிறேன்'' என்று அபிராமி வாக்களித்தாள்.

கொடுத்த வாக்கை நிறை வேற்றவும் செய்தாள்!

அந்த சமயத்தில், புதிதாக எந்த பொருளையும் பரந்தாமன் அறிமுகப்படுத்துவதாக இல்லை. ஆனால் அவ்வப்போது தன் நிறுவனத்தின் மொத்தத் தயாரிப்பையும் விளம்பரப்படுத்துவார். 'நம் மக்களுக்கு மறதி அதிகம். அடிக்கடி நினைவுபடுத்தாவிட்டால், நம்மை மறந்துவிடுவார்கள்' என்று காரணம் சொல்வார். அதுபோன்ற நிறுவன விளம்பரம் ஒன்றை தயாரிக்கும் பொறுப்பைத்தான் பரந்தாமன் இப்போது அபிராமியிடம் அனுப்பிவைத்தார். இந்த மாதிரி விளம்பரங்களை அவர் எந்த ஒரு தனி கம்பெனியிடமும் தொடர்ந்து கொடுத்ததில்லை. 'ரேயனி'லும் ஒன்றிரண்டை அவள் பார்த்திருக்கிறாள்.

இவற்றின் பொதுப்படையான அம்சம், 'சுலபம்' தயாரிப்புகள் கவர்ச்சிகரமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். கடைசித் தயாரிப்பு நடுநாயகமாக வீற்றிருக்க, அந்த பொருட்களின் உயர்வு பற்றி சில வரிகள் எழுதியிருக்கும்.

துறைக்குப் புதியவள் என்று, எளிதான ஒன்றை பரந்தாமன் கொடுத்திருக்கிறார். ரோஷம் மிக, அதையே சவாலாக ஏற்று, தான் தயாரிக்கும் விளம்பரம் வித்தியாசமாக அமையவேண்டும் என்று அபிராமி தீர்மானித்தாள்.

ஐடியா தோன்றிவிட்டது. வரையக்கூடியவள் என்பதால், அடிப்படைச் சித்திரத்தை வரைந்து முடித்தாள். வசனமும் தயாராயிற்று. எதற்கும் இருக்கட்டும் என்று காப்பிரைட்டரிடமும் ஆர்ட்டிஸ்ட்டிடமும் எடுத்துச் சென்றாள். என்ன இருந்தாலும் அதிலேயே பழகியவர்கள் அல்லவா? அவர்கள் செய்த சிறு மாற்றங்கள் இன் னமும் மெருகூட்டின. அதோடு, இன்னோர் எதிர்பாராத ஆதாயமும் கிடைத்தது.

அதற்குள் அவள் நிலைமை – 'ரேயனி'லி ருந்து அவள் அகற்றப்பட்டுவிட்ட சேதி, அந்த வட்டம் முழுவதிலும் பறையறையப்பட்டிருந்தது. மைத்ரேயனின் சகாயம்... மைத்ரேயனின் நப்பித்தனம், யாருடனும் நல்லுறவை வளர்க்கக்கூடியதில்லை. பணம் வாங்கிக் கொண்டு வேலை செய்து கொடுத்தார்கள். அவ்வளவே!

இப்போது, அவரால் வெளியேற்றப்பட்டவளிடமே இருவரும் பரிவு காட்டினார்கள். சிறு கட்டணம் வாங்கிக் கொண்டு, நகாசு வேலை அழகாகச் செய்து கொடுத்தார்கள். விளம்பரம் நன்றாக இருப்பதாக கருத்தும் சொன்னார்கள்.

அப்போதும்கூட, பரந்தாமனிடம் தன் தயாரிப்பை காட்டும்போது அபிராமிக்கு உள்ளூர உதைப்புதான். 'கதையா சொல்லச் சொன்னேன்...' என்று கேட்டுவிட்டால்..? அவளது விளம்பரத்தில் ஒரு கதைதான் இருந்தது.

மத்தியதரக் குடும்பத்தின் சமையலறை. 'சுலபம்' கிரைண்டரிலிருந்து பொங்கப் பொங்க அரைத்த மாவை அள்ளியபடியே குடும்பத் தலைவி, 'மாப்பிள்ளை வீட்டார் என்ன கேட்டார்கள்..?' என்று கேட்கிறாள்.

'சுலபம்' ஃபில்டரில் குடிதண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும் கணவர், ' சுலபம் தயாரிப்புகள் ஒரு செட் மட்டும் கொடுத்தால் போதும் என்றுவிட்டார்கள். நியாயமான விலையில், தரமான தயாரிப்புகளை கேட்கிறவர்கள் நல்ல வர்களாகத்தானே இருப்பார்கள்? நம் பெண் கொடுத்து வைத்தவள்' என்கிறார்.

அரைப்பதற்காக 'சுலபம்' மிக்ஸியில் மசாலா பொருட்களை போட்டுக்கொண்டிருக்கும் மகள் முகத்தில் வெட்கம் கலந்த பூரிப்பு. அடுப்பு மேடையில் தேங்காய்த் துருவி, சப்பாத்திக் கட்டை போன்ற 'சுலபம்' தயாரிப்புகள். கூர்ந்து பார்த்த பரந்தாமனின் முகம் மெள்ள மலர்ந்தது.

''நான் ஒரு கட்டுரை கேட்டேன். நீ காவியமே எழுதிவிட்டாய்!'' என்று வெளிப்படையாக பாராட்டினார்.

விளம்பரம் நல்ல வரவேற்பைப் பெற்றது. 'விளம்பரம் அமைத்தது யார்?' என்ற விசாரிப்பும் வேறு சில விளம்பர வாய்ப்புகளும் வந்தன. செலவுக்கு பரந்தாமன் கொடுத்த முன்பணம் மற்றும் ஒப்புக்கொண்டதை கொடுத்த பிறகும் சில ஆயிரங்கள் மிச்சமாயிற்று. மகிழ்வோடு பரந்தாமனிடம் பணத்தைக் கொடுக்கையில், அவர் எச்சரித்தார்.

''ஒரு வெற்றியில் உச்சிகுளிர்ந்து விடாதே. இந்தத் தொழிலில் இடர்ப்பாடுகளும் உண்டு. பேசாமல், இந்த வெற்றியை பயன்படுத்தி, ஏதாவது பெரிய கம்பெனியில் வேலைக்கு

சேர்ந்துவிடேன். நிலையான, நல்ல சம்பளம் வரும். நிம்மதியாக இருக்கலாம். சின்னப்பெண்... சிரமப்படுகிறாயே என்று சொல்கிறேன்...'' என்றார்.

தயக்கமே இல்லாமல் தலையசைத்தாள் அபிராமி. ''இல்லை சார். நிம்மதியைப் பார்த்தால் முன்னேற முடியாது. நான் உயரவேண்டும்!'' என்றாள் பிடிவாதக் குரலில்.

''முன்னேற வேண்டுமானால், சறுக்கல் நேராமல் கவனிக்க வேண்டும். வெற்றி தொடர்கதையாக இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்றார் பரந்தாமன்.

''கவனமாக இருக்கிறேன் சார்'' என்று பணிவாக கூறியவள், வாய்ப்பை விடாமல் ''உங்கள் விளம்பரத்துக்குக்கூட ஒரு தொடர் வைத்திருக்கிறேன் சார்...'' என்றாள்.

''மீண்டும் என் தலையிலேயே கைவைக்கிறாயா?'' என்றபோதும், என்னவென்று கேட்டார்.

''அந்தப் பெண்ணுக்கு திருமணமாகி கணவன் வீட்டாரோடு 'சுலபம்' பொருட்களை பெருமிதத்தோடு பயன்படுத்திக் கொண்டிருப்பாள். ' 'சுலபம்' சாமான்களைக் கொண்டு வந்த என் மருமகள்போல உலகத்தில் உண்டா?' என்று மாமியார் மெச்சுகிறாள். எப்படி சார் ஐடியா?''

முறுவலித்தார் பரந்தாமன். ''நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அதற்குள் மீண்டும் ஒரு பெரிய தொகை விளம்பரத்துக்காக செலவிடுவது சரியாகாது. கிரைண்டர் மூடியை திறக்காமலே, ஓரத்தில் ஒட்டுவதை வழித்துவிடும்படியாக, புதுமுயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அது மார்க்கெட்டுக்கு வரும்போது செய்வோம். ஆனால், நீ முன்னுக்கு வர விரும்பினால், ஒரே நிறுவனத்தை நம்பிக்கொண்டிராமல் பல இடங்களிலும் முயற்சி செய்!'' என்று சொன்னார்.

அபிராமி ஏற்கெனவே அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தாள். உழைப்பு வீண்போகாது என்பதற்கு இணங்க, 'ரேயனி'ல் வஞ்சனையின்றி உழைத்ததன் பயனாக, அவளுக்கு பத்திரிகை, விளம்பரம் என இருசாராரிடமும் அறிமுகம் இருந்ததால், இருதரப்பினரிடமும் பேச முடிந்தது.

புதிதாக யாரேனும் விளம்பரம் செய்ய திட்டமிடுகிறார்களா என்று அறிய முடிந்தது. அப்படித் தெரியும்போது, முதல் ஆளாக போய் நின்றுவிடுவாள். பல இடங்களில் தோல்வி கிடைத்தாலும் சில வாய்ப்புகளும் கிட்டின. கிடைத்த வாய்ப்புகளை சிறப்பாகச் செய்து காட்டவும், மேலும் பல விளம்பரங்கள் கிடைக்கலாயின.

அப்படி விளம்பரத் தயாரிப்பை தன்னிடம் தருமாறுகேட்டு அபிராமி சென்றபோதுதான் சிவசந்திரனை சந்தித்தாள். வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு புது அனுபவம்!

'வெண்புறா' என்ற பெயரில், அவனது நிறுவனம் பல சோப்பு, சோப்புத்தூள்களைத் தயாரித்து வந்தது. துணி, பாத்திரம், தரை சுத்தம் செய்வது.

வெண்புறாவில் புதிதாக ஒரு சோப்புத்தூள் தயாரித்திருப் பதாகவும் விரைவில் மார்க்கெட்டுக்கு வரப்போவதாகவும் கேள்விப்பட்ட உடனே அபிராமி அங்கே சென்றுவிட்டாள். புதிய தயாரிப்பை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த விளம்பரம் செய்வார்கள் அல்லவா? அதை 'அபிராமி அட்வர்டைஸிங்'குக்கு வாங்கிவிட வேண்டும் என்றுதான். அடிக்கடி அவள் செய்யும் முயற்சிதான்!

‘ரேயனி’லிருந்து வெளியேற்றப்பட்ட இந்த ஆறு மாதங்களில் அபிராமி ஓரளவு தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருந்தாள். முதல் விளம்பரமே வெற்றியாகி விட்டதால், நாலு இடங்களில் துணிந்து கேட்க முடிந்தது. விளம்பரதாரர்களில் சிலர் அவளிடம் கொடுக்கவும் செய்தார்கள்!

ஒவ்வொரு விளம்பரத்திலும் அவள் முழுக்கவனம் செலுத்தி செய்ததால், அபிராமியின் விளம்பரங்கள் முணுமுணுப்பின்றி வாடிக்கையாளர்களால் ஏற்கப்பட்டன. அவளுக்கும் தன்னால் முடியும் என்கிற நம்பிக்கை வந்தது. இந்த மனநிலையில்தான் ‘வெண்புறா’வுக்கு சென்றது. ஆனால், அதன் தலைமை நிர்வாகி கண்டுகொள்ளவே இல்லை.

அதற்குள் சின்னதும் பெரிதுமாக பன்னிரண்டு விளம்பரங்கள், அபிராமியின் தயாரிப்பில் பிரசுரமாகி இருந்தன. ‘அபிராமி அட்வர்டைஸிங்’ மூலமாகவே நாலு. எல்லாவற்றையும் அழகாக ஃபைலில் கோத்து, கையோடு கொண்டு போயிருந்தாள். ஜி.எம்., அந்த ஃபைலை தொட்டுக்கூட பார்க்கவில்லை. அவள் பேச்சை கேட்பதாகவும் இல்லை!

கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டு ஒரே இடத்தில் விழுந்து, ஒரே வரியை பாடிக்கொண்டிருக்குமே... அதைப்போல, ‘‘இது பெரிய நிறுவனம்! பெரிய, பழைய விளம்பர கம்பெனிகள் மூலம்தான் விளம்பரம் கொடுப்பது! உங்களைப் போல ஆட்களுக்கு கொடுக்க முடியாது...’’ என்று சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார்!

தன் திறமைகளை, வெற்றிகளை பற்றி பன்னிப் பன்னி சொல்லியும் பலனின்றிப் போக அபிராமி வேறுமாதிரி தொடங்கினாள். ‘‘என்ன சார், ஒரேயடியாக அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்! பெரிய ஆட்கள் எல்லோரும் இதையே சொன்னால், நாங்கள் எல்லாம் பழைய ஆட்களாவது எப்படி? இந்த ஒரு தரம், ஒரு புது முயற்சி தான் செய்து பாருங்களேன். அப்புறம், இதுவரை மற்ற நிறுவனங்களை ஏன் பயன்படுத்தினோம் என்று வருத்தப்படுவீர்கள். உறுதி சார்!’’ என்று சொல்லிக் கொண்டே போனவள், யாரோ ‘‘பிரமாதம்!’’ என்றுரைத்து கைதட்டும் ஒலியில் திகைத்து திரும்பிப் பார்த்தாள்.

பார்த்தவளுக்கு இன்னும் அதிக திகைப்பு. எப்போது வந்தானோ? நுழைவாசலுக்கு அருகில் கிடந்த மேஜைமீது சாய்ந்தாற்போல நின்றுகொண்டிருந்த அவன் நிமிர்ந்து, அவர்களை நோக்கி வரத் தொடங்க... எதிரில் அமர்ந்திருந்தவர் எழுவதைக் கண்டு தானும் எழுந்து நோக்கியபோது, அவளுக்கு மேலும் திகைப்பு.

பெண்களுள் சற்று உயரமான அபிராமி, பெரும்பாலும் ஆண்களை கண்ணுக்கு நேராகப் பார்த்துப் பேசித்தான் பழக்கம். ஆனால், இவன் முகத்தை சற்று அண்ணாந்து பார்க்க வேண்டியிருந்தது. அப்படி பார்த்த முகமும் அவளுக்கு திகைப்பைத்தான் அளித்தது.

தெளிவான, கம்பீரமான அங்க அமைப்பு என்பதைவிட, பார்த்துப் பழகிய முகமாகத் தோன்றியதுதான் அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவனை அவள் இதுவரையிலும் பார்த்ததே இல்லை. அப்படியிருக்க, இது எப்படி சாத்தியம்?

அவன் எதுவோ பேசத் தொடங்கவும் அபிராமி சட்டென நடப்புக்குத் திரும்பி வந்தாள்.

‘‘இது நல்ல வசனம் அங்கிள்! இதையே நம் புதிய சோப்புத்தூளுக்கு பயன்படுத்தலாமே...’’ என்று சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

தலைமை நிர்வாகியே எழுந்து நிற்பதானால், இங்கே இவன் டைரக்டர், மானேஜிங் டைரக்டர் என்று ஏதோ பெரிய நிலையில் இருக்க வேண்டும். இவனிடம் பேசி புரியவைக்க முயற்சித்தால் என்ன?

''ஆமாம் சார்! 'புதிதாயிற்றே... எப்படியிருக்குமோ என்று விலக்க வேண்டாம். ஒரு தரம் பயன்படுத்திப் பாருங்கள்... இதுபோல உண்டா என்பீர்கள்!' என்று வசனம் கொடுக்கலாம் சார்!'' என்று பேச்சில் இயல்பாகக் கலந்து கொண்டாள்.

சிறுமுறுவலுடன், ''நன்றாகத்தான் இருக்கிறது. மாற்று யோசனை ஏதாவது இருக்கிறதா?'' என கேட்டான் அவன்.

''உங்கள் சோப்புத்தூள் மெய்யாகவே தரமானது என்றால், 'இரண்டு நாள் பயன்படுத்திவிட்டு திருப்தி இல்லை யென்றால் திருப்பித் தாருங்கள்' என்று சொல்லலாம். இலவசமாகவும் கொஞ்சம் கொடுத்து ஆசை காட்டலாம். அது நீங்கள் அறிமுக விளம்பரத்துக்கு ஒதுக்கியிருக்கும் நிதியை பொறுத்தது'' என்று உற்சாகத்துடன் அடுக்கினாள்.

''வேறு..?''

''வசனம் மட்டுமென்றால் 'மனம் வெளுக்க மாரியம்மா தாயுண்டு... துணி வெளுக்க வெண்புறா தூளுண்டு' என்று 'முத்து மாரியம்மா' பாட்டு பாணியில் எழுதலாம்.''

''போதும், போதும். விட்டால், சொல்லிக்கொண்டே போவீர்கள் போலிருக்கிறதே மிஸ்...'' என்று கண்ணில் சிரிப்புடன் இழுத்தான் அந்த இளைஞன்.

முறையாக அறிமுகமாகுமுன், அதிகமாக லொட லொடத்தது போல தோன்றியிருக்குமோ?

கன்னம் கதகதப்படைவதை உணர்ந்தபடி, ''என் பெயர் அபிராமி. விளம்பர நிறுவனம் நடத்துகிறேன். அதற்கு ஒரு வாய்ப்பு கேட்டுத்தான் வந்தேன்...'' என்று சிறு தடு மாற்றத்துடன் கூறினாள் அவள்.

முறுவல் விரிய, ''சிவசந்திரன். இங்கே நிர்வாக டைரக்டர்'' என்றான் அவன் இலகுவாக.

விழிமலர, ''நினைத்தேன் சார்! ஜி.எம். எழுந்து நின்றதி லிருந்தே புரிந்துகொண்டேன். சொல்லுங்கள் சார், விளம்பரம் என்ன சைஸ்? எத்தனை? பட்ஜெட் என்ன?'' என்று சரமாரியாக கேட்டவண்ணம், கைப்பையிலிருந்து பேனாவையும் நோட்பேடையும் எடுத்து எழுதத் தயாரானாள்.

தலைமை நிர்வாகியும் அவனும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். லேசாக தலையசைத்து, ''இன்னமும் இந்த விளம்பரப் பொறுப்பை உங்களுக்குத் தருவதாக முடிவாக வில்லையே?'' என்று சிவசந்திரன் மென்குரலில் கூறவும் அபிராமியின் முகம் குப்பெனச் சிவந்து போயிற்று.

தோல்வி என்ன அவளுக்கு பழக்கமற்றதா? அதற்கு இவ்வளவு தூரம் உணர்ச்சி அடைவானேன்? இத்தனைக்கும் இவன் இதமாகவேனும் சொல்கிறான்! ஓரொருவர், நாயை விரட்டுவது போலல்லவா கத்துவார்கள்!

சமாளித்துக்கொண்டு, ''ஸாரி சார்! என் வசனத்தை ஏற்றவிதத்தில், அதிகப்படியாக எதிர்பார்த்துவிட்டேன். ஆனால், ஒரு வாய்ப்பு கொடுத்துப் பாருங்களேன். என்னால் நன்றாகச் செய்ய முடியும் சார்!'' என்று தன்னம்பிக்கை காட்டி கேட்டபடி, பேனாவை மூடிவைத்தாள் அபிராமி.

மீண்டும் ஆண்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். ''ஃபைலைப் பார்த்தால் நன்றாகத்தான் இருக்கிறது'' என்று முணுமுணுத்தார் ஜி.எம். ''ஆனால் பழைய ஏஜென்சியும் வருவார்கள்!'' என்றார்.

''தருவதாக இப்போதே வாக்கு கொடுக்க முடியாது. சில மாதிரிகள் அமைத்துக்கொண்டு, இரண்டு நாளில் வாருங்கள். அப்புறம் பார்க்கலாம்'' என்றான் சிவசந்திரன்.

விளம்பரத் தயாரிப்பு அவளுக்கே கிடைத்தது. அந்த வகையில், அவனை அடிக்கடி சந்திக்கவும் நேர்ந்தது. முழுக்க முழுக்க தொழில்ரீதியான, அதே சமயம் மனிதத் தன்மையுடன் கூடிய தொடர்பு. அதைப் போய் அசிங்கப்படுத்திவிட்டாளே, அந்தக் கோணல்புத்திக்காரி!

6

சிவசந்திரன் பாராட்டிய அபிராமியின் வார்த்தைகளைக் கொண்டே, விளம்பரம் அமைந்தது. கூடவே, இலவச மாதிரிப் பாக்கெட்டுகள் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

விளம்பரம் பற்றிய அடிப்படை விவாதங்களின்போது, பெரும்பாலும் சிவசந்திரன் கூடவே இருந்தான். 'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை' என்று பயிர் வளர்ப்பைப் பற்றிச் சொல்லுவார்கள். அதில் நம்பிக்கை உடையவன் போலும் என்று அபிராமி எண்ணினாள்.

விவாதம் என்று பெயரே தவிர, பெரும்பாலும் இருவருக்குமே ஒருமித்த கருத்துதான் இருந்தது. ஜி.எம்.மிடம் அபிப்பிராயம் கேட்டுக் கொண்டான். எதிலும், தான் சொன்னதுதான் வேதம் என்று நிற்கவில்லை. எனவே, விளம் பரமும் சிறப்பாகவே அமைந்தது.

விளம்பர அட்டையை, அவனுடைய தந்தையிடம் காட்ட, அவனே அழைத்துச் சென்றான். அவர் – சிதம்பரம், நிறுவனத்துடைய எம்.டி. பெரும்பாலான பொறுப்புகளை மகன் வசமே விட்டிருந்தபோதும், அவரிடம் தெரிவிக்காமல் முக்கியமான எதையும் சிவசந்திரன் செய்வதில்லை.

அவரைக் காண சென்றபோது, அபிராமியின் தோற்றத்தில் சிவசந்திரன் செலுத்திய கவனம், அவளை வியப்படையச் செய்தது.

''எதற்கும், இன்று ஒரு நாள் மட்டும் சேலை கட்டிக்கொண்டு வரலாமே, அபிராமி. அப்பா பழமைவாதி என்று சொல்ல முடியாது. ஆனால், முதல் அபிப்பிராயம் நன்றாக இருக்கட்டுமே'' என்றான்.

தன் தோற்றத்தை பொறுத்தவரையில், சரியான முறையில் இருப்பதாகத்தான் அபிராமி எண்ணியிருந்தாள். அதிக விலையுள்ளதாக இல்லாவிட்டாலும், கவுரவமாகத் தோன்றும் ஆடைகள்.

'ரேயனி'லிருந்து வெளியேறி, கொஞ்சம் சம்பாதிக்கத் தொடங்கியதும் அபிராமி முதலில் கவனம் செலுத்தியது, அவளது தோற்றத்தில்தான்!

சர்தார்ஜி ஜோக்கில் வருகிற மாதிரி, ஆடம்பர ஆடைகளுக்குத்தான் உள்ளே வர அனுமதி என்று இல்லாவிட்டாலும், அவள் அணியும் எளிய ஆடைகள், மற்றவர்களிடம் மரியாதையை தூண்டவில்லை என்பதை, அவள் மைத்ரேயனிடம் பணிபுரிந்த காலத்திலேயே உணர்ந்திருந்தாள். 'இவள்தானே, கொஞ்சம் காத்திருக்கட்டுமே' என்ற மனோபாவம் நிறைய பேருக்கு இருந்தது.

எனவே, வருமானத்தில் பணம் எடுக்க முடிந்த உடனே அதைத்தான் கவனித்தாள். கிடைத்த நேரத்தில், அலைந்து திரிந்து தன் நிலைமைக்குப் பொருத்தமானவையாக தேர்ந்தெடுத்து வாங்கினாள்.

அவற்றுள் வசதி கருதி, அபிராமி அணிந்தவை பெரும்பாலும் சுடிதார் செட்டுகள்தான்.

விளம்பரம் பற்றிய பேச்சு வார்த்தைகளுக்காக அவள் இந்த அவலுவலகத்துக்கு வந்த ஆறு தரமும் அவள் அணிந்திருந்ததும் சுடிதார்தான்.

இந்த ஆறு சந்திப்புகளில் அவளுக்கு சிவசந்திரனை மிகவும் பிடித்துப் போயிருந்தது.

தட்ப வெப்பத்துக்கு ஏற்றவாறு பானம் கொண்டுவரச் சொல்வதும், உணவு வேளையாகிவிட்டால் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்வதும், வயதில் பெரியவரான தலைமை நிர்வாகிக்கு மதிப்புக் கொடுத்து, அவரது கருத்தை அறிவதும்... எல்லாமே, அவன் மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

'என் சேவைக்காகத்தான் நீங்கள் அத்தனை பேரும். உனக்கு பசித்தாலும் பட்டினி கிடந்தாலும் எனக்கு அக்கறையில்லை.' என்று காட்டிய மைத்ரேயனிடம் வேலை பார்த்தவளுக்கு, சிவ சந்திரன் தெய்வப் பிறவியாகத் தோன்றினான்.

விவாதத்தின்போது, பெரியவரின் கருத்தை ஏற்க மனம் இல்லா விட்டால்கூட, அதை அழகாக மறுப் பான். 'நல்ல ஐடியா, அங்கிள். ஆனால், இதோடு ஒத்துப் போகாது. எனவே, அடுத்து வரும் எதிலாவது சேர்த்துக் கொள்ளுவோம்' என்று புன்னகையோடு கூறுவான்.

தோற்றத்தைப் போலவே, குணத்திலும் சிறந்தவன் என்று எண்ணினாள். எத்தனையோ விஷயங்களை தெரிந்து வைத்திருந்த அவனுடன் பேசிக் கொண்டிருப்பது, அவளுக்கு நாள் முழுவதுக்குமே உற்சாகத்தை அளித்தது.

இந்தப் பேச்சு வார்த்தைகளினூடே அவர்கள் தற்செயலாகவும் இருமுறை சந்திக்க நேர்ந்தது.

அபிராமி விளம்பர பொறுப்பேற்றிருந்த ஒரு துணிக்கடையின் திறப்புவிழாவுக்கு சிவசந்திரனும் வந்திருந்தான்.

அவளைப் பார்த்ததும், ''இந்த ராசிபலன் எல்லாம் உண்மைதான் போலும்'' என்று அப்பாவியாய் ஆச்சரியப்பட்டான்.

''ஏன்? அதில், என்னை சந்திப்பீர்கள் என்று போட்டிருந்ததா?'' என்று சிரித்தாள், அவள்.

திறந்து வைக்க வந்திருந்த சினிமா நடிகர்களை எல்லோரும் மொய்த்துக் கொண்டிருக்க, அழைத்து விட்டார்களே என்று வந்து, போரடித்து நின்றுகொண்டிருந்தவளுக்கு அவனைக் கண்டதும், குதூகலமாக இருந்தது.

''ஊகூம். எதிர்பாராத அதிர்ஷ்டம் என்றுதான் போட்டிருந்தது. அடடா! ஒரு லாட்டரிச் சீட்டுகூட வாங்கி வைக்கவில்லையே. இன்று குலுக்கலாமே என்று வருத்தப்பட்டுக் கொண்டே வந்தேனா? பார்த்தால், அதிர்ஷ்ட தேவதை எதிரிலேயே வந்து நிற்கிறது, உன் உருவில்.''

அவன், அவளை ஒருமையில் குறிப்பிட்டது அப்போதுதான். ஆனால், அவனது பேச்சை ரசித்து சிரித்துக் கொண்டிருந்த அபிராமி, அதைக் கவனிக்கவில்லை.

அவள் சிரித்து முடிக்கும் வரையிலும் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, சிவசந்திரன் அந்த ஒருமையைப் பயன்படுத்தியதற்காக மன்னிப்புக் கேட்டான்.

''அதில் ஒன்றும் இல்லை. உங்களை விட நான் சின்னவள்தானே? அதோடு, நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தேயிராத அந்நியர்களா?'' என்று, தொடர்ந்து ஒருமையில் அழைக்க அனுமதி கொடுத்தது அபிராமிதான்.

''அந்நியர்கள் இல்லைதானே? பின்னே, நீயும், மற்ற நண்பர்களைப் போல, 'சிவா' என்று என்னைக் கூப்பிடு.'' என்றான் அவன். அப்புறமாக, சினிமாக்காரர்களோடு மற்றவர்கள் போட்டோவும், விடியோவும் எடுத்துக் கொண்டிருக்க, சிவா எடுத்து வந்த பெப்சியை மெல்ல அருந்தியபடி, இருவருமாக, வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பிலிருந்து, மெகா சீரியல் வரை, பேசுவதற்கு விஷயங்களா இல்லை?

அடுத்த சந்திப்பு, ஒரு சூப்பர் மார்க்கெட்டில் நிகழ்ந்தது!

அப்போதும், அவனோடு அபிராமியால் லகுவாக பேச முடிந்தது.

துருவுதல், ஆராய்தல் இன்றி அவன் பேசிய விதம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட, எப்போதுமே அவன் அவளது நலத்தில் அக்கறை கொண்ட நண்பன் என்ற கருத்து உருவாயிற்று.

எனவே, சிவசந்திரனோடு எதிர்ப்பேச்சு பேசி வாதமிட மனமில்லாமல், அவனது விருப்பப்படி சேலையே கட்டிக்கொண்டு வந்தாள்.

ஆனால், எம்.டி. சிதம்பரத்தின் அறைக்குள் சென்று, அறிமுகங்கள் முடிந்ததும், ''அவ்வப்போது சுரிதாரில் பார்த்தது, சேலைக்கு மாறியதும் வேறு மாதிரி தெரிகிறது.'' என்று அவர் விமர்சிக்கவும், இருவருமே சற்றுத் திணறிப் போயினர்.

''அபிராமியை ஏற்கெனவே பார்த்திருக்கிறீர்களா, அப்பா... எப்போது?'' என்று, பேச்சைத் திசை திருப்ப முயன்றான் மகன்.

''ஏன்? நம் அலுவலகத்துக்குள் வந்து போய் இருப்பவர்கள், கண்ணில் பட்டிருக்கமாட்டார்களா?'' என்று, மகனுக்கு பதில் சொன்னபோதும், சிதம்பரத்தின் பார்வையில் விசாரணை இருந்ததை அபிராமி உணர்ந்தாள்.

எனவே, ''கோயிலுக்குச் செல்லும்போதும், திருமணம் போல மரியாதைப்பட்ட விழாக்களில் கலந்துகொள்ளும் சமயங்களிலும் சேலைதான், சார்.'' என்று முறுவலித்தாள், அவள்.

பெரியவர் முகத்தில் மாறுதல் இல்லை. ''பரவாயில்லை. நன்றாகவே பேசுகிறாய். ஆனால், இதை தொழிலோடு நிறுத்திக்கொள். வாழ்க்கையில் பயன்படுத்திவிடாதே!'' என்று எச்சரித்தார் அவர்.

குற்றம் சாட்டுகிறாரா? ஏன்?

சிதம்பரத்தை நேராக நோக்கி, ''புரியவில்லையே, சார்?'' என்று கேட்டாள் அபிராமி.

அவரும், ஒரு கணம் அவளையே பார்த்திருந்துவிட்டு, ''வீட்டில் இப்படிப் பேசினாயானால், கணவன் ஒரு விஷயத்தில் வாய்திறக்க முடியுமா? நல்லதற்குக்கூட சொல்ல தைரியம் வராதே.'' என்று லகுவாகக் கூறினார்.

''கணவனா?''

ஏதோ புரியாத மொழி பேசியது போலத் திகைத்துவிட்டு, ''இப்போதைக்கு, அந்தப் பேச்சுக்கே இடமில்லை சார்! இந்தத் தொழிலை நிலைநிறுத்த வேண்டும் என்பது தவிர, வேறு எதற்கும் என் மனதில் இடமே கிடையாது.'' என்று அபிராமி அறிவிக்க, அதன்பின் விளம்பரத்தைப் பற்றி, எல்லோரும் அலசி ஆராய்ந்தார்கள்.

அவரும் ஒப்புதல் அளித்துவிட, அப்புறம் மீடியா பற்றி பேசினார்கள்.

எந்தெந்தப் பத்திரிகைகளில், எத்தனை தடவை விளம்பரம் செய்வது என்பது போன்ற விவரங்களைப் பேசி முடித்துவிட்டு, அபிராமி நிம்மதியோடு கிளம்பினாள்.

மிகுந்த மகிழ்ச்சியோடு என்றுகூடச் சொல்லலாம். இதுவரை அவள் கைக்கு வந்த அத்தனை விளம்பரங்களையும்விட இது அளவிலும், தொகையிலும் பெரியது. விளம்பரங்கள் ஒழுங்காகப் பிரசுரமானால், அவளுக்கும் கணிசமான தொகையாக சுமார் எழுபத்தைந்தாயிரம் வரை கிடைக்கும். அதில், அவளது அலுவலகத்துக்கு வேண்டிய பொருட்கள் அத்தனையும் வாங்கிவிடலாம். இன்னும் அவளை வழியனுப்பும் வகையில் கூட நடந்த சிவசந்திரன் திடுமென ''ஆமாம்... அதென்ன கணவனா என்று அப்படிக் கேட்டாய்?'' என்று வினவினான்.

வேறு கனவில் மூழ்கியிருந்த அபிராமி, அப்போதும் திகைத்தாள். ''எப்படி?''

''இதே பார்வைதான். என்னமோ, கணவன் என்று ஒரு வார்த்தை அகராதியிலேயே இல்லாததுபோல. அறிந்தே இராத, அறிமுக மற்ற சொல்லைக் கேட்டது போல. குடும்பம் என்றால் கணவன், மனைவி, குழந்தைகள் என்பதுதானே? உன் தாய், தந்தை, நீ போல, உனக்கும் ஒரு குடும்பம் அமையும்தானே? அதுபற்றி எண்ணிப் பார்த்ததே இல்லாத மாதிரி பேசி விட்டாயே!'' என்று அவள் ஏதோ அநியாயம் செய்துவிட்டது போல குறைபட்டான் சிவசந்திரன்.

ஒரு கணம் அவனை வெறித்தாள் அவள். பிறகு ''எனக்குத் தெரியாது'' என்றாள் மொட்டை யாக.

''என்னது தெரியாது?''

''குடும்பம் பற்றி. அம்மா, அப்பா, குழந்தைகள், ஒரு குடும்பம் என்று எதுவும் எனக்குத் தெரியாது!''

''அபிராமி.''

அவன் திகைத்து நிற்க, ஒருவித வெற்றுக் குரலில் அவள் தொடர்ந்தாள். ''கணவன் மனைவி, அப்புறம் அவர்களுடைய குழந்தைகள் என்கிற குடும்ப அமைப்பு பற்றி அதனுள் வாழ்ந்து நான் அறிந்ததில்லை. எனக்கும் ஒரு தாயும் தந்தையும் இருந்திருப்பார்கள். அல்லாமல் நான் பிறந்திருக்க வழியில்லை. ஆனால், அந்த தாய், என்னைப் பெற்றவள், என்னை தன் கணவனுக்குப் பெற்றாளோ, காதலனுக்குப் பெற்றாளோ அல்லது...''

அவளது உடல் ஒருதரம் நடுங்குவதைக் கண்டதும், ''வேண்டாம் அபிராமி'' என்றான் அவன்.

''எப்படி பெற்றிருந்தபோதும் என்னைப் பெற்றவளுக்கும் நான் வேண்டியிருக்கவில்லை. அறுபட்ட தொப்புள் கொடி காய்ந்து விழுமுன் என்னை ஆசிரம வாசலில் கண்டெடுத்ததாகச் சொன்னார்கள். கண்டெடுக்குமுன் நாய் நரி எதுவும் என்னைத் தின்னாதது அதிசயம் என்பதோடு, அப்படி தின்றிருந்தாலும் அதைப் பற்றி என் பிறப்புக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு அக்கறை கிடையாது என்பதும், நான் துருவித் துருவி விசாரித்து தெரிந்துகொண்ட விஷயமே. அதாவது என் தாய், தந்தை, நான் என்று எந்த குடும்ப வாழ்வையும் நான் அனுபவ ரீதியாக அறிந்ததில்லை.''

''ஸாரிம்மா. எனக்குத் தெரியாது'' என்றான் சிவசந்திரன்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள் அபிராமி. ''எதற்கு வருத்தம்? நானே இதுபற்றி வருத்தப்பட்டதில்லை. ஆச்சரியம் மட்டும்தான். பூனை, நாய்கூட அததன் குட்டிகளை எப்படிப் பாதுகாக்கின்றன! இப்படி உதற இவர்களால் மட்டும் எப்படி முடிந்தது என்று வியப்பாக இருக்கும். மற்றபடி, நாம் அறியாத ஒன்று நமக்கு இல்லையே என்ற ஏக்கம் எப்படி ஏற்படும், சொல்லுங்கள்.''

''குடும்பத்தினர் பற்றி நீ பேசாதபோது இந்த மாதிரி இருக்கக்கூடும் என்று நான் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.''

சிறு அமைதிக்குப்பின் ''பொதுவாக என் மனதில் இருப்பதை நான் யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை சிவா. பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு தோன்றியதும் இல்லை.

ஒளிவுமறைவு எனக்குப் பிடிக்காது என்றாலும் நானாக யாரிடமும் என் கதையை சொன்ன தில்லை. என்னவோ உங்களிடம் சொல்ல... நீங்கள் என்னைப் பற்றி இல்லாததை நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று தோன்றவே விளக்கினேன். அவ்வளவுதான்'' என்றவள், ''சரி சரி... என்னைப் பற்றிய பேச்சு போதும். இப்போது இந்த விளம்பரம் பெரிய சஞ்சிகைகள் மட்டுமின்றி சுமார் முப்பதாயிரம் பிரதிகள் மட்டுமே விற்கும் மாத, வாராந்திரப் பத்திரிகைகளிலும் வரவேண்டும் என்பதில் மாற்றம் இல்லையே?'' என்று கேட்டாள்.

அவளை ஆழ்ந்து நோக்கிவிட்டு பேச்சை திசைதிருப்ப அவனும் அனுமதித்தான். ''ஆமாம்... தமிழகத்தில் எந்த பத்திரிகையை எடுத்துப் பிரித்தாலும் நம் விளம்பரம் கண்ணில் படவேண்டும். மூன்று, ஐந்து அல்லது ஏழாம் பக்கங்களில் வருமாறு முன்பதிவு செய்துவிடு. முடிந்தவரை அதிகப்படி செலவு இல்லாமல்.''

''ஆனால், சினிமா பத்திரிகைகள் வேண்டாம். அப்படித்தானே? பார்த்துக் கொள்கிறேன். விளம்பரம் வருகிற சமயத்தில் இலவச சாம்பிள் கைக்குக் கிடைக்கிற மாதிரி நீங்கள் ஏற்பாடு செய்துவிடுங்கள்.''

அபிராமியும் சிவசந்திரனும் சொந்த விஷயம் என்று பேசியது அந்த ஒரு சமயத்தில் மட்டும்தான். அடுத்து தொடர்ந்த பல நாட்கள், விளம்பர அட்டை தயாரிப்பிலும், பத்திரிகைகளில் முன்பதிவு செய்வதிலும் அந்தந்த பத்திரிகைகளுக்கு ஏற்ற வகையில் பாசிட்டிவ் எடுத்து அனுப்புவதுமாக அபிராமியின் அலுவலகம் மூச்சு விட நேரமில்லாமல் வேலை செய்தது.

சிவசந்திரனும் சோப்புத் தூளை தமிழ்நாடு முழுவதற்கும் அனுப்புவதிலும், இலவச சாம்பிள்களை விநியோகம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தான்.

எந்தெந்த பத்திரிகைகளில் விளம்பரத்துக்கு இடம் முன் பதிவு செய்தாயிற்று; எந்தெந்த பத்திரிகைகளில் குறிப்பிட்ட இடம் கிடைக்காததால் மாற்று இடங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை தெரிவிக்க மட்டுமே அபிராமி, சிவசந்திரனை சந்தித்தாள். அதற்கு மேல் நின்று பேச இருவருக்குமே நேரமில்லை.

அப்படியிருக்க வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்றில்லாமல் எப்படி இப்படிப் பேச முடிந்தது? இவளுக்கு கூட ஒருநாள் பதில் கொடுக்க முடிந்தால் நன்றாக இருக்கும். அவளது பேச்சில் உண்மை இல்லை என்று எப்படியும் ஒரு நாள் அவளுக்கு தெரியத்தான் போகிறது. அன்று தானாக, அவள் வாய் மூடிவிடத்தான் போகிறது. அதுவே நல்ல பதில்தான்.

ஆனால், ஒன்றுமே இல்லாமல் வெறும் காற்றை ஊதியே புகையும் நெருப்பும் கிளப்பிவிடும் இவளைப் போன்றவர்களின் வாய் என்றேனும் மூடக்கூடுமா? இதில்லாவிட்டால் இன்னொன்றைக் கிளப்ப.

அப்படி கிளப்பிவிட்டவர்கள் இருக்கிறார்கள். அவளையும் சிவசந்திரனையும் பற்றி புரளி பேசிய அந்தப் பெண் அவளுக்குத் தெரிந்தவள்.

அந்தக் குரல், அவள் பேசிய பாணி... சுரேகா! கடவுளே!

பள்ளியிலும், கல்லூரியிலும் எத்தனை முறை இந்த சுரேகாவால் அபிராமி மனம் நொந்து கொதித்திருக்கிறாள். கடைசியில் இங்கேயுமா துரத்திக்கொண்டு வந்துவிட்டாள்.

இவள் முன் நிமிர்ந்து காட்ட வேண்டும் என்றுதானே அபிராமி இவ்வளவு யோசித்து இப்படி உழைப்பதே. ஆனால், அவளது இப்போதைய பேச்சையும் மிக எளிதாகவே அபிராமியால் பொய்யாக்கிவிட முடியும். சிவசந்திரனை விட்டு அவள் விலகியிருந்தாலே போதுமே.

7

சிவசந்திரனை சந்திக்காமல் விலகியிருப்பது, அப்படி ஒன்றும் சிரமமாயிராது என்றுதான் முதலில் அபிராமி நினைத்தாள்.

விளம்பர விவரங்கள் தெரிவிக்கவும் ஒப்புதல் பெறவும் மகாலட்சுமியை அனுப்பினாலே போதுமானது. அல்லது பார்கவி அல்லது சுமனா!

அவளது அலுவலகத்திலும் இப்போது மூன்று பேர் வேலை பார்க்கிறார் களே. விளம்பர தயாரிப்பிலும் முன்பதிவு செய்வதிலும் முக்கிய வேலைகள் முடிந்துவிட்டதால், அபிராமியே நேரில் போய் சிவசந்திரனை சந்தித்துப் பேசிதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அவளே சென்று பேசினால் நன்றாகத்தான் இருக்கும். நேரடி பேச்சினால் வேலை விரைவாக நடப்பதோடு மனதுக்கும் உற்சாகம் கிடைக்கும். ஆனால் மகாலட்சுமி, பார்கவி, சுமனா இவர்களில் யாரொருவர் சென்றாலும் வேலை நடந்துவிடும் எனும்போது அவசியமற்று அவனை சந்தித்து அவள் அபவாதம் ஏற்பானேன்?

அதோடு, அபிராமிதான் என்ன, வேலையில்லாதவளா? இப்போதுகூட, பரந்தாமன் சாரின் அடுத்த விளம்பரம் தயாரிப்பில் இருக்கிறது. இரண்டு நாளில் அடிப்படை வரைபடத்தை அவரிடம் காட்ட எடுத்துச் செல்ல வேண்டும்.

ஆனால், 'சுலபம்' தயாரிப்புகளுக்கு விளம்பரம் தயாரிப்பதும் சுலபமே! குடும்பப் பாங்காய், தாய் தந்தை பிள்ளைகள் என்று வீட்டுக்குள் நடக்கும் ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, அழகாகச் செய்துவிடலாம்.

தாய், தந்தை, குடும்பம்! அதைப் பற்றி அபிராமிக்கு என்ன தெரியும்? அதுபற்றி அவள் குறிப்பிடுவது எல்லாம் புத்தகங்களை படித்துவிட்டு கற்பனையில் உருவாக்குவதுதான்! அந்த கற்பனை போன்ற ஒரு குடும்ப வாழ்வு அவளுக்கு என்றேனும் அமையுமா?

மனதை கட்டுப் படுத்திக்கொண்டு, பார்கவியை 'வெண் புறா' நிறுவனத்துக்கு அனுப்பிவிட்டு, அபிராமி அடுத்த வேலையில் பிடிவாதமாக கவனத்தை செலுத்தினாள்.

'சுலபம்' விளம்பரங்களில் கிட்டத்தட்ட பாதியளவு இப்போது அபிராமியிடம் வந்துவிட்டது. அவளும் முதல் விளம்பரத்தை ஒட்டியே மற்றவைகளையும் இனிய

தொடர்கதை போல அமைத்து வந்தாள். பெண் பார்த்துவிட்டு சென்றவர்களின் பதிலில் தொடங்கியவள் இப்போது பிள்ளை பள்ளிக்குச் செல்லும் வரை வந்திருந்தாள்.

அதை சிலர் பரந்தாமனிடம் பாராட்டவே, அவரும் தன் பங்குக்கு மகிழ்ச்சி தெரிவித்ததோடு பொருள்களின் விளம்பரத்திலும் ஒரு பகுதியை அபிராமியிடமே கொடுத்தார்.

வருவதை தக்க வைத்துக் கொள்வதோடு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அபிராமி முன்னிலும் அதிக கவனத்துடனே வேலை செய்ய வேண்டியிருந்தது. செய்தாள்.

செய்யும் வேகத்தில் மனச் சஞ்சலங்களை ஒதுக்கி வைக்கவும் முடிந்தது.

முதல் தடவை பார்கவியைத்தான் அனுப்பினாள். தெளிவாக பேசும் திறமை அவளுக்கு அதிகம் என்பது அபிராமி கருத்து.

ஆனால், விளம்பரம் வந்த பத்திரிகைகளை பார்கவி நீட்டியதுமே, ''அபிராமிக்கு உடம்புக்கு என்ன? மருந்துவரிடம் காட்டினாளா?'' என்று சிவசந்திரன் கரிசனமாகக் கேட்டதாக அவள் வந்து கூறவும் அபிராமிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

''உங்களுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை என்று நான் சத்தியம் பண்ணாத குறை. அவ்வளவு வலியுறுத்தி சொன்ன பிறகுதான் சும்மா இருந்தார். இல்லாவிட்டால் உங்களை டாக்டரிடம் அழைத்துப்போக அவரே வந்திருப்பார்'' என்று வியப்பும் சிரிப்புமாக பார்கவி விவரித்தபோதும் மற்றவர்களோடு சேர்ந்து முறுவலித்தபோதும் உள்ளுர உணர்ந்தது வேறுமாதிரி!

உடல்நலக் குறைவு தவிர, மற்றபடி அவள் நிச்சயம் வந்திருப்பாள் என்று அவ்வளவு உறுதியாக நினைத்திருக்கிறானே.

அப்படி நம்புகிறவனை ஏமாற்றி விட்டதுபோல ஒரு வருத்தம். அவன் கரிசனமாகக் கேட்டதில் ஓர் இதம். கூடவே, அவனது வேலை என்றால் கடைசியாக கொண்டுபோய் கொடுப்பதைக்கூட அவளேதான் செய்யவேண்டும் என்று அவன் எப்படி எதிர்பார்க்கலாம் என்று சிறு கோபமும் எழுந்தது. இவனது நிறுவனம் தவிர, அவளுக்கு வேறு வாடிக்கையே இல்லை என்றா எண்ணினான்? மற்றவர்களின் வேலையை யார் பார்ப்பதாம்?

இந்தக் கோபம், மற்ற பொறுப்புகளோடு சுரேகாவின் வார்த்தைகளை பொய்யாக்கும் வேகமும் அபிராமிக்கு இருந்ததால், அடுத்த 'செட்' பத்திரிகைகளைக் கொண்டு கொடுக்கவும் பார்கவியையே அனுப்பினாள்.

ஆனால், போன கையோடு பார்க்கவி திரும்பி வந்தாள்.

''உங்களை குறைத்துக் கூறுவதாக எண்ண வேண்டாம். ஆனால், எங்களோடு அபிராமிதான் விளம்பரங்களைத் திட்டமிட்டது. இவற்றில் எதெது சரி எதெது குறை என்பது அவளுக்குதான் நன்றாக தெரியும். அதனால், அபிராமிக்கு நேரமிருக்கும்போது இந்த 'ஸ்பெசிமன் காப்பி'களை எடுத்துவரச் சொல்லுங்கள் அல்லது நேரம் கிடைக்கும்போது, உங்கள் அலுவலகத்துக்கு நானே வருகிறேன் என்று சொல்லுங்கள்!'' என சிவசந்திரன் கூறிவிட்டானாம்.

''ரொம்ப மரியாதைப்பட்ட மனிதர், அபிராமி. சின்னஞ்சிறு விளம்பரத்தை தந்துவிட்டு கைகட்டி வாய் பொத்தி நிற்கவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களையே பார்த்துவிட்டு, 'குறைத்துக் கூறுவதாக எண்ண வேண்டாம்' என்று அவர் மரியாதையுடன் காரணம் சொன்னதைப் பார்த்து அப்படியே உருகிவிட்டேன்'' என்றாள் பார்கவி. ''பந்தா காட்டாமல், அவரே வருவதாக வேறு சொன்னாரே!''

பார்கவி சொன்னதை மெய்யாக்குவது போல அன்றே சிவசந்திரன் வந்துவிட, அங்கிருந்த இரு பெண்களுமே சற்று திணறிப் போயினர். மகாலட்சுமியும் சுமனாவும் வெளியே சென்றிருந்தனர் .

''வாருங்கள்!'' என்று லேசாக தடுமாறிய அபிராமி, பார்கவியை பார்த்தாள்.

அவளது கண்ஜாடையை கவனித்த சிவசந்திரன், ''ஊகூம், எனக்கு எதுவும் வாங்கிவர வேண்டாம், மிஸ் பார்கவி. பத்து நிமிஷத்தில் நான் 'ஹோட்டல் சோழா'வில் இருந்தாக வேண்டும். அபிராமி, உனக்கு இப்போது கொஞ்சம் அவகாசம் இருக்குமில்லையா? ஐந்து நிமிஷம் போதும். இல்லையென்றால் சொல்லிவிடு. நான் திரும்பி வரும்போது பார்க்கலாம். ஆனால், ஏழு மணி வரை நீ காத்திருக்க நேரும்'' என்றவாறு சுற்றுமுற்றும் பார்த்தான்.

சற்றே பெரிய அறைதான். நிர்வாக வசதிக்காக இடையே தடுப்பு வைத்திருந்தால் ஓரளவு சின்னதாகியிருந்த இடம். சிவசந்திரனின் நெடிய உருவத்தால் இன்னமும் குறுகி விட்டதுபோல தோன்றியது.

'லில்லிபுட்' குள்ளர்கள் வசிக்கும் இடத்துக்குக் 'கலிவர்' வந்த மாதிரி என்று எழுந்த கற்பனையை ஒதுக்கிவிட்டு அபிராமி சிவாவை கவனித்தாள்.

கையோடு கொண்டு வந்திருந்த பத்திரிகைகளை வைக்க இடம் தேடிக் கொண்டிருந்தான் அவன்.

பொதுப் பகுதியில் கிடந்த மூன்று சிறு மேஜைகளும் ஃபைல்கள், படங்கள், காகிதங்களால் நிரப்பப்பட்டிருந்தன.

''உள்ளேயும் சின்ன இடம்... ஆனால், இடம் ஒதுக்க முடியும். வாருங்கள்'' என்று அவனை தனது பகுதிக்கு அழைத்துச் சென்றாள் அபிராமி.

''மேஜைகள் நிரம்பியிருப்பதை பார்த்தால் வளர்ச்சியின் அறிகுறி தெரிகிறது. சந்தோஷம்! வேலைக்கு இன்னும் சிலரும், பெரிய இடமும் விரைவிலேயே தேவைப்படும். தொடக்கம் சிறியதாக இருப்பதில் தவறில்லை. என் தந்தை முதலில் சோப்புத்தூளை கையால் கலந்துதான் விற்றாராம். அந்தத் தொட்டி இன்னும் எங்களிடம் இருக்கிறது. நீ நம் வீட்டுக்கு வரும்போது காட்டுகிறேன். அதை பார்த்துவிட்டு உடனே இப்போதைய ஃபேக்டரியையும் பார்க்க வேண் டும். பார்க்கும்போது, முயன்றால் முடியாதது உலகில் எதுவுமில்லை என்கிற தைரியம் வந்துவிடும்!''

ஒளிவுமறைவு இன்றி தங்கள் குடும்பத்தின் பழைய நிலையை அவன் சொன்ன விதம் அபிராமியை கவர்ந்தது.

தன் மேஜையை வேகமாக அவள் ஒதுக்கிக் கொடுக்க, கையிலிருந்த பத்திரிகைகளை அங்கே பரப்பினான். ''இந்த ஆறும், நாம் நினைத்த மாதிரி அப்படியே வந்திருக்கின்றன

அபிராமி. ஆனால், இந்த இரண்டிலும் பார். நம் 'ட்ரேட் மார்க்' மேலேயே கறுப்படித்திருக்கிறது. இரண்டு விளம் பரங்களையும் திரும்ப போடச் சொல்ல வேண்டும்! இந்தப் பத்திரிகையைப் பார். மஞ்சள் அதிகம் பரவி எல்லா கலரும் மாறிவிட்டது. இதற்கும் 'மேக் குட்' கேட்க வேண்டும். அது அடுத்த செட் விளம்பரத்தன்று வந்துவிடாமல் பார்த் துக்கொள். மற்றபடி எல்லாம்... என்ன?''

அவளது கேலி கலந்த பார்வையைக் கவனித்துவிட்டு அவன் கேட்க, அவள் சொன்னாள். ''இதெல்லாம் செய்தாயிற்று என்றுதான் பார்கவியிடம் சொல்லி அனுப்பினேன். நீங்கள் அவளை பேசவே விடவில்லை போலிருக்கிறது'' என்றாள் சிரிப்பை உள்ளடக்கிய குரலில்.

லேசாக அசடு வழிந்ததை சமாளித்து, ''உன் உதவியாளை குறை சொல்லவில்லை. ஆனால், அப்படி முகத்தில் புன்னகையை பூசிக்கொண்டா 'இரண்டில் கறுப்படித்திருக்கிறது' என்பார்கள்? அதனால்தான் பத்திரிகைகளை வைத்துவிட்டு போகச் சொன்னேன்!'' என்றான் அவன்.

''அடுத்த முறை இரண்டு கைக்குட்டை நனையும் அளவு கண்ணீர் வடித்துவிட்டு சொல்லச் சொல்கிறேன்.''

''ஐயோ வேண்டாம்! எங்கள் சோப்புத் தூளில் கண்மைக் கறை போகுமோ என்னவோ? கைக்குட்டை வீணாகிவிடப் போகிறது!''

''இருந்திருந்து உங்கள் சோப்புத்தூளிலா நாங்கள் துணி துவைப்போம்? அதிலும் முகம் துடைக்கும் கைக்குட்டை!''

பதிலுக்குப் பதில் பேசிக் கொண்டிருந்தபோதே, இருவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

குரலைத் தணித்து, ''இப்படியெல்லாம் அந்தப் பெண்ணிடம் பேச முடியுமா? அவள்தான் இப்படி பேசுவாளா? அடுத்த முறை நீயே வந்துவிடு அபிராமி!'' என்றான்.

பார்கவியை அனுப்பியது எதற்காக என்பது நினைவு வர, அபிராமி மனம் வாடியது. ஆனால், அந்த காரணத்தை இவனிடம் சொல்வதும் சரியாகப்படவில்லை! அப்படி ஓர் எண்ணத்தை, அவன் மனதிலும் அவளே விதைப்பது போல ஆகிவிட்டால்?

தப்பர்த்தம் தேடத்தொடங்கினால், சாதாரண வார்த்தைகளையும் அசைவையும்கூட தவறாக எண்ணலாம்தானே?

காற்றில் துப்பட்டா விலகினால்கூட, வேண்டுமென்றே செய்ததாகத் தோன்றும்.

எதற்கு வம்பு என்று ஒதுங்கிவிட முயன்றாலும் விட மாட்டேன் என்கிறானே.

அவள் யோசனையை தவறாகக் கணித்து, ''உனக்கு வேலை அதிகமென்று புரிகிறது அபிராமி. ஆனால், நீயே வந்தால் எனக்கும் அங்கிளுக்கும் வேலை சுலபமாக இருக்கும். வருவாயல்லவா?'' என்று மேலும் வற்புறுத்தினான் சிவசந்திரன்.

இதற்கு மேலும் மறுத்தால் வேண்டுமென்றே பிகு பண்ணுவது போலாகும் என்று தோன்றவும் அபிராமி தலையாட்டி வைத்தாள். வார்த்தையில் சொல்லாமல் சுவரில் கடிகாரத்தைக் காட்டி ''உங்கள் பத்து நிமிஷம் முடியப் போகிறது. அப்புறம் 'சோழா'வில் உங்களைக் காணோம் என்று தேடப் போகிறார்கள்.'' என்றாள்.

பளீர் என்ற புன்னகையோடு விடை பெற்றுக் கிளம்பினான் அவன்.

அவன் சென்றதும் அபிராமியைப் பார்த்து சிரித்தாள் பார்கவி. ''உங்களுக்கு தைரியம்தான், அபிராமி. அவருடைய சோப்புத்தூளை இந்த வாங்கு வாங்கிவிட்டீர்களே. கோபித்துக் கொள்ளுவாரோ என்று ஒரு கணம் பயந்து விட்டேன். நல்ல மனிதராக இருக்கப்போய் அதற்கும் சிரித்துக்கொண்டே இருந்து விட்டார். ஆனால், நினைத் ததை சாதித்தும் விட்டார். இனி, நீங்கள்தானே 'வெண் புறா'வுக்குப் போவீர்கள் போல?'' என்று நகைத்தாள்.

அவளோடு சேர்ந்து சிரிக்கும்போதே கன்னப் பகுதியில் சற்று கதகதப்பாக உணர்ந்தாள் அபிராமி!

தோற்றுவிட்ட உணர்வு காரணமாக இருக்கக்கூடும். அதில் வருத்தமோ கோபமோ இல்லாதது அவளுக்கே ஆச்சரியம்தான். ஆனால், தளர்நடை போடும் அவளது நிறுவனம் வளர்வதற்குரிய ஊட்டச் சத்தான வருமானம் தாராளமாக வருகிறது எனும்போது, வருத்தமோ கோபமோ எப்படித் தோன்றும்? அதோடு, பார்கவி சொன்னது போல, அந்த அலுவலகத்தில் எல்லோரும் மரியாதையாகவும் நடத்துவார்கள். பிச்சை போடுகிற மாதிரி 'இன்று போ, நாளை வா' என்று விரட்ட மாட்டார்கள். ஆனால்...

ஆனால், இந்த சுரேகா இப்படி ஒரு கதையை, அங்கே அவிழ்த்துவிட்டிருக்கிறாளே. எத்தனை பேரிடம் சொன் னாளோ? யார் யார் நம்பினார்களோ? இனி எப்படியெப்படி நடப்பார்களோ? அதுதான் கொஞ்சம் கலக்கமாக இருந்தது.

தயக்கத்துடனே சென்றபோது. யாரிடமும் எந்த மாற்றத்தையும் காணாதது அவளுக்கு நிம்மதியை அளித்தது.

இந்த அலுவலகத்தைச் சேர்ந்த யாரிடமும் சுரேகா புளுகியிருக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தாலும் அங்கே முன் போல அபிராமி நின்று பேசுவதில்லை. வேலையை முடிந்த வரை விரைவில் முடித்துக்கொண்டு திரும்பி விடுவாள்.

நின்றால்தான் பேச்சும் சிரிப்பும்? அதுதானே கண்ட கற்பனைக்கும் கதை கட்டலுக்கும் அடிப்படை!

சிவசந்திரனின் அலுவலகத்துக்கு செல்வதை முடிந்த அளவு தவிர்த்து, அப்படியே சென்றாலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட அவளுக்கு இன்னொரு காரணமும் இருந்தது.

தனக்குத்தானே அதை ஒப்புக்கொள்ள அவளுக்குப் பிடிக்காவிட்டாலும், சுரேகாவை அங்கே சந்திக்க நேர்ந்து விடுமோ என்ற எண்ணமே அவளை விரட்டிக் கொண்டிருந்தது என்பது உண்மை! அதை குறை கூறவும் முடியாது.

இன்னமும் அந்த சுரேகா அண்ணாந்து பார்க்கும் நிலையை... ஏன், சமமாக எண்ணும் அளவுக்குக்கூட அபிராமி வளர்ந்திருக்கவில்லை. அந்த வளர்ச்சியை அடையும் வரை சுரேகாவை சந்திக்க அவளுக்கு அறவே விருப்பமில்லை.

ஆனால், அவளது விருப்பு வெறுப்பு பற்றி விதிக்கு அக்கறையே இல்லை போலும்.

ஒருமுறை சுரேகாவை நேருக்கு நேர் பார்க்க நேராமல் திரும்பினாலும் அடுத்த தடவையே சந்திக்க நேர்ந்தது.

இயல்பாக சிவசந்திரன் அறிமுகம் செய்து வைத்தான்.

பழசை ஒதுக்கி, ''தெரியும். ஒரே பள்ளியில்தான் படித்தோம்'' என்று அபிராமி முறுவலித்தாள்.

யோசிக்கும் பாவனையில் முகம் சுளித்த சுரேகா, ''அப்படியா? உன்னைப் பார்த்த நினைவே இல்லையே!'' என்று முகத்தில் அடித்தாற்போலக் கூற, திகைத்தாள்.

8

சுரேகாவின் உள்ளம் எரிமலையாக கனன்று கொண்டிருந்தது.

'ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடாது' என்று அவளுடைய பாட்டி அடிக்கடி ஒரு வாசகம் சொல்லி எல்லோருக்கும் எரிச்சல் மூட்டுவதுண்டு. அதைப் போல, இந்தச் சனியன் அபிராமியிட மிருந்து தனக்கு விடுதலையே கிடையாதா என்று அவள் மனம் குமுறிக் கொந்தளித்தது. எங்கே போனாலும் தேடி வந்து தொல்லை கொடுக்கிறாளே!

வீட்டின் அருகில் தொழிற்சாலை இருந்தால் பெண்டாட்டி பிள்ளைகளை அவ்வப்போது வந்து பார்த்து விட்டுப் போகலாம் என்று அவளுடைய தந்தை, நகரத்துக்கு வெளியே வீட்டை கட்டியது முதல் அநியாயம்.

அங்கே, பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடம் என்று கண்ட பனாதைகளோடு படிக்க வைத்தது அடுத்த அநீதி.

நன்றாகப் படிப்பதோடு பார்க்கவும் நன்றாக இருந்த அபிராமியும் அதே வகுப்பில் படித்தது மன்னிக்க முடியாத மாபெரும் பிழை!

பெற்றோரும் இல்லை, உறவினரும் கிடையாது. எங்காவது வீட்டுவேலை செய்துகொண்டு கிடக்க வேண்டியதுதானே? இவளுக்கு எதற்குப் படிப்பும் மண்ணாங்கட்டியும்?

மணமாகி ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தவள் என்பதால் வீட்டில் சுரேகா இட்டதுதான் சட்டம்! அவளது முகம் பார்த்து கண் குறிப்பேற்று எல்லோரும் வேலை செய்வார்கள். எல்லோரும் அவளைக் கொண்டாடிதான் சுரேகாவுக்குப் பழக்கம்!

ஆனால், பள்ளியில் அது நடக்கவில்லை. எதிலும் அபிராமி மூக்கை நீட்டி முதல் இடத்தை எட்டிவிடுவாள்.

இனிய குரலில், 'ஞெஞ்ஞே மிஞ்ஞே' என்று பேசி நல்லவள் வேஷம் வேறு போடுவாளா, எல்லோரும் அபிராமியிடம் மதிமயங்கி நிற்பார்கள்!

சுரேகாவுக்கு கொதித்துக்கொண்டு வரும்.

ஆன மட்டும் சாக்லேட்டும் சிப்சும் வாங்கிக்கொடுத்து, செட் சேர்த்துக்கொண்டு அபிராமியை மட்டம் தட்டுவாள். ஆனால் நாலே நாளில் எதிலாவது முதலாக வந்து கைதட்ட வைத்துவிடு வாள். சுரேகா மறுபடி செலவு பண்ணி ஆள் பிடிக்க வேண்டும்.

இதற்காக எவ்வளவு பணம் வீணாக்கியிருப்பாள்!

பள்ளி முடிந்தது. நகை டிசைன் எல்லாம் கற்றுத் தருவார் களாமே என்று கல்லூரியில் நுண்கலையைத் தேர்ந்தெடுத்தால் அபிராமி அங்கேயும் துரத்திக்கொண்டு வந்தாள்.

கல்லூரிப் படிப்பும் முடிந்தது. இனி இந்தச் சனியனை பார்த் தாக வேண்டிய தொல்லை விட்டது என்று இருந்தால், இப்போது சிவா அத்தான் அலுவலகத்தில் இருந்து வெளியே வருகிறாளே!

அதுவும் அவளுக்கும் சிவசந்திரனுக்கும் திருமணம் பேச அவள் பெற்றோர் யோசித்துக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில்.

இங்கேயும் அவள் முந்துவாளா?

உடம்பெல்லாம் 'குப்'பென்று தீப்பற்றிக்கொண்டது போன்ற உணர்வில் காரை ஒதுக்கி நிறுத்தி இறங்கி, சிவசந்திரனின் அலுவலகத்திற்குள் ஓடினாள்.

நல்லவேளையாக முதலில் எதிர்ப் பட்டது, அவள் தந்தையிடம் பணிபுரியும் ஒருவருடைய மகளே. சுரேகா வீட்டு சிபாரிசில்தான் அந்தப் பெண்ணுக்கு சிதம்பரம் வேலை கொடுத்ததே. எனவே, பார்த்ததும் அத்தனை பல்லையும் காட்டி முறுவலித்தாள் அவள்.

வணக்கத்தை அலட்சியப்படுத்தி, ''செல்வி, ஒரு பெண் லைட் கலரில் பூ போட்ட சுரிதார் அணிந்து சென்றாளே, அவளுக்கு இங்கென்ன வேலை? எதற்கு வந்தாள்?'' என்று கேட்டாள்.

''அழகான சுரிதார் செட்! இல்லையா மேடம்? மிஸ் அபிராமி அணிவது எல்லாமே கனகச்சிதமாக அழகாக...'' என்றவளை தடுத்து, ''கேட்டதற்கு பதில் சொல்!'' என்று அதட்டினாள் சுரேகா.

பயந்துபோய் தனக்குத் தெரிந்ததை சொன்னாள் அந்தப் பெண்.

சுரேகாவின் மூளை வேகமாக வேலை செய்தது.

விளம்பர நிறுவனம்! அப்படி ஒன்றை நிறுவ இவளுக்குப் பணம் ஏது? கடனா? இருக்கும். இப்போதுதான் படித்த ஏழைப் பெண்களுக்கு அரசாங்கத்தில் என்னென்ன விதத்திலோ உதவுகிறார்களே. மடத்தனம்! நம்மைப் போன்ற பணக்காரர்கள் கொடுக் கும்

வரிப்பணத்தை எடுத்து இந்த மாதிரி வக்கில்லாததுகளுக்கு கொடுத்து, அது களை உயர்த்திவிடுகிறார்கள். அநியாயம்!

சரி, அந்தப் பணத்தில் வேறு தொழில் செய்யாமல் விளம்பரத் துறைக்கு ஏன் வந் தாள்? இதில்தான் சிவா அத்தான் போன்ற உயர்மட்ட ஆட்களை அணுகிப் பேசலாம்!

அப்புறம் இருக்கவே இருக்கிறது அபி ராமியின் 'உத்தமி ரத்தின' வேஷம்!

தன் கண்டுபிடிப்பை அப்படியே வாய் விட்டு கொட்டிவிட்டவளுக்கு அதன்பிறகு தான் தன் அந்தஸ்து நினைவு வந்தது.

'திருதிரு'வென விழித்துக்கொண்டிருந்த செல்வியை, ''உனக்கு இங்கே வேலை கீலை கிடையாதா? வாய் பார்த்துக் கொண்டு நிற்கிறாயே. போய் வேலையைப் பார். இல்லாவிட்டால் அத்தானிடம் உன்னை 'டிஸ்மிஸ்' செய்யச் சொல்லு வேன்'' என்று நடுநடுங்கச் செய்துவிட்டு உள்ளே சென்று சிவசந்திரனையும் அவன் தந்தையையும் பார்த்து சற்று பேசிக் கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பினாள்.

சுரேகா, சிவசந்திரன் குடும்பங்கள் ஏற்க னவே உறவுதான். நெருங்கிய உறவு என் றும் இல்லாமல், தூரத்து உறவு என்றும் சொல்ல முடியாத ஒரு உறவு. இருவரின் தாத்தாக்களும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். சுரேகாவுடைய தந்தையும் சிவசந்திரன் தாயும் அண்ணன்–தங்கை முறையான சம வயதுக் காரர்கள். லட்சுமியை தரம் இறங்கி, ஒன்றும் இல்லாதவனுக்கு கட்டிக் கொடுத்துவிட்ட தாக பேச்சு. ஆனால், சிதம்பரம் உழைப்பா லும் திறமையாலும் உயரவே உறவு நிலைத்து விட்டது. மூன்று தலை முறையாகத் தொடரும் உறவு என்பதால் சுமார் பதினைந்து குடும்பங் கள் ஓரளவு நெருங்கியே பழகி வந்தன. அவர்களுக்குள்ளேயே பல திருமணங்களும் நடந்து, பந்தத்தை பலப்படுத்தின.

இப்போது சுரேகா, சிவசந்திரன் திருமணம் பற்றியும் அப்படித்தான் பேச்சு எழுந்திருந்தது. பணம், தோற்றம், படிப்பு, எல்லாவற்றிலும் சிவசந்திரன் மட்டுமே தனக்கு பொருத்தம் என்பது சுரேகாவின் கருத்து.

அவனைப்போல ஒருவனை புளியங் கொம்பாய் பிடித்துக்கொள்ளத்தான் அபிராமி, பெருச்சாளி மாதிரி உள்ளே புகுந்திருக்கிறாள். ஆனால், சிவா ஒன்றும் வேலியில்லாப்பயிர் அல்ல. காவலுக்கு சுரேகா இருக்கிறாள் என்பதை அபிராமிக்கு புரிய வைக்க வேண்டும். நன்றாக உறைக்கிற மாதிரி!

தனக்குள் சபதம் செய்த சுரேகாவுக்கு அவளையறியாமலே எற்கனவே அபிராமிக்கு உறைக்க வைத்தாயிற்று என்பது தெரியாது!

கடைசியாக வந்த 'நேஷனல் ரீடர்ஷிப் சர்வே'யில் ஒரு சினிமாப் பத்திரிகை, நடுத்தர வகுப்பு மக்களின், முக்கியமாக குடும்பத் தலைவிகளின் ஆதரவை அதிகமாகப் பெற்றி ருப்பதாக வந்திருந்தது. மற்ற விஷயங்களைப் பேசி முடித்து திரும்பிவிட்ட அபிராமிக்கு, அது நினைவு வரவும் விளம்பர லிஸ்டில் அந்தப் பத்திரிகையையும் சேர்ப்பது பற்றி கேட்பதற்காக திரும்பி வந்தாள்.

வந்தவளின் காதுகளில், சுரேகாவின் பேச்சு தெளிவாக விழுந்து அவளைத் திரும்பி ஓட வைத்தது தெரிந்திருந்தால், சுரேகா உள்ளம் குளிர்ந்திருக்கும்.

படிக்கும் காலத்தில் சுரேகாவால் அபிராமி பட்ட துன்பங்கள்தான் எத்தனை!

அபிராமி பிறந்து, அவள் முகத்தைப் பார்த் ததுமே பெற்றோருக்குப் பிடிக்கவில்லையாம். தூக்கி வீசிவிட்டு போய்விட்டார்களாம். சில நேரங்களில் அவளுக்கு அப்பா, அம்மாவே கிடையாது. பிசாசுப் பிள்ளையாகி விடுவாள்.

பிசாசு என்றால் என்னவென்றே தெரியாத போதும் தான் ஒரு பிசாசோ என்று அபிராமி எவ்வளவு பயந்திருக்கிறாள்.

கல்லூரிக்கு சென்றபோது அபிராமி முறை கெட்ட பிறவியாகிப் போனாள்.

சுரேகா வாங்கித் தரும் கோக், பெப்சி, நொறுக்குத் தீனிக்காக அவளுக்கு 'ஆமாம்' போட பலர் இருந்தார்கள்.

எல்லோருமாக அவளது இளம் பருவத்தை, எத்தனை முறை நரகமாக்கியிருக்கிறார்கள்!

ஆனால், அவளை உருவாக்கியதும் அவர்களேதான்.

யோசிக்க வைத்தார்கள்! ஏன் இப்படி.. என்று யோசித்த தில், அவளுக்கு தெளிவு ஏற்பட்டது. அவளிடம் ஒன்றுமில்லை. அவளுக்கு யாருமில்லை. பணமும் இல்லை என்றுதானே இந்தப் பாடு படுத்துகிறார்கள்? அவர்களே மதிக்கும் அளவுக்கு அவள் உயர்ந்துவிட்டால்?

'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்'. ஆனால், சிறப்பு அவரவர் செய்கையால் வருவது. அந்தச் சிறப்பை ஏற்படுத்திக்கொண்டுவிட்டால்? சுரேகா போன்றோருக் கும் அவளுடைய தந்தையோ தாத்தாவோ செய்த முயற்சியால் விளைந்த உயர்வுதானே? அந்த முயற்சியை, அபிராமியும் செய்ய முடியுமே!

தன்னை உயர்த்திக் கொண்டால்தான் இவர்கள் வாயை மூடமுடியும். உயர்ந்தே ஆகவேண்டும் என்பதில் அபிராமி பிடிவாதமாக இருந்ததன் முக்கிய காரணம் சுரேகாவே.

நல்ல நிலைக்கு வருமுன் சுரேகாவை சந்திக்க அவள் விரும்பவில்லைதான். ஆனால், சந்திக்க நேர்ந்தபின் நல்லபடி பழகவே எண்ணினாள்.

சிவசந்திரன் வேறு அறிமுகப்படுத்தி இருக்கிறானே.

ஆனால், அந்த மரியாதையெல்லாம் எண்ணிப்பாராமல் அவளைப் பார்த்த ஞாபகமே இல்லை என்று ஒரு போடு போட்டுவிட்டாள் சுரேகா.

இந்த மாதிரி ஒரு சந்திப்பை எதிர்பார்த்து எப்படி நடந்துகொள்வது என்று முன்னமே முடிவு செய்து வைத்திருந்ததால், அவளால் லகுவாகச் சொல்ல முடிந்தது.

ஆனால், இதை எதிர்பாராத அபிராமி விழித்தாள்.

சிவசந்திரனுக்கு இதில் விசித்திரம் எதுவும் தெரிய வில்லை. ''இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை அபிராமி. நீ படிப்பை அடிப்படையாக வைத்து எதிர் காலத்தை அமைத்திருப்பதால் படித்த காலம் மனதில் நிற்கிறது. சுரேகாவுக்கு பெயருக்குப் பின்னால் பட்டத் திற்காக மட்டும்தான் படிப்பு. கற்றது மறப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. வேறுவேறு வகுப்பாக இருந்திருப்பீர்கள். உன்னை பார்த்தாளோ என்னவோ?'' என்று அவன் விளக் கம் கூறியதில் பெண்கள் இருவருக்குமே வருத்தம்தான்.

இவளை மதித்து விளக்கம் சொல்ல வேண்டுமா என்ற ஆத்திரம் சுரேகாவுக்கு.

பொய்யை அறியாதது மட்டுமல்ல; இவளது மறதியை கூட நியாயப்படுத்துவதா என்ற வருத்தம் அபிராமிக்கு!

விஷயம், அந்த ஒரு சந்திப்போடு நிற்கவில்லை.

வீட்டுக்குப் போனதுமே தந்தையிடம், ''என்னப்பா? ஒன்று தொடங்கினால், முழுதாக செய்து முடிப்பது இல்லையா? எப்போது சிவா அத்தான் வீட்டில் போய் பேசப்போகிறீர்கள்? இழுத்து மூடிக்கொண்டு நீங்கள் சும்மா உட்கார்ந்திருப்பதை பார்த்தாலே எனக்கு எரிச்சல் வருகிறது!'' என்று சுரேகா விரட்டினாள்.

பாவம்! குளிர்காய்ச்சல் நடுக்கத்தில் மூக்கு தவிர மற்ற இடங்களையெல்லாம் மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார் அந்த மனிதர். ஆனால், கேட்பது அருமை மகளாயிற்றே! வாய்ப்புறம் போர்வையை ஒதுக்கி, ''போனேனம்மா. பேசினேன். எல்லாம் மகன் விருப்பம் என்று சொல்லி விட்டார் சிதம்பரம். திருமணம் எப்போது பண்ணிக் கொள்வது என்றுகூட அவன்தான் முடிவு செய்யப் போகி றானாம். 'அவன் அப்படி முடிவு செய்கிறபோது, உங்கள் பெண்ணுக்கும் திருமணம் ஆகாமல் இருந்தால் பார்க்க லாம்' என்கிறார். என்ன செய்வது? சொல்லு. கையால் சோப்புத்தூள் கலந்துகொண்டிருந்த ஆள், இப்போது பணம் வந்துவிட்டதல்லவா? பேசுகிறார்!'' என்றார்.

'மகன் விருப்பமா? விரும்ப வைக்கிறேன்!' என்று சூளுரைத்து சிவசந்திரனிடம் படையெடுத்தாள் சுரேகா.

'நன்றாகவா உடுத்துகிறாய்? பிச்சைக்காரப் பருத்தி நூல் சுரிதார் செட். உடையணிவதில் உன்னால் என்னை மிஞ்ச முடியுமா?' என்று கறுவியவள் விதவிதமான வண்ண ஆடைகளில் சிவசந்திரனை முற்றுகையிட்டாள்.

முதலில், ''இந்தப் பக்கம், 'பெடிக்யூர்' பண்ண பார்ல ருக்கு வந்தேன். தோழியைப் பார்க்க வந்தேன். உங்கள் நினைவு வந்தது!'' என்று ஏதாவது காரணம் சொன்னவள், பிறகு ''உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது, உடனே வந்துவிட்டேன்!'' என்று சொல்லத் தொடங்கினாள்.

'வெண்புறா' அலுவலகத்துக்கு செல்வதை அபிராமி வெகுவாகக் குறைத்துவிட்டதால் அவளை சுரேகா அங்கே அதிகம் சந்திக்க நேரவில்லை. ஆனால், தான் அறியாதவாறு ஒளிந்து மறைந்து அபிராமி அங்கே வந்துபோவதாகவே எண்ணினாள். இன்னும் அதிகமாக வேவு பார்க்கலானாள்.

''சொந்தக்காரர்கள் என்றால் இப்படித்தான் அடிக்கடி கண்ணில் பட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.'' என்று சிதம்பரம் ஒருதரம் கூறியது வசதியாகப் போய், நினைத்த போதெல்லாம் சிவசந்திரனை சுற்றிவந்தாள் சுரேகா.

அப்படி தீவிரமாக முற்றுகையிட்டதன் விளைவாக அதன்பின் அபிராமி அங்கே சென்ற ஒவ்வொரு சமயமும் சுரேகாவைப் பார்க்க நேர்ந்தது.

சுரேகா அணியும் ஆடைகள் போன்ற எதையும் அவள் அணியப்போவது இல்லை. அணிய விரும்ப மாட்டாள். என்றாலும் தைத்திருந்த விதம், துணியின் உயர்ரகம் ஆகியவற்றால் அவை சுரேகாவின் தோற்றத்தை மிகவும் வசீகரமாக்கிக் காட்டுவதை

பார்க்கையில் உள்ளே சோர்வு அடையாமல் இருக்க முடியவில்லை. அப்படி இருப்பதா னால் அபிராமி ஒரு பெண்ணாக இருக்க முடியாது.

முயற்சி செய்து அந்த சோர்வை மறைத்து இயல்பாகக் காட்டி பேசிப் பழகிக்கொண்டிருந்தாள் அவள்.

ஆனால், எப்படியாவது அவளை அங்கிருந்து விரட்டி விடும் வேகத்தில் இன்னொருத்தியும் முழு முயற்சி செய்து கொண்டிருந்ததால், அப்படிப் பழகுவது அபிராமிக்கு கடினமாகிக்கொண்டே போயிற்று.

ஏனெனில், சுரேகாவுக்கு நெறிமுறைகள் எதுவுமே கிடையாது!

அபிராமியை நோகடித்து விரட்டுவதே குறியாக இருந்த சுரேகா, சாதாரண நாகரிகம்கூட கடைப்பிடிப்பதாக இல்லை. அக்கம்பக்கத்தில் பலர் இருந்ததை

லட்சியம் செய்யாமல்... அல்லது, அதுதான் சரியான தருணம் என்று நினைத்தாளோ என்னவோ, ''நீ வளர்ந்த அநாதை ஆசிரமத்துக்கு, பிறகு என்றேனும் போனாயா அல்லது 'விட்டது சனி' என்று எட்டிப் பார்ப்பதே இல்லையா?'' என்று அபிராமியிடம் உரக்கக் கேட்டாள் ஒரு நாள்.

ஆசிரமத்தில் வளர்ந்ததை அபிராமி அவமானமாக நினைத்தது இல்லை. அங்கே வளர்ந்ததை மறைக்க அவள் முயன்றதும் இல்லை.

ஆனால், சுரேகாவின் நோக்கம், அவளை குறைத்துக் காட்டுவது ஆயிற்றே. எனவே, வெறும் ஒரு 'போகிறே' னுக்குப் பதிலாக, ''பரவாயில்லையே. படிக்கிற நாளில் என்னுடன் பழகியதெல்லாம் உனக்கு நினைவு வந்து விட்ட மாதிரி தெரிகிறதே'' என்றுரைத்து புன்னகை செய்தாள் அபிராமி.

சிறுகுத்துதான். ஆனால், அந்த அளவிலேனும் திருப்பிக் கொடுக்காமல் இருக்க அபிராமியால் முடியவில்லை. அந்த குத்தலை சகித்துக்கொள்ள சுரேகாவால் முடியவில்லை.

சிவசந்திரன் வேறு, ''பின்னே, உன்னை யாராவது அடியோடு மறக்க முடியுமா? ஏதோ, வேறு ஞாபகத்தில் அன்றைக்கு நினைவு வந்திராது. வீட்டுக்குப் போனதுமே உன்னோடு பழகியது சுரேகா மனதில் படமாக ஓடியிருக்குமே'' என்று அவள் கொதிப்பில் எண்ணெய் ஊற்றினான்.

படமாக ஓடியது உண்மை. ஆனால், அவன் நினைத்த படி இல்லை என்று சொல்ல முடியாததோடு, அபிராமியை உயர்த்திக் காட்டிய பேச்சும் சுரேகாவுக்கு ஆத்திரமூட்டி யது. அப்படியென்ன, மறக்க முடியாத பேரழகி இவள்? சொல்லிவிட்ட வார்த்தைகளை திரும்பப் பெறமுடியாது என்பதால், இனி அபிராமியை தெரியாது என்று கூறவும் முடியாது. எனவே ''அப்படி எந்தப் படமும் என் மனதில் ஓடவில்லை அத்தான். ஆனால், என்னைத் தெரியும் என்று பெருமையாக சொன்னாளே பாவம் என்று மூளையைக் கசக்கி யோசித் தேனா, லேசாக நினைவு வந்தது. அந்த 'இல்ல'த்து பிள்ளைகளுக்கு சீருடை வாங்க முடியாது என்பதால், அந்தப் பள்ளியில் விருப்பம் போல உடை அணியலாம். அங்கே எல்லாம் என் ஆடைகளை வெறித்து, வெறித்து

பார்க்கும்கள். அதுகளில் ஒரு முகம் இவள் போல இருந்த நினைவு. அதனால் தான் கேட்டேன். நான் நினைத்தது சரிதான் போலிருக்கிறது'' என்றவளுக்கு அதோடு விடவும் மனமில்லை.

எனவே, மற்றயாரும், முக்கியமாக அபிராமி பேசுமுன் அவசரமாக தொடர்ந்து, ''அப்போதும் பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையை பார்ப்பது போல, இதே பார்வைதான் இவளை அடையாளம் காட்டிக் கொடுத்தது அத்தான். ஆனால், இதுகளால் ஏக்கமாகப்பார்க்க மட்டும்தானே முடியும். பார்த்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுவேன். தொட்டுக்கூட பார்க்க விடுவேன்'' என்று என்னவோ பெரிய தரும காரியம், பத்து ஏழைக் குழந்தைகளை படிக்க வைத்து புண்ணியம் கட்டிக்கொண்டதுபோல பெருமைப்பட்டுக் கொண்டாள். ரொம்ப வும் சங்கடமான நிலை அபிராமிக்கு!

சுரேகாவின் பேச்சுக்கு உருப்படியாக ஒரு பதிலும் கொடுக்க முடியவில்லை. அவள் சொன்னதுபோல வெறித்து நோக்கியது இல்லை என்றாலும், அவளின் ஒன்றிரண்டு உடை களை அபிராமியும் ஆவலாக பார்த்திருக்கிறாள். பிற்காலத்தில் நிறைய சம்பாதித்து இதுபோல வாங்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறாள். அவ்வளவே.

ஆனால், சுரேகாவின் தமிழே வேறு. 'பசு' என்ற சொல்லே அவளுக்கு கிடையாது. 'மாடு'தான். அதே முறையில்தான் இப்போதும் பேசியிருக்கிறாள். ரசனை வெறிப்பாகவும், ஆவல் ஏக்கமாகவும் ஆகிவிட்டது! என்ன சொல்லி மறுப்பது? விளக்கம் கூற முயல்வதே அபிராமியை இன்னமும் இறக்கிக் காட்டும்.

அதோடு, சுரேகா பேசியதும் சிவ சந்திரனிடம் மட்டுமே. உறவின் உரிமையோடு, கொஞ்சலும் குழைவுமாக. யாரைக் கூப்பிட்டு விளக்குவது?

சுரேகாவின் குரலும், 'இதுகள் அதுகள்' என்று அவள் அலட்சியமாக பேசியதும்கூட, அபி ராமிக்கு வெறுப் பூட்டியிருந்தது. கடவுள் அருளால் அவளுக்கு ஒரு நல்ல குடும்பமும் செல்வ மும் இருக்கிறது. அதற்காக, அவை இல்லாதவர்களை அ◌ீறிணையிலா பேசுவது?

அங்கே நிற்க பிடிக்காமல், ''நன்றாயிருக்கிறது என்று எண்ணியது உண்டே தவிர, ஏக்கம் எதுவும் கிடையாது'' என்று மொட்டையாக கூறி விட்டு, ''பண பட்டு வாடா தொடர்பாக, அக்கவுன்டன்ட்டை பார்க்க வேண்டும். வருகிறேன்'' என்று அங்கிருந்து வேகமாக போய்விட்டாள்.

தன் வெற்றிப் பெருமிதத்தை, முழு மையாக மறைக்க, சுரேகாவால் முடியவில்லை. வாய்ப்பை விடக்கூடாது என்று, ''இந்தப் பெண் ரொம்பவும் வயிற் றெரிச்சல் படுவாள் அத்தான். சரி, கடவுள் நமக்கு விதித்தது இவ்வளவுதான் என்று சும்மா இருக்க மாட்டாள். என்னை பற்றி திமிர், கர்வம் என்று மற்றவர்களிடம் கோள் மூட்டுவாள். நல்லவள் மாதிரி நடிப்பதில் கில்லாடி. அவளைத் தெரியும் என்று சொன்னால், இதையெல்லாம் உங்களிடம் சொல்ல நேருமே என்றுதான், அன்றைக்கு தெரியாத மாதிரி நடந்து கொண்டேன். இன்றைக்கு எப்படியோ, வாயில் வந்துவிட்டது. அவள் உங்களிடம்கூட ஏதாவது வாலாட்டக்கூடும். எச்சரிக்கையோடு இருங்கள் அத்தான். என்ன?'' என்று கன கரிசனம் காட்டி ஓதினாள்.

''எப்போதுமே நான் எச்சரிக்கையோடுதான் இருப்பேன்'' என்று முறுவலித்தான் சிவசந்திரன். தொடர்ந்து, ''ஆனால், நான்கூட உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டுமே சுரேகா. இது ஃபேஷன் பரேடோ, அழகிப் போட்டியோ நடக்குமிடம் அல்ல. அலுவலகம். உன் விருப்பம் போல உடையணியும் உரிமை உனக்கு உண்டுதான். என்றாலும் இங்கே இப்படிவேண்டாம். இங்கே உள்ளவர்கள் எல்லோரும் நம் குடும்பங்கள்மீது மதிப்பும் மரியாதையும் உள்ளவர்கள்'' என்றான் புன்னகை செய்தபடியே.

ஒரு முழு நிமிஷம், சுரேகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழகிப் போட்டியில் கலந்துகொள்கிற அளவுக்கு அவளது ஆடை பிரமாதமாக இருக்கிறது என்கிறானா? அல்லது மற்றவர்களின் மதிப்பு, மரியாதை கெடுகிற அளவுக்கு மோசம் என்கிறானா? ஆனால், இரண்டாவதை இப்படி சிரித்த முகத்தோடா சொல்வார்கள்? அப்படி இராது. இவ்வளவு அழகான உடை, இங்கே பணிபுரிவோரின் கவனத்தை கலைக்கக்கூடும். ஆண்கள் வாயைப் பிளக்க, பெண்கள் வயிறு எரிவார்கள். கூட்டிக்கழித்து இவள் இங்கே இப்படி நல்ல அணிமணிகளோடு வந்ததுதான் தப்பு என்று கூறிவிடுவார்கள்.

'சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்' என்று சொல்வது போல, முதலாளி குடும்பத்தை சேர்ந்தவளிடம் தொழிலாளி வர்க்கம் தப்புக் கண்டுபிடிக்க விடக்கூடாது என்கிறான். அவ்வளவே. அதோடு, இந்த அழகைதான் மட்டும்தான் ரசிக்கவேண்டும் என்ற ஆசையாகவும் இருக்கலாம். அப்படித்தான் இருக்கும் என்று ஆனந்தமாக நம்பத் தொடங்கிவிட்டவளுக்கு எதையும் சிவசந்திரனிடம் கேட்டுத் தெளிய விருப்பமில்லை. யார் என்ன என்று பாராமல் போட்டு உடைக்கிறவர் என்று சிதம்பரத்துக்கு ஒரு பெயர் உண்டு. மகனும் அந்த மாதிரி ஏதாவது ஏடாகூடமாக சொல்லிவிடக்கூடுமல்லவா? இப்போதைக்கு அவனது கண்டுபிடிப்பு மனதுக்கு சுகமாக இருக்கிறது. அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே.

''போங்க அத்தான். உங்களுக்கு எல்லாமே கேலிதான்'' என்று செல்லமாய் சிணுங்கிவிட்டு, ''மாமாவிடம் பேசிவிட்டு வருமாறு அப்பா சொல்லிவியனுப்பினார். கூட்டிப் போகிறீர்களா?'' என்று பேச்சை மாற்றி அவனை துணைக்கழைத்துச் சென்றாள் சுரேகா.

'அபிராமி' நிறுவன கணக்குகளை சரிபார்த்து தன் மேஜைக்கு அனுப்புமாறு அக்கவுன்ட்ஸ் துறைக்கு செல்வி மூலம் தகவல் அனுப்பி விட்டு சுரேகாவை அழைத்துக்கொண்டு தந்தையிடம் சென்றான் சிவசந்திரன். கணக்குப் பகுதியிலிருந்து அபிராமி வெளியே வந்தபோது கூடவே நடந்து பார்வையாளர் அறைக்கு அழைத்துச் சென்று உட்காரச்சொல்லி உபசரித்தாள் செல்வி. செல்வியின் பார்வை இங்குமங்கும் பாய, ஆச்சரியத்தோடு ''என்ன விஷயம் செல்வி?'' என்று அபிராமி விசாரித்தாள்.

அந்த அலுவலகத்தில் எல்லோரிடமும் அபிராமிக்கு நல்ல உறவுதான். அதிலும் மானின் மருண்ட தோற்றத்துடன் சுறுசுறுப்புடன் பணியாற்றும் செல்வியை அவளுக்கு மிகவும் பிடிக்கும். மீண்டும் ஒருதரம் பார்வையை சுழற்றிவிட்டு, போகிறவர்கள் வருகிறவர்கள் கண்ணில் சட்டென பட்டுவிடாத கோணத்தில் ஒதுங்கி நின்று செல்வி சொன்னாள். ''சுரேகா மேடத்திடம் கொஞ்சம் எச்சரிக்... வந்து... பதவிசாக பழகுங்கள் மேடம். அதுதான் உங்.. அதுதான் எப்போதுமே நல்லது மேடம்'' என்று தடுமாறினாள். பயந்து பயந்தேனும் அவள் எதையோ சொல்ல முயற்சிப்பது புரிந்து இதமான குரலில், ''சுரேகாவை எனக்குத் தெரியும் செல்வி'' என்றாள் அபிராமி.

''ஆனால் மேடம், இங்கே அவர்கள் உறவு உரிமையுள்ளது மேடம். சின்னவருக்கும் அவர்களுக்கும் திருமணம் நடக்கப் போவதாகக் கேள்வி. இப்போதுகூட இருவருமாக

சேர்ந்துதான் பெரியவரை பார்க்கப் போயிருக்கிறார்கள். உங்களை எங்கள் எல்லோருக்குமே ரொம்பப் பிடிக்கும், மேடம். அதனால்தான் சொல்ல நினைத்தேன். சுரேகா மேடம் உங்களைப் பற்றி தப்பாக நினைக்கிறார்கள். அது உங்களை பாதித்துவிடக்கூடாதே என்று எங்களுக்குக் கவலை'' என்று எச்சரித்தாள்.

திருமணமா? அதனால்தான், சுரேகா இப்படி அலட்டிக் கொள்கிறாளா? வெறும் உறவென்று எண்ணியது தவறு போலிருக்கிறதே. சட்டென அபிராமியின் மனம் சோர்ந்தது. சுரேகா உரிமைக்காரி யாகிவிட்டால் அப்புறம் இந்த நிறுவனத்துக்கு அபிராமி பிரிவுரை வாசிக்க வேண்டியதுதான். ஒரு நல்ல வருமானம் போய்விடும். கூடவே.. வெளிப்புறமாக யாரோ செல்ல, செல்வியின் விழிகள் மருண்டு சுழல்வதைக் காணவும் அபிராமி சற்று இதமாக உணர்ந்தாள். அஞ்சி அஞ்சியே என்றாலும் துணிந்து எச்சரிக்கிறாளே. அவளிடம் பிரியமுள்ளவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்.

மெல்ல முறுவலித்து, ''விவரம் சொன்னதற்கு நன்றி செல்வி. நீங்களும் எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள். இந்தப் பேச்சு வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்று, தன்னால் இது வெளிப்படுமோ என பயப்படவேண்டாம் என்று குறிப்பால் உணர்த்திவிட்டு, ''எனக்கு அவசர வேலை இருக்கிறது. கிளம்புகிறேன். யாரும் தேடினால் சொல்லிவிடுங்கள்'' என்று கூறி கிளம்பினாள். அலுவலகத்தை அடையும் வரையிலும் அபிராமியின் மனம் தவித்துக்கொண்டேதான் இருந்தது.

சிவசந்திரனுடைய மனைவியாக சுரேகாவை எண்ணிப் பார்க்கவே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளில் அவள் சம்பாதித்தது அவ்வளவையும் கொடுத்தால் சுரேகா–சிவசந்திரன் திருமணம் நின்றுவிடும் என்றால், அப்படிக் கொடுக்கவும் அபிராமி தயாராக இருந்தாள். ஆனால், அவள் புரட்டக்கூடிய சில லட்சங்களிலா, அந்த மேட்டுக்குடி திருமணம் நின்றுவிடப்போகிறது?

பழக்கத்தின் காரணமாக, அவளது அலுவலகம் முன்பு கால்கள் 'பிரேக்' போட்டு விட ஒரு குலுக்கலுடன் வண்டி நிற்கும் போது அபிராமியின் உள்ளமும் குலுங்கிப் போயிருந்தது.

அவளா, ஒரு திருமணத்தை நிறுத்தி விட, இவ்வளவு தீவிரமாக யோசிக்கிறாள்?

தன்னைத்தானே கண்டித்தபடி அபிராமி அலுவலகத்துக்குள் சென்றபோது பற்கள் அத்தனையையும் காட்டி நகைமுகத்துடன், ஒரு நல்ல சேதியை மகாலட்சுமி அவளிடம் காட்டினாள்.

உதகையில் டீத்துள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று, தன் தயாரிப்பை மேற்கு மாநிலங்களில் விளம்பரப்படுத்த விரும்புவதாகவும் நிறுவனத்தின் விளம்பரப் பிரிவை அணுகுமாறும் ஃபேக்ஸ் அனுப்பியிருந்தது.

கர்நாடாகா, குஜராத், மராட்டிய மாநிலங்களோடு எதற்கும் இருக்கட்டும் என்று ராஜஸ்தானையும் கேட்டிருந்தார்கள்.

இந்த விளம்பரம் அவளுக்கு கிடைத்தால் தேசிய அளவிலான வாடிக்கையாளர் ஒருவர் 'அபிராமி அட்வர்டைசிங்'கிற்கு கிடைத்துவிடும். கணிசமாக விளம்பரமும் கிடைத்துவிட்டால், இந்திய நியூஸ் பேப்பர் சொசைட்டியின் அங்கீகாரம் கிடைத்துவிடும். அதன்பின் இப்படி முழிபிதுங்க, முன்பணம் கட்ட தேவையில்லை. விளம்பரம் வெளியான எழுபத்தைந்து நாட்களுக்குப் பிறகு பத்திரிகைகள், மற்ற மீடியாவுக்கு பணம் கட்டினால் போதும்.

விளம்பரதாரர்களிடம் முன் பணத்துக்காக கெஞ்சவும் தேவை யில்லை. அது கிடைக்காதபோது லாபத்தில் பெரும் பங்கை கொடுத்து, இன்னொரு நிறுவனத்தின் பெயரில் விளம்பரத்தை வெளியிடவும் தேவையில்லை.

பத்திரிகைகள் தரும் 15 சதவீத பணம் அப்படியே கைக்கு வரும். கம்ப்யூட்டருக்கான பாங்க் கடனை அடைத்துவிடலாம். இன்னும்...

'வெண்புறா' சோப்புத்தூள் விளம்பரங்களின் தரம் தங்களை கவர்ந்த தாலேயே 'அபிராமி'யை அணுகியதாக இருந்த குறிப்பு நம்பிக்கையூட்டியதோடு, விஷயத்தை சிவசந்திரனிடம் பகிர்ந்துகொள்ளும் ஆவலையும் தூண்டியது. மனமார வாழ்த்துவான்.

டெலிஃபோனை நோக்கி நீண்ட கையையும், கூடவே மனதையும், பிடிவாதமாக கட்டுப்படுத்திக் கொண்டாள். குஜராத் சமாசார், சந்தேஷ், பாம்பே சமாசார், ராஜஸ்தான் டைம்ஸ் என்று அந்தப் பகுதியில் வெளிவரும் பத்திரிகைகளின் விற்பனை எண்ணிக்கை, வாசகர் வட்டம், விளம்பரக் கட்டணம் போன்றவற்றை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தபோது வெளியே சிவசந்திரனின் குரல் கேட்பது போல இருந்தது.

அடிக்கடி அவனை நினைப்பதை நிறுத்தவேண்டும். அப்போதுதான் இந்த மாதிரி கற்பனை தோன்றாது என்று அபிராமி தனக்குத் தானே கூறிக் கொண்டிருந்தபோது அவனே அவள் எதிரில் வந்து நின்றான்.

சுரேகாவை தந்தையிடம் அழைத்துச் சென்றவன் இங்கே எப்படி வந்தான்?

திகைப்புடன் பார்க்கையில், அவன் சற்று ஆத்திரமாகவே கேட்டான்.

''ஒருவர் வந்தால் வரவேற்பது, குடிக்க ஏதாவது தந்து உபசரிப்பது, எதுவுமே கிடையாதா? மகாவை அதற்கெல்லாம் அனுப்ப மாட்டாயா?''

தனித்துப் பேச விரும்புகிறான்.

அபிராமிக்கு இந்த கண்ணாமூச்சி ஆட்டம் அலுத்துவிட்டது.

மகாலட்சுமி தலை மறைந்ததும் சிவா பொரியத் தொடங்கி விட்டான். ''இருந்து காசோலையை வாங்கிவரக்கூட முடியாதா? இன்று மட்டுமல்ல. இரண்டு மூன்று வாரமாகவே இப்படித்தான். கண்ணால் பார்ப்பதே பெரிய காரியமாகிவிட்டது. ஏன் இப்படி? தற்செயல் என்று சொல்லாதே. வேண்டுமென்றே என்னை தவிர்க்கிறாய். காரணத்தை மட்டும் சொல்லு.'' சுரேகாவின் பெயரைச் சொல்லி அவனை குன்ற வைக்க விரும்பாமல், ''நான் உங்களுக்கு வலை வீசுவதாக தவறாக பேசுகிறார்கள்'' என்றாள் மரத்த குரலில் சுருக்கமாக. அவளை விசித்திரமாக நோக்கி, ''தவறா கவா? ஏன்? உனக்கு உண்மை பிடிக்காதா?'' என்றான் சிவசந்திரன்.

(தொடரும்)

சற்று நேரம் பேச்சிழந்து, திகைத்து நின்றாள் அபிராமி.

'உனக்கு உண்மை பிடிக்காதா' என்று கேட்டால், என்ன அர்த்தம்?

அபிராமி, அவனுக்கு வலை போட முயற்சிப்பதாகத் தான் சிவசந்திரனும் கருதுகிறானா?

எப்படி முடியும்? அதுவும், அவனைத் தவிர்ப்பதாகக் குற்றம் சாட்டிக்கொண்டே, வளைக்க முயல்வதாகச் சொன்னால்... அவன் பேச்சில் உள்ள முரண்பாடு அவனுக்கே புரியவில்லையா?

அவன்கூடத் தன்னைத் தவறாக நினைத்தான் என்பதை தாங்க முடியாததாகத் தோன்ற மறுப்பதற்காக, ''இல்லை, சிவசந்திரன்..'' என்று தொடங்கினாள், அவள்.

குறுக்கிட்டு, ''சிவா'' என்றான் அவன், அழுத்தமான குரலில் நினைவூட்டுவதுபோல.

அதைக் கவனியாததுபோல, ''அந்த மாதிரி நான் ஒரு நாளும்...'' என்று அவள் தொடர, அவன் மீண்டும் குறுக்கிட்டான் ''என்ன 'ஒரு நாளும்..?' வலையில் மாட்டிக் கொண்டவனுக்குத்தானே உண்மை தெரியும்? அதுவும், மீள முடியாதபடி சிக்கிக்கொண்டவன் இட்டுக் கட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

முன்னிலும் திகைத்துப் பேச்சிழந்து நின்றாள் அபிராமி.

இவன் என்ன இப்படி அநியாயமாகக் குற்றம் சாட்டுகிறான். சுரேகாவின் வேலையா?

''சிவா, நான் மெய்யாகவே...'' என்று அவள் அழாக்குறையாக விளக்க முற்பட்டபோது, ''ப்ளீஸ், அபிராமி!'' என்று அவன் மறுபடியும் அவள் பேச்சை இடைமறித்தான்.

தொடர்ந்து, ''ப்ளீஸ் அபிராமி, அப்படியெல்லாம் ஒன்றுமே இல்லை என்று மட்டும் சொல்லி என் மனதை உடைத்து விடாதேம்மா'' என்று சொல்லிக்கொண்டே போகவும், மூளையே மரத்துப் போனாற்போலப் பிரமித்துச் சிலையாக நின்றாள் அவள்.

இவன்... இவன் என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறான்?

இல்லை என்று சொன்னால் இவன் மனம் உடைந்து விடுமா? அப்படியென்றால்?

அவளாகப் பேசப்போவது இல்லை என்று தோன்றவும், சிவசந்திரன் கையை நீட்டி அவள் முன் சொடக்குப் போட்டான்.

அவள் திடுக்கிட்டு நோக்கவும், முறுவலித்து, ''இன்பக் கனவிலிருந்து உன்னை எழுப்ப எனக்கும் பிரியமில்லைதான்! ஆனால் இப்படியே நாம் இருவரும் நின்று கொண்டிருக்க முடியாது. பார்! இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் மகாலட்சுமி வந்துவிடுவாள். அப்புறம் மற்றவர்கள்... சிவபூஜைக் கரடி போல அவர்கள் யாரும் வந்து நிற்குமுன், நம் பேச்சை நடத்திக் கொண்டு விடவேண்டும் அல்லவா?'' என்று அவன் சரளமாக சரசமாகப் பேசவும், அபிராமி ஒருவாறு சுதாரித்தாள்.

லேசாகக் கமறி, தொண்டையைச் சீர்ப்படுத்திக் கொண்டு, ''அ... அது, இன்பக் கனவென்று யார் சொன்னது?'' என்று மிடுக்காகப் பேச முயன்றாள்.

''இல்லையென்றால், என் கன்னம் இப்போது, தக்காளியாய்ப் பழுத்திருக்குமே!'' என்று அவன் தன் கன்னங்களைப் பொத்தியவாறு கூறவும், அபிராமிக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது!

''ம்.. இது சரி..'' என்று சிவசந்திரன் ரசனையோடு ஓர் எட்டு முன்னே எடுத்து வைக்கவும், அவசரமாகப் பின்னடைந்து, ''இல்லை, சிவசந்திரன்.. ப்ளீஸ், நான்.. நான்

அந்த மாதிரி நினைத்துப் பார்த்ததே கிடையாது. எனக்கு... எனக்குத் திருமணம் பற்றிய எண்ணமே கொஞ்சம் கூட இல்லை. நிஜம்!'' என்றாள் அபிராமி.

''தெரியுமே!'' என்று, ஒரு பெருமூச்சுவிட்டான் சிவசந்திரன். ''உன் சிந்தனை எப்போதுமே விளம்பரங்களிலேதானே, சுற்றிக் கொண்டிருந்தது. பத்திரிகை, விளம்பரக் கட்டணம், விளம்பர அட்டையின் தயாரிப்பு என்று. அது தவிர, வேறு எண்ணம் எதுவும் உன் மண்டையுள் உண்டானதே, இல்லையே! கொஞ்சம் வேறு மாதிரியும் யோசித்திருந்தால்தான் ஏதாவது புரிந்திருக்குமே.'' என்று மீண்டும் பெருமூச்சு விட்டான்.

''எப்படி? அப்படி, என்ன புரியமுடியும் என்கிறீர்கள்?'' என்று சற்று எரிச்சலுடனேயே கேட்டாள் அபிராமி. உள்ளூரத் திகைப்பும் கூட! இவன் என்ன என்னென்னவோ, பேசுகிறானே.

''எப்படியா? நீ விளம்பரம் தயாரித்துக் கொடுத்தாயே, அந்தத் துணிக்கடைத் திறப்பு விழாவுக்கு, நான் ஏன் வந்தேன் என்று, ஒரு தரமேனும் யோசித்தாயா?'' என்று குற்றம் சாட்டும் குரலில் கேட்டான் அவன்.

அவளுக்காக வந்ததாகச் சொல்லப் போகிறானா? மெய்யாகவே 'அப்படியா' என்று உள்ளூர வியந்தபோதும், அதைக் காட்டிக்கொள்ளாமல், ''துணிக்கடைக்கு எதற்காக வருவார்களாம்? துணி வாங்க வந்திருப்பீர்கள்.'' என்றாள் அவள் முயன்று வரவழைத்த சாதாரணமானகுரலில்.

''இருந்திருந்து, அந்தக் கடையிலா? நானா?''

''பத்து சதவிகிதம் தள்ளுபடி விலை ஆயிற்றே! எவ்வளவு லாபம்?!'' என்றபோதே, அவளது கண்கள் பளிச்சிட்டன. ''அதோடு, சினிமா நடிகை கையிலிருந்து நேராக வாங்கிக்கொள்ளும் வாய்ப்பு வேறு!''

''ஆமாமாம்... அந்த நடிகையை அருகிலிருந்து பார்த்து 'ஜொள்ளு' விடும் அரும்பெரும் பாக்கியத்தைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டாயே. என் பிறவிப்பயனே அதுதானே...'' என்றான் அவன் ஏளனமாக.

தன்னை மீறி அபிராமி சிரித்துவிட, அவனும் சேர்ந்து கொண்டான்.

இருவர் சிரிப்பும் இணைந்து ஒலித்தது, அவளுக்கே இனிமையாகத் தோன்றியது. மயக்கும் மதுர சங்கீதம்!

ஒருகணம் கண்மூடி ரசித்தவள் உடனேயே, விலுக்கென நிமிர்ந்தாள். எடுத்தவுடன் கண்ணை மூடிப் பார்வையைத் தடுக்கிறதே. தொலைநோக்குப் பார்வையையும் மறைத்துவிடுமா?

தலையைலேசாக உலுக்கிக் கொண்டவள், ''எங்களுக்கு அப்படி இல்லை என்று, என்ன நிச்சயம்?'' என்று சற்று மிடுக்காகவே வினவினாள்.

''நிச்சயம்தான்! மற்றபடி, 'சூப்பர் மார்க்கெட்'டுக் கெல்லாம் எந்த நடிகை வந்துகொண்டே இருந்தாளாம்? எத்தனை முறை அங்கே சந்தித்திருக்கிறோம்?''

''சரிதான்! நீங்கள் சாமான் வாங்க வந்ததற்கெல்லாம் இப்போது, இப்படி விளக்கமா?''

''ஆமாம்! மாதத்துக்கு நாலு பற்பசையா வாங்குவார்கள்? கவனிக்கமாட்டாயா, ஒவ்வொரு தரமும் இதை மட்டுமே வாங்குகிறீர்களே என்று கேட்க மாட்டாயா என்று அதே பெரிய டியூபையே வாங்கினேனே!''

கேட்டிருந்தால், என்ன சொல்லியிருப்பான்?

திடுமெனக் கால்கள் பலமிழந்தாற்போல உணர்ந்த அபிராமி அவசரமாக அமர்ந்து கொண்டாள்.

செய்வது அறியாது திகைத்த போது, அவன் நிற்பது மனதில்பட, அவனையும் உட்காரச் சொன்னாள்.

அவள் வேறு ஏதாவது சொல்வாளோ என்று சில கணங்கள் காத்திருந்துவிட்டு, சிவசந்திரன் மீண்டும் பேசத் தொடங்கினான். ''நம் அலுவலகத்திலும்தான் விளம்பர விவாதத்துக்காக நீ வந்த ஒவ்வொரு தரமும், நானும் ஏன் அங்கே இருந்தேன் என்று யோசித்தாயா? நீயும் நடேசன் அங்கிளும் பேசி முடித்திருக்க முடியாததா? ஏன், பணம் பட்டுவாடா கூட நானே செய்தேனே. அது கூடவா உனக்கு வியப்பளிக்கவில்லை?''

தலைமை நிர்வாகிக்கு இவ்வளவு மதிப்பளிக்கும் ஒருவன், ஏன் எல்லாவற்றையும்தானே பார்க்கிறான் என்று ஓர் எண்ணம் அபிராமிக்குள் ஓடியது உண்டுதான். ஆனால், எல்லாவற்றையும் திறமையாக நேரடியாகப் பார்க்கிறான் என்பதற்கு மேல் அவள் அதுபற்றிப் பெரிதாக ஒன்றும் நினைத்தில்லை.

இவனானால், நினைத்துப் பாராததே தப்பு என்கிறானே.

சிவசந்திரன் என்ன சொல்ல வருகிறான் என்று அபிராமிக்கு புரியாமல் இல்லை. ஆனால், அதை அப்படியே ஒப்புவது சிரமமாக இருந்தது. திகைப்பாகவும் குழப்பமாகவும் நெஞ்சுக்குள் பந்தயக் குதிரை ஓடுவது போலப் படபடப்பாகவும்.

''நான், நான் இந்த மாதிரியெல்லாம் நினைத்துப் பார்த்ததே இல்லை சிவசந்திரன்..''

''நானும் கூட இந்த இருபத்தேழு ஆண்டுகளாக திருமணம் பற்றி எண்ணியதே இல்லை. உன்னைப் பார்த்த பிறகு அது தவிர, வேறு நினைப்பதுதான் சிரமமாக இருக்கிறது'' என்று முறுவலித்தான் அவன்.

இந்த முறுவல், இவனது பயங்கரமான ஆயுதம் என்று எண்ணினாள் அபிராமி. இந்த முறுவலை இன்னும் கொஞ்சம் நேரம் பார்த்துக்கொண்டிருந்தால், அப்புறம் அவன் சொன்னதற்கெல்லாம் யோசனையே இல்லாமல் அவள் தலையாட்டிவிடக்கூடும். இந்தப் படபடப்பு மட்டும் இலலையானால், யோசிப்பது இலகுவாக இருக்கும்.

மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவர அவள் அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கையில், அவன் தொடர்ந்தான், ''நீயும் திருமணம் பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பாரேன் அபிராமி. சீக்கிரமே நம் திருமணம் பற்றி ஒரு நல்ல முடிவுக்கு வந்துவிடலாம்..''

நம் திருமணமாமே!

மூச்சு முட்டியது அவளுக்கு.

அவளது திகைப்பு புரிந்தது போல சிவசந்திரன் லேசாக முறுவலித்தான்.

''இந்த மாதிரி, திடுமெனக் கேட்க வேண்டும் என்று, நான் எண்ணியது இல்லை அபிம்மா..!''

'அபிம்மா'! இப்படி, அவளை யாரும் அழைத்ததே இல்லையே. எப்போதுமே, எல்லோருமே, 'அபிராமி' என்று முழுப்பெயரில் கூப்பிட்டுத்தான் அவளுக்குப் பழக்கம். ஒருவேளை, அவளுக்கும் ஒரு குடும்பம் இருந்திருந்தால்.. அவளுடைய பெற்றோர் அவளை வளர்த்திருந்தால்.. 'அபி, அபிம்மா' என்று செல்லமாக. அவளைக் கொஞ்சி இருக்கக்கூடும்.

ஆனால், அதற்குத் தான் அவள் கொடுத்து வைக்கவில்லையே.

தன்னை மீறிக் கண்ணைக் கரித்தது, அவளுக்கு.

சேச்சே. இவ்வளவு காலம் கழித்து, இது என்ன பைத்தியக் காரத்தனமான ஏக்கம்? இந்த மாதிரி மனதைப் பலவீன மடைய விடக்கூடாது.

சமாளித்துக் கொண்டு சிவசந்திரனின் பேச்சைக் கவனித்தாள் அபிராமி.

அவன் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தான் ''ஆனால், தொடங்கிவிட்டபின் இடையிலே நிறுத்துவானேன்? பார் அபி, உன்னை முதலில் பார்த்ததிலிருந்தே என் மனதில் ஒரு தாக்கம். நாளாக நாளாக ஈர்ப்பு அதிகமாகிக் கொண்டே போய் திருமணம் எப்போது எப்போது என்று அடிக்கடி, எனக்கு அதே நினைவுதான். அதிலும், உன்னை நேரில் பார்க்கும் போதெல்லாம் மனம் எப்படிப் பறக்கிறது. தெரியுமா?''

பார்க்கும்போது எல்லாமேவா? அவள் கண்டு பிடிக்கவே இல்லையே! ஏன்? ஒருவர் பார்வை மாறுவதைக் கூடவா உணர்ந்து கொள்ளாமலேயே இருந்திருக்கிறாள்? எப்படி? அல்லது...

ஏதோ யோசிக்கையில், அவள் மனம் சிறகடிக்கத் தொடங்கியது!

''திருமணம் பற்றிய எண்ணமே உனக்கு இப்போதைக்கு இல்லை என்று எனக்கும் தெரியும். விளம்பரத் தொழிலில் பெரிய ஆளாக வரவேண்டும் என்று அதே குறிக்கோளோடு உழைப்பதில், அது தவிர வேறு நினைவே இல்லாமல் இருக்கிறாய் என்பது என் ஊகம்..''

மீண்டும் அபிராமி திகைத்தாள்.

எப்படி மறந்தாள்?

அவள், பிறர் மதிக்கும் பெரிய ஆளாக வரவேண்டும். 'அநாதை அபிராமி' என்ற அலட்சியம் மறைந்து, 'அபிராமி' என்று எல்லோரும் போற்ற வேண்டுமே. அந்த நிலையை அடைவதுதானே அவளது லட்சியம்! அதைவிட முடியாதே.

என்னென்ன சொன்னாள், பாவி! அவள் முன்னால் நிமிர்ந்து காட்ட வேண்டாமா? அப்புறம் ஊர் போற்ற! எதுவுமே, அவள் சொன்ன 'குறுக்கு வழி' என்று யாரும் குற்றம்சாட்ட முடியாத வகையில்.

நிமிர்ந்து அவனைப் பார்த்தவளுக்குச் சட்டென வாயில் வார்த்தை வரவில்லை. அவளது புலன்களே அவளது முடிவுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் நடத்துகின்றனவா? சற்றுமுன் அவள் கண்டுபிடித்தது ரொம்பவே சரிதான் போலும். ஆனால்...

எதற்கு எதை விலை கொடுப்பது என்று யோசிக்கையில் அவளுக்கு உள்ளே வலித்தது.

ஒன்றும் பேச மாட்டாமல் அபிராமி தவித்தபோது அவன் கேட்டான், ''என்னம்மா?''

அவன் குரலின் மென்மையில் மீண்டும் அவளுக்குக் கண்ணைக் கரித்தது! விழி நீரை வெளிக்காட்டிவிடாமல் உள்ளுக்கிழத்தவாறு ஒன்றுமில்லை என்பது போலத் தலையசைத்தாள் அவள்.

அவன் கேள்வியாக நோக்கவும், ஒருவாறு சுதாரித்து, ''பட்டாசு வெடிக்கிற மாதிரி லகுவாகக் குண்டைத் தூக்கிப் போடுகிறீர்களே'' என்று, முயன்று முறுவலித்தாள்.

''அவ்வளவு அதிர்ச்சியா?'' பல் தெரியச் சிரித்தான் அவன். ''என்ன செய்வது? உனக்குக் கண்ணைத் திறக்க வேண்டியிருந்ததே. சொல்லப் போனால் இன்னமும்கூட ஒரு கண்திறப்பு அவசியம் என்பது என் அபிப்பிராயம்..''

அவன் சொல்ல வருவது புரிய, அபிராமியின் கன்னங்கள் லேசாகச் சிவந்தன. அவளையே, அவளுக்கு உணர்த்தப் போகிறானாம். அவளே உணர்ந்துவிட்டது. அவனுக்குத் தெரியாதே.

ஆனால், என்ன புரிந்து என்ன?

அபிராமி கவனத்துடன் வார்த்தைகளைப் பொறுக்கும்போதே வாயிற்புறம் அரவம் கேட்க, சிவசந்திரன் எழுந்தான்.

''சற்று வெளியே போய்வரலாமா, அபிராமி? உன்னோடு, இடையூறின்றித் தனியாகப் பேச வேண்டும்.''

உள்ளே வந்து, இரு குளிர்பான பாட்டில்களை அருகிருந்த மேஜை மீது மகாலட்சுமி வைத்தாள். இருவர் முகங்களையும் பார்த்தவள் சின்ன முறுவலுடன், ''ஸாரி! இதற்கு மேல் மெதுவாக என்னால் நடக்க முடியவில்லை!'' என்று முணுமுணுத்துவிட்டு, ''உங்களுக்கு எதை உடைக்கட்டும், சார்?'' என்று வினவினாள்.

''மன்னிப்புக்கேட்க வேணடியவன் நான்தான். வீணாக அலைய வைத்துவிட்டேன், இப்போது எதுவும் வேண்டாம்..'' என்றவன், அபிராமியிடம் திரும்பி ''கிளம்புவோமா?'' அழைத்தான்.

ஒரு கணம் தயங்கினாலும், ''சரி'' என்று அபிராமியும் எழுந்தாள்.

இதை நீட்டிப்பானேன் என்பதுதான், அவளுக்குமே.

டீ கம்பெனிக்குத் தேவையென்று அவள் எடுத்து வைத்திருந்த குறிப்புகளை வரிசைப்படுத்துமாறு மகாலட்சுமியிடம் கூறிவிட்டுக் கிளம்பினாள்.

ஓட்டலில், குடையடியில் அமர்ந்து, பழச்சாறு கொண்டு வரச்சொல்லி விட்டு, அவள்புறம் திரும்பி, ''தண்ணீரில் முதலைக்குப் பலமாம். அதனால்தான், உன் இடத்திலிருந்து உன்னைக் கிளப்பி இந்தப் பொது இடத்துக்குக் கூட்டி வந்தேன்.'' என்றவன், அவள் கைகளைப் பற்றிக் கேட்டான். ''நான் உன்னை நேசிக்கிறேன் அபிராமி! என்னைத் திருமணம் செய்துகொள்வாயா?'' என்று.

உண்டு, இல்லை என்று தெளிவாகப் பதில் கூற வேண்டிய விநாடி வந்துவிட்டது.

ஒரு பெரிய மூச்சை எடுத்து வெளியிட்டுவிட்டு, அவள் சொன்னாள்.
''மன்னித்துக்கொள்ளுங்கள், சிவா! இது... இது நடக்க முடியாதது!'' என்றாள் தெளிவாக.

திடுக்கிட்டு, அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கிய சிவசந்திரன், தன் காதுகளோடு, கண்களையும் நம்ப முடியாமல் திகைத்தான்.

(தொடரும்)

முன்கதை: அபிராமி பெற்றோர் இல்லாமல் இல்லத்தில் வளர்ந்தவள். உழைப்பாளி. படித்து விளம்பர கம்பெனியில் தொழில் கற்று சொந்த கம்பெனி நடத்துகிறாள். சோப்புத் தூள் கம்பெனி உரிமையாளரான சிவசந்திரனை விளம்பரம் தொடர்பாக அடிக்கடி சந்திக்க நேர்கிறது. அதைப் பற்றி அவதூறாக பேசுகிறாள் சுரேகா. அவள் சிவசந்திரனின் உறவுக்காரி; அவர்களுக்கு திருமணம் என தகவல் கிடைக்க அபிராமி மனம் கனக்கிறது. சிவசந்திரன் அவளைத் தேடி வருகிறான். தன்னை மணக்க சம்மதமா? என்று கேட்கிறான். அவள் 'இது நடக்க முடியாதது' என்கிறாள். சிவசந்திரன் அதிர்ச்சி அடைகிறான்.

''அபிராமி?!''

சிவசந்திரனின் பிரமிப்பை அபிராமியால் புரிந்துகொள்ள முடிந்தது.

இளைஞன். கம்பீரமான தோற்றம். நன்றாக தொழில் நடத்துகிறவன். வளம் படைத்தவன். குற்றம் காண முடியாத நடத்தை. இவனை மணக்க, நீ நான் என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள்.

ஏன்? கண்முன்னே சுரேகா இல்லையா? அவள் அவனைச் சுற்றுவதே, அவனது சிறப் புக்கு பெரும் எடுத்துக்காட்டு. அப்படி ஒருவனை அவளது நிலையில் உள்ள ஒருத்தி மறுக்கிறாள் என்றால், நம்புவது கடினமாகத்தான் இருக்கும்.

ஆனால், சிவசந்திரனின் திகைப்பு அவளுக்கு வேதனை தந்தது போலவே, விசித்திரமான வகையில் ஒரு நிமிர்வையும் அளித்தது. எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், அவன் கேட்டதுமே ஒருத்தி அவனை மணந்துதான் தீரவேண்டும் என்று என்ன கட்டாயம்? அதை அவன் எப்படி அவ்வளவு நிச்சயமாக எதிர்பார்க்கலாம்?

'எப்படி?' என்பதன் காரணத்தை அவனே சொன்னான்.

மற்ற ஆண்களிடம் அவள் பழகிய முறைக்கும், அவனிடம் பழகிய விதத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டாம். மற்ற ஆண்களைப் பார்க்கும்போது அவள் கண்களில் 'தூர நில்' என்கிற எச்சரிக்கை நன்றாகவே தெரியுமாம். ஆனால், சிவசந்திரனிடம் தோழமை மட்டும்தானாம். அவனது பார்வை மாறியபோதுகூட அவள் ஆட்சேபிக்கவில்லையாம். கலகலப்பும் சிரிப்புமாக அவனோடு பழகியதுபோல, அவள் வேறு யாருடனும் பழகியது இல்லையாம். அவனைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது. கண்கள் பளிச்சிட்டது...

''என்னைக் கண்டதும் எல்லாப் பெண்களும் மயங்கி விடுவார்கள் என்கிற கர்வம் எனக்கு இல்லை அபிராமி. ஆனால், என் ஆவலுக்கு உன்னிடம் மறுப்பில்லை என்பது எனக்கு நிச்சயமே. காதல், கல்யாணம் என்று கொஞ்சம் யோசித்திருந்தாலும் உன் உள்ளுணர்வு என்னவென்று உனக்கே புரிந்திருக்கும்!'' என்று அவன் விளக்கவும், அவள் தலை தாழ்ந்துவிட்டது.

ஒரு வினாடியில் என்ன எண்ணிவிட்டாள்.

அதோடு, அவன் பேச்சில் இருந்த உண்மை இப்போது அவளும் அறிந்ததுதானே?

அவனது நேசப்பார்வை இவளை உறுத்தாததன் கார ணமே அவளது ஆழ்மனம் அதை ஒப்புக்கொண்டு விட்டதால்தானே? அவனோடு ஏட்டிக்குப் போட்டி பேசுவ தில் இருந்த உற்சாகம். எதையும் அவனிடம் பகிர்ந்துகொள் ளும் உந்துதல். ஏன், சுரேகா மீது வெறுப்பு ஏற்படக் கார ணமே பொறாமைதான் போலிருக்கிறது? மற்றபடி ஒரு பெண்ணின் திருமணத்தை நிறுத்தும் எண்ணம் அபிராமிக்கு வருமா? அந்தப் பெண் சுரேகாவாக இருந்தாலும்.

கொஞ்சம் யோசித்திருந்தால் அவளுக்கு எப்போதோ புரிபட்டிருக்குமே!

'பெட்டர் லேட் தன் நெவர்' என்பதுபோல இப்போதே னும் தெரிந்ததே என்று சந்தோஷப்பட வழியில்லை. இப்போது திடுமெனப் புலப்பட்ட இந்த இனிய உண்மை எந்தவிதத்திலும் நிலைமையை மாற்றுவதற்கில்லை.

ஆனால், அவன் தன்னைப் பற்றி தவறாக எண்ணா மலிருக்க காரணத்தை அபிராமி விளக்கினாள்.

''என் சிறு வயது தெரியுமில்லையா சிவா? எந்தவித ஆதரவும் இல்லாமல் வளர்ந்தவள்..''

''என் ஆதரவால் அந்த நிலையை மாற்றிவிடுவேன் கண்ணம்மா..''

தொண்டை அடைத்துக் கொள்ள, சில கணங்கள் அபிராமியால் பேச முடியவில்லை. இது, இவ்வளவு துன்பமாக இருக்கும் என்று அவள் நினைக்கவில்லை. ஒரு வேதனை எதிர்பார்த்ததுதான். ஆனால், இப்படி... நெஞ்சைத் திடப்படுத்திக்கொண்டு மீண்டும் முயன்றாள்.

''அதில்லை சிவா. ஒரு நல்ல நிலைக்கு வருமுன் என் வாழ்வில் திருமணத்துக்கு இடமே கிடையாது..''

சிவசந்திரன் சிரித்தான். ''என்ன பைத்தியக்காரத்தனம் அபிராமி. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவார்களா? என்னை மணந்துகொண்டால் நல்ல நிலை தானாக வந்துவிடாதா?''

''நானாக உயர்ந்ததாக அதை எப்படிச் சொல்ல முடியும் சிவா? உங்களை மணந்து உயர்நிலைக்கு வந்தால் இந்த நிலையை அடைய நீங்களும் உங்கள் தந்தையும் உழைத்த உழைப்பை நான் திருடிக் கொண்டதாக ஆகாதா? அது குறுக்கு வழி இல்லையா? குறுக்கு வழியில் வளம் தேடியதாகத்தானே எல்லோரும் சொல்லுவார்கள்.

சிவசந்திரனின் கண்ணிமைகள் சற்றே இடுங்கின.

''அதாவது, என்னை வலைபோட்டு பிடிக்க முயற்சிப் பதாக கூறிய மாதிரி. அப்படியெல்லாம் யார் பேசினார்கள் அபி?''

கீழுதட்டை லேசாக உள்ளிழுத்து அழுத்தியவண்ணம் அபிராமி பேசாதிருந்தாள். இவ்வளவு ஊகித்தவன் அதை யும் தானாக ஊகிக்கமாட்டானா, என்ன? ஊகித்தான்!

''சுரேகாவா?''

''.....''

''அவளுக்கு தன்னைத் தவிர மற்ற பெண்கள் யாரை யுமே பிடிக்காது. பொறாமையில் அவள் பேசுவதை யெல்லாம் பெரிதாக எடுப்பார்களா?''

''இன்று அவள் பேசியதை நாளை எல்லோருமே பேசுவார்கள்.''

''அதற்காக? அடுத்தவர் பேச்சுக்காக கழுதை சுமந்த அப்பாவும் பிள்ளையும் போல நீயும் நடந்துகொள்ளப் போகிறாயா?'' என்று ஏளனமாகக் கேட்டவன் உடனே மாறி, ''இதென்ன பைத்தியக்காரத்தனம் அபிராமி? இதற்காகவா என்னை மணந்துகொள்ள மறுக்கிறாய்? எவ்வளவோ புத்திசாலியான உன்னிடமா இந்த அசட்டுத் தனம்? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

சமயத்தில் பழச்சாறு வந்து சேரவே, தன் பதிலை யோசிக்க அபிராமிக்கு சற்று அவகாசம் கிடைத்தது.

பணியாள் அகன்றதும், ''நீங்கள் நினைக்கிற மாதிரி முழுக்க முழுக்க அடுத்தவர் பேச்சுக்கு பயந்து இந்த முடிவை எடுக்கவில்லை சிவா..'' என்றவளின் பேச்சில் இடையிட்டு, ''அதாவது, உனக்கே என்னை பிடிக்க வில்லை என்று சொல்லப் போகிறாயா? சற்று யோசித்து, ஒத்துக் கொள்ளக்கூடியதாக வேறொரு காரணம் சொல்லு. யோசிப்பதற்குத் தேவையான மூளையிருந்தால்.'' என்று எரிந்து விழுந்தான் சிவசந்திரன்.

சிறு அமைதிக்குப் பின், அபிராமி பேசலானாள். ''உங்கள் கோபம் புரிகிறது சிவா. அது என் மேல் உள்ள அன்பினால் வந்தது எனும்போது எவ்வளவோ ஆறுதலாகக்கூட இருக்கிறது. ஆனால், யோசியுங்கள் சிவா. சுலப வழியில் பணக் காரியாவதற்காக வலை போடுகிறேன் என்று ஒரு வம்புப் பேச்சு என்னவோ கிளம்பிவிட்டது. இப்போது உங்களை மணந்துகொண்டால் அதை உறுதி செய்த மாதிரி ஆகாதா? கேட்க அருவருப்பாக இல்லையா? அத்..''

''நம் இருவரின் இன்ப வாழ்வைவிட, மற்றவரின் பேச்சு, அதுவும் பொய்ச் சொல் பெரிதா?''

பார்வை தாழ்ந்துவிட்டபோதும் அபிராமியிடமிருந்து ''ஆமாம்!'' என்றுதான் பதில் வந்தது.

''அபிராமி!''

''தண்ணீரில் வசிக்கும் மீனுக்கு பாலைநிலத்தில் தண் ணீர் கிடைக்காமல் மடிவது பற்றி சொன்னாலும் புரியாது என்பார்கள். உங்களுக்கும் இது புரியுமோ என்னவோ..?''

''சொல்லித்தான் பாரேன். நம்மில் யாருக்குப் புரிகிறதோ பார்ப்போம். ஆனால் இந்த பழச்சாறை கொஞ்சம் குடித்து விட்டுச் சொல்லு. தொண்டை காய்ந்துவிடப் போகிறது.''

ரொம்பக் கோபமாயிருக்கிறானா?

அபிராமி ஓரக்கண்ணால் ஆராயவும் அவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

''மாதுளம் பழச்சாறு உடம்புக்கு நல்லது. ருசியாகவும் இருக்கும். நம் பேச்சு எந்த சுவையில் நடந்தாலும், இதை வீணாக்குவானேன்? குடி. குடித்துக்கொண்டே பேசு. இந்தா..'' என்று அவளது டம்ளரின் மூடியை அகற்றி அவள் புறமாக பழச்சாறை நகர்த்தினான்.

அவளுக்கு வாய் உலர்ந்துதான் போயிருந்தது. ஆனால், குடிக்க முயன்றபோது அந்தத் திரவமும் தொண்டையுள் சிக்கியது. சொன்னதற்காக முயன்று கொஞ்சம் குடித்து விட்டு மீண்டும் தொடங்கினாள்.

''உங்களுக்கு பொருளற்றுத் தோன்றினாலும் இது நிஜம் சிவா! மற்றவர்களது கருத்தைப் பற்றிய கவலையே இல்லாமல் நினைத்ததைச் செய்து நீங்கள் பழகி விட்டீர்கள். ஆனால், இல்லத்துக்கு கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக, உரக்க பேசுவதுகூட தப்பு, செய்யக்கூடாதது என்பது பள்ளி செல்லும்போது எங்களுக்கான அறிவு ரை. அப்போதிருந்தே நல்ல பெயர், கெட்ட பெயர், அடுத்தவர் பேச்சுக்கு பயப்படுவது ரத்தத்தில் ஏறிவிட்டது. ஆனால் அதைவிட... என் மன திருப்தி எனக்கு முக்கியம்.

‘என்னை மணப்பதை விடவா இவளுக்கு மற்றொன்று முக்கியம்?’ என்று நினையாதீர்கள். என் வாழ்விலேயே மிகச் சிறந்த நிகழ் வாக இருக்கக்கூடியது உங்களை மணப்பதுதான்! ஆனால், இப்போது அது நடக்க முடியாது...’’ என்று நிறுத்திவிட்டு, அவன் முகத்தைப் பார்த்தாள்.

‘‘மேலே சொல்லு’’ என்றான் அவன் சுருக்கமாக.

‘‘பாருங்கள் சிவா, இப்போது ‘சிவா’ என்றால், ‘வெண்புறா சிவசந்திரன்’ என்று எல்லோருக்கும் தெரி யும்...’’

‘‘குறுக்கே பேசுவதற்கு மன்னித்துவிடு. என்னைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதிக்கு சத்தியமா தெரியாது!’’ என்றவன் அபிராமி முறைக்கவும் தோளைக் குலுக்கினான்.

‘‘என்ன என்னவோ சொல்லி என் கனவுகளை கலைக்க முயற்சிக்கிறாய் என்று தெரிந்ததால், கொஞ்சம் குழப்பி விட முயன்றேன். சரி, சொல்லு!’’

அவனது குறுக்கிடலை விட விளக்கம்தான் அபிராமி யைத் தயங்க வைத்தது. ஆயினும் ஒரு பிடிவாதத்துடன் அவன் தொடர்ந்தாள். ‘‘இதற்கு முன்பும் சிறுவயதிலி ருந்தே ‘சிதம்பரத்தின் மகன்’ என்று உங்களுக்கு ஒருமுகம் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக எனக்கு அது இல்லை.’’

‘‘அது உன் தப்பு இல்லை, அபிராமி..’’ என்று குறுக் கிட்டு சொன்னான் சிவசந்திரன்.

‘‘இல்லைதான். ஆனால் அதற்கு ஒரு விளைவு இருக்கி றதே! இப்போது நம் திருமணம் நடந்தால், ‘வெண்புறா’ சிதம்பரத்தின் மகன் யாரோ ஓர் அனாதையை மணந்திருக் கிறான் என்றல்லவா எல்லோரும் சொல்லுவார்கள். மயக்கினாள், மயக்கவில்லை என்பது வேறுவிஷயம்! இது.. இப்படி, ஒன்றுமில்லாத ஒருத்தியாக உங்களை மணந்துகொள்ள எனக்கு விருப்பம் இல்லை. சிவா என்றால், ‘வெண்புறா’ சிவா என்று எல்லோரும் அறி வார்கள் அல்லவா? அதுபோல, அபிராமி என்றாலும், விளம்பரத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் அபிராமி என்று எல்லோரும் இல்லாவிட்டாலும், பெரும் புள்ளிகள் பலரும் அறிய வேண்டும். அதனால்..’’

‘‘உன் தேவை, உனக்கென்று ஒரு முகம். திருமணம் செய்துகொண்டு, உன் முயற்சியை தொடரலாமே!’’

‘‘என் முயற்சியாய் நான் வெற்றி பெற்றால்கூட, உங்கள் உதவியால்தான் என்பார்கள். அதைவிட மோசமாக, உங்களது இன்னொரு முயற்சி என்றுகூட பேசலாம். அதெல்லாம் சரி வராது, வேண்டாம். இதுபற்றி உங்களி டம் முக்கியமாக இன்னொன்று சொல்ல வேண்டும். அதாவது.. இந்த முயற்சியில் நான் வெற்றி பெற, இன்னும் எத்தனை ஆண்டு தேவைப்படுமோ தெரியாது. குறைந்தது இரண்டு மூன்று... ஏன், நாலைந்து ஆண்டுகள் கூட ஆகலாம். அதனால்.. வந்து, நீங்கள்..’’

சட்டென்று அவளது உதடுகளின் மேல் விரல் வைத்து, சிவசந்திரன் நிறுத்தினான். ‘‘அசட்டுத்தனமாக எதையும் பேச வேண்டாம். காத்திருக்கிறேன்.’’ என்றான்.

‘‘எவ்வளவு காலம் ஆனாலும்..’’ என்று அவன் சேர்த்துச் சொன்ன போது அபிராமியின் கண்கள் கலங்கின.

கண்ணைச் சுட்டிக்காட்டி, ''என்ன ஆயிற்று? மாதுளைச் சாற்றில் சர்க்கரைக்கு பதிலாக மிளகாய்த்தூளை போட்டு கொண்டுவந்துவிட்டானா? இதோ போய் அவனை உண்டு இல்லை ஆக்கி விடுகிறேன்..'' என்று இருக்கையை விட்டு எழுவது போல அவன் பாசாங்கு செய்ய, அபிராமி தன்னை மறந்து புன்னகை செய்தாள்.

மாலையில் வீடு திரும்பிய சிவசந்திரனின் முகம் சற்றே இறுகியிருந்தது.

தோட்டத்தில் அமர்ந்திருந்த சிதம்பரம் மகனை பார்த்த தும், ''என்னப்பா, வெளியே போயிருந்தாய் போல?'' என்று வினவினார்.

''அபிராமியுடன் வெளியே சென்றிருந்தேன்!'' என்றான் மைந்தன் சுருக்கமாக.

''அடுத்த செட் விளம்பரம் பற்றி பேசவா? அதை அலுவலகத்திலேயே பேசியிருக்கலாமே!''

அவரை நேராகப் பார்த்து, ''அவளிடம் என் மனதைச் சொன்னேன்!'' என்றான் அவன்.

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''என்ன, அடுத்த முகூர்த்தத்தில் திருமணமா? எங்களுக்கும் சொல்வீர்கள் தானே?'' என்ற அவர் குரலில் கேலி இழையோடியது.

''இப்போதைக்கு முடியாது என்கிறாள். குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதானாம்!''

''அவளா?! ஏனாம்?''

''அவளது விளம்பர நிறுவனம் ஒரு நல்ல நிலைக்கு வந்த பிறகுதான் திருமணமாம்!''

''நல்ல நிலைக்கு வருவது என்றால்? நாமே நிறைய விளம்பரங்கள் தர வேண்டுமாமா? அல்லது அவள்மூலம் விளம்பரம் செய்ய ஆள்பிடித்து கொடுக்க வேண்டுமா?''

குரலில் வெளிப்படையாக காட்டாதபோதும் உள்ளி ருந்த எகத்தாளம் அவனுக்கு புரியாமல் இல்லை. இதைத் தானே அபி எல்லோரிடமும் எதிர்பார்த்து அஞ்சுவதே!

''இரண்டும் வேண்டாமாம். நம் விளம்பரங்களைக் கூட வேறு யாரிடமாவது கொடுக்கச் சொல்லுகிறாள்!'' என்று உள்ளுர ஒரு திருப்தியோடு விளக்கினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, முகத்தில் திகைப்பு பரவ, ''இதென்ன கதை?!'' என்றார் சிதம்பரம்.

''ஆமாம்பா. எந்த உதவியும் செய்யக்கூடாதாம். அவள் தன் முயற்சியில்தான் உயர வேண்டுமாம்.''

''ம்ம்ம்..'' என்று யோசித்தவர், மகனை கூர்ந்து நோக்கி, ''உட்கார்..!'' என்றார். ''அபிராமி பற்றி சூரி என்னென்னவோ சொல்கிறாளேப்பா!'' என்று தொடங்கினார்.

''ச்சு! அவள்தானே!'' என்றான் மகன் அலட்சியமாக.

''எல்லாம், உன் மேலுள்ள அன்பால்தானேப்பா?''

''சே! நம் வீட்டுக்கு சரி வராதுப்பா...!'' என்று சுருக்கமாக முடிக்க முயன்றான் மகன்.

''அவள் அம்மா நல்ல விதம் என்று உன் அம்மா சொல்கிறாள். தகப்பனாரிடமும் குறைசொல்ல முடியாது. நல்ல குடும்பம். அதுதான் பார்த்தேன்...''

உறுதியாக தலையசைத்தான் பிள்ளை. ''வேண்டாம்பா. எதை பார்ப்பதையும் இதோடு விட்டுவிடுங்கள்.''

சிறு அமைதிக்குப் பின், ''சரி'' என்றார் சிதம்பரம். ''ஆனால், இரண்டு வருஷமா? எங்களுக்கும் அடுத்த தலைமுறையை கொஞ்சும் ஆசை இருக்கு மல்லவா... மறைமுகமாக உதவிப் பாரேன்'' என்று ஆலோசனை கூறினார்.

''வேண்டாம்பா. எந்த உதவியையும் அபிராமி ஏற்றுக் கொள்ளமாட்டாள். அவள் ஒரு மாதிரி பிடிவாதக்காரி!'' என்று மகன் சொல்ல, சிதம்பரம் யோசனையில் ஆழ்ந்தார்.

(தொடரும்)

முன்கதை: பெற்றோரை அறியாத அபிராமி, இல்லத்தில் வளர்ந்தவள். உழைப்பாளி. படித்து தொழில் கற்று விளம்பர கம்பெனி நடத்துகிறாள். சோப்புத்தூள் கம் பெனி உரிமையாளர் சிவசந்திரனை அடிக்கடி சந்திக்க நேர்கி றது. அதை அவதூறாக பேசுகிறாள் சுரேகா. அவள் சிவசந்தி ரனின் உறவுக்காரி; அவர்களுக்கு திருமணம் என தகவல் கிடைக்க அபிராமி மனம் கனக்கிறது. சிவசந்திரன் வருகி றான். தன்னை மணக்க சம்மதமா? என்று கேட்கிறான். கம் பெனியை நல்லநிலைக்கு கொண்டு வரும்வரை திருமணம் கிடையாது என்கிறாள். அதற்கு இரண்டு ஆண்டு பிடிக்கும் என்கிறாள். காத்திருக்கிறேன் எனச் சொல்லி போகிறான் சிவசந்திரன். தந்தையிடம் விஷயத்தை சொல்கிறான்...

நிச்சயமாக, வேறுபாடாக எதுவும் மாறிவிட வாய்ப்பில்லை. ஆனால், உலகம் முழுவதும் அழகாக மாறியிருப்பதுபோல அபிராமிக்கு தோன்றியது.

காரணத்தை தேடி, அவள் அதிக தூரம் ஓட வேண்டியது இல்லை.

அவளது காதல்!

ஒரே நாளில் அரும்பி, அலர்ந்து, மலர்ந்து, அழகாக விரிந்து, மணம் பரப்பிக் கொண்டிருந்தது.

பாலை நிலங்களில் ஒருவகை தாவரம் உண்டாம். வறுத்தெ டுக்கும் வெயில் கொளுத்தும் போதெல்லாம் அது இருக்கிற இடமே தெரியாமல் மண்ணோடு மண்ணாக, அதன் விதை கள் கிடக்குமாம். ஆனால் ஒரு மழை விழுந்தால் போதும் ஓர் இரவுக்குள் முளைத்து, இலைவிட்டு மொட்டு தோன்றி, பூவிரிந்து, தரையே தெரியாமல், ரத்தினக் கம்பளம் விரித்தது போல அடைத்திருக்குமாம்!

அது போல, அபிராமிக்குள்ளும் காதல் தோன்றி, இருக்குமிடம் தெரியாமல், வாய்ப்பை எதிர்நோக் கிக் காத்திருந்திருந்தது போலும். இப்போது நெஞ்சை அடைத்துக் கொண்டு

அந்தப் பூ விரிந்த விதத்தில் அவளுக்கு வேறு எதை யும் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை!

சிவசந்திரனின் தோற்றத்தில் இருந்து, அவனோடு பேசியது சிரித்தது என்று அதே நினைவுகளில் மூழ்கிக் கிடந்தவளுக்கு வேலையில் மனம் செல்லவில்லை. அன்று வரை அவள் அறிந்திராத ஒரு நிலை. அடுத்தவர் வேலையைக்கூட முழு ஈடுபாட்டுடன் செய்கிறவள் சொந்த வேலையை தொடர்ந்து செய்ய முடியாமல், மனம் அலைபாய விட்டாள்.

'எவ்வளவு காலமானாலும் காத்திருப்பேன்' என்று அவன் சொன் னது நினைவு வர, கண் கசிந்தது அவளுக்கு. இப்படியோர் அன்பு கிட்ட, அவள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்?!

இப்படி பல்வேறு எண்ணங்கள் குறுக்கிட, டீ நிறுவனத்துக்கு தேவையான குறிப்புகளை மறுநாள் சரிபார்த்துக் கொள்ளலாம் என்று அவள் எடுத்து வைத்தபோது, அறையுள் மணியடித்தது.

இன்டர்காம். எப்போது கிளம்புவீர்கள் என்று 'செக்யூரிட்டி' கேட்கக்கூடும். அதிகநேரம் இருப் பாளா என்று உறுதி செய்து கொள்ளவும், அவ ளுக்கு எதுவும் தேவையா என்று விசாரிக்கவும் காவலுக்கு இருப்பவன். அவ்வப்போது இப்படி

அழைத்து கேட்பதுண்டு.

அலுவலக நேரம் முடிந்து, எல்லோரும் அவரவர் கூட்டுக்கு பறந்தாயிற்று. அபிராமிதான் இந்த ஒரு வேலையை முடித்துவிட்டுப் போகலாம் என்று உட்கார்ந்திருந்தாள். வளர்ச்சியில் அக்கறை கொண்ட முதலாளி ஆயிற்றே!

வழக்கமாக, எடுத்த வேலையை முடித்து விட்டு போவாள். மணி எட்டாகியும் இன்று அது முடியவில்லை.

ரிசீவரை எடுத்து பேசினாள். அவளைப் பார்க்க யாரோ வந்திருப்பதாக தெரிவித்தான்.

பெயர் சிதம்பரம் என்றதும், ஒரு கணம் அபிராமியின் உள்ளம் பதறிவிட்டது.

அந்த ஒரு கணத்தில் சிவசந்திரனை தான் எவ்வளவு நேசிக்கிறோம் என்பதும் புரிந்தது.

சிதம்பரம் ஏன் வந்திருக்கிறார்? மகனை விட்டுக் கொடுக்குமாறு கேட்கவா?

ஆனால், அப்படி கேட்கிறார் என்பதற்காக மனம் ஒருமித்த அன்பை விட்டுத்தர, இது 'களத்தூர் கண்ணம்மா' காலம் அல்லவே.. மகனிடம் அவருக்கு உரிமை இருக்கலாம். அவளிடம்? சிதம்பரமும் யோசிக்காமல் எதை யும் பேசுகிறவர் அல்ல. யோசனையுடனேயே சென்று கதவைத் திறந்து, சிதம்பரத்தை உள்ளே அழைத்து வந்தாள் அபிராமி.

அவளது இடத்தை, ஆராய்ச்சிக் கண்ணால் நோட்டமிட்டார்! ''உன் மேஜையா?'' என்று கேட்டவாறு கூர்ந்து நோக்கியவர், ''என்னம்மா, திடுமென அதிகநேரம் வேலைசெய்ய தொடங்கி யிருக்கிறாய் போல!'' என்று கேட்டார்.

அவரது குறிப்பு புரியாமலில்லை! மெல்ல முறுவலித்து. ''வரும்போது, 'செக்யூரிட்டி'யி டம், பேசவில்லையா?'' என்று வியப்பு காட்டி னாள். அவரது பதிலை எதிர்பாராமல் தொடர்ந்து, ''அவசியப்படும்போது, இது தான் சார் பழக்கம். வேலை அதிகமாக இருக்கும். அதை விரைவாக செய்வது என்றால், இப்படி நாம் அதிகப்படி யாக செய்தால்தானே முடியும்!'' என்று அவரையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு விளக்கினாள்.

அவளது முயற்சியைக் கண்டு சிதம்பரம் லேசாக சிரிக் கவும், முகம் சிவந்த அபிராமி ஆறுதலாகவும் உணர்ந்தாள்.

நான் கோடீசுவரன் அல்லவா என்று விறைத்துக் கொள்ளவில்லையே!

''உட்காருங்கள், சார். பால் கொண்டு வர சொல்லட் டுமா? பிஸ்கெட் இருக்கிறது. உண்ணலாமில்லையா?'' என்று ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு, போனில் பாலுக்கு சொல்லி, விருந்தோம்பத் தொடங்கினாள்.

உட்கார்ந்தவாறே, ''அந்தக் காலத்தில், ஒருவரால் கெடு தல் நேரக்கூடும் என்று தோன்றினால், அவரை வீட்டுக்கு அழைத்து பால் கொடுப்பார்களாம். பால் அருந்திய இடத் துக்கு துரோகம் செய்யக் கூடாது என்பது ஒரு நியதி. அதெல்லாம் கூட படித்திருப்பாய் போல தெரிகிறது'' என்றார் அவர் இலகுவான குரலிலேயே.

ஐம்பதை தாண்டியவருக்கு இந்த நேரத்தில் காபி கொடுப்பது நல்லதல்ல என்று எண்ணியதற்கு இப்படி ஒரு விளக்கமா?

'உச்'சுக் கொட்டிவிட்டு, ''அந்தக் காலத்தில் எத்தனை யோ பழக்க வழக்கங்கள். அதையெல்லாம் இன்றைக்கு நினைத்துப் பார்ப்பது கூட நேர விரயம், சார்'' என்றபடி, பிஸ்கெட் பாக்கெட்டை எடுத்தாள் அபிராமி.

''வேண்டாம் அபிராமி! காபி போலவே பிஸ்கெட் டும் இந்த நேரத்தில் எனக்கு நல்லதல்லதான்'' என்றவர் ''நான் எதற்காக வந்தேன் என்று யோசித்தாயா?'' என்றார்.

வாட்டத்தை முகத்தில் காட்டாதிருக்க முயன்றாள் அவள். தெருமுனை காபி ஷாப் பையன், பால் கொணர்ந்து வைத்துவிட்டு காசு வாங்கிப் போனான்.

அவன் சென்றதும், ''குடியுங்கள் சார்!'' என்று அவர் முன் பால் கோப்பையை வைத்தாள் அபிராமி.

''உன் ஊகம், அவ்வளவாக சரியில்லை, அபிராமி'' என்று கூறிவிட்டுப் பாலை குடிப்பதில் முனைந்தார் அவர்.

'அவ்வளவாக' என்றால்? பாதி சரி என்கிறாரா? பாதி தப்பா? சரி அல்லது தப்பு! இதில் பின்னம் எப்படிவரும்?

ஒருவேளை சினிமாவில் வருகிற மாதிரி, 'உன் பெற் றோரை கண்டு பிடித்து வா' எனப் போகிறாரா? முயன்று, முடியாமல் போன விஷயம் அது. அதை காரணம் காட்டி, அவளை விலக்க, சிவசந்திரன் இடம் கொடுக்கமாட்டான்.

தானாக வரட்டும் என்று அவள் காத்திருக்க, '' என்னவென்றே கேட்கவில்லையே!'' என்றார் சிதம்பரம். ''அவ்வளவுதான் அக்கறையா?''

''சொல்வதற்காகவே வந்திருக்கிறீர்கள். நீங்களாக சொல் வீர்கள் என்று காத்திருப்பதாக எடுத்துக் கொள்ளலாமே!''

''பாவம் பையன். திண்டாடப் போகிறான்!'' என்று முறுவலித்தவர், ''அதாவது உன்னை மணந்து கொண் டால்'' என்று சேர்த்துச் சொன்னார்.

சிடுக்கு வைத்துக் கொண்டே போகிறாரே.

அவரை நேராக பார்த்து, ''யாருமற்றவள், குலம் கோத்திரம் தெரியாத அனாதை என்று யோசிக்கிறீர்களா, சார்?'' என்று கேட்டாள்..

''அதில், உன்னை குற் றம் சொல்ல முடியாது என் பதுகூட புரியாதது அல்ல எங்கள் குடும்பம். சொல்லப் போனால், பின்புலம் ஒன்றுமேயில்லாமல், தன் முயற்சியால் மூன்று பேருக்கு சம்பளம் கொடுக் கும்படியாக நிறுவனம் வைத் திருக்கிறாளாமே, அந்தப் பெண் ணைப் பார்க்க வேண்டும் என்று என் மனைவி சொல்லிக் கொண்டி ருக்கிறாள். மகனின் கைங்கரியம். தினமும் உனக்கு ஒரு புகழாரம் சூட்டா மல் அவனுக்கு தூக்கம் வராது.''

தன்னையறியாமலே அபிராமியின் முகம் மலர்ந்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து, அவள் அவனை மணக்கப் போகிறாளே.

''பிறகு என்ன வேறுபாடு, சார்?''

''வேறுபாடு இருப்பதாக நான் சொல்லவே இல் லையே. சரியாக கணிப்பதானால், நீயும், நானும் ஒரே ஜாதி, தெரியுமா?''

''என்னது?'' என்று, வாயைப் பிளந்தாள் அபிராமி. ''எனக்கு ஜாதியே தெரியாது, சார்.''

''நான் அந்த ஜாதியை குறிப்பிடவில்லை. உன்னை போலவே நானும் ஒரு காலத்தில் முகம் தேடியவன். லட்சுமியின் கணவன், சுந்தரமூர்த்தியின் மருமகன் என்பது தவிர, வேறுமுகம் வேண்டும் என்றுதான் இந்த 'வெண் புறா'வை தொடங்கினேன். அவள் அப்பாவின் பணத்தைப் பயன்படுத்தாமல், அடிமுதல் கஷ்டப்பட்டு செய்தேன் என்று சிவா அம்மாவுக்கு வருத்தம்கூட உண்டு. நீயும் அதுபோல ஏன் செய்யக் கூடாது?''

மகன் கேட்டதுதான். தந்தை, கொஞ்சம் மாற்றிக் கேட்கிறார்.

''ஏனென்றால், இன்னா ருடைய மருமகன் என்பதற்கு முன்பே, இவருடைய மகன் என்று ஓர் அங்கீகாரம், உங்களுக்கு இருந்தது. நான் அப்ப டியல்லவே. பால பாடத்திலிருந்து, தொடங்கி செய்ய வேண்டும். என் முகமே, இதில்தானே உருவாக வேண்டும்? இப்போ தைக்கு ஒரு வரி வடிவத்தை உருவாக்கியிருக்கிறேன். இரண்டு ஆண்டுகளில் முழுமுகத்தையும் உருவாக்கி விடுவேன் என்று நம்புகிறேன்'' என்றாள் நம்பிக்கையோடு.

ஆனால், ''அதில்தானே, பிரச்னையே'' என்றார் சிதம்பரம்.

அவள் திகைத்து நோக்க, ''பார் அபிராமி, சிவாவுக்கு இப்போதே 27வயது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் 29 முடிந்துவிடும். அவன் எங்களுக்கு ஒரே வாரிசு. பேரன் பேத்திக்காக எவ்வளவுகாலம் காத்திருப்பது?'' என்றார்.

''இன்னும் இரண்டு ஆண்டுகள்...'' என்று பதிலுரைக்கும்போதே, அபிராமியின் குரல் நலிந்து நைந்து விட்டது.

இரண்டே ஆண்டுகளில் வெற்றி கிட்டியே தீரும் என்று எப்படி சொல்வது?

'எவ்வளவு காலம் ஆனாலும் காத்திருப்பேன்' என்று, சிவா சொல்லலாம். ஆனால், பெற்றோர் கால வரையறையின்றி காத்திருக்க ஒப்புக்கொள்வார்களா?

திருமணம் அவன் சொந்த விஷயம், அதில் தலையிட பெற்றோருக்கு உரி மையில்லை என்று வசனம் பேச அவள் தயாரில்லை. உயிரைத் தந்து, கல்வி தந்து, சமூகத்தில் ஒரு நிலையை பெறும் அளவுக்கு வளர்த்து விட்ட பெற் றோரை அப்படி தூக்கி எறிவதில் அவளுக்கு உடன்பாடு கிடையாது. ஆனால்...

'' 'மழை பெய்வதும், மங்கை பூப்பதும், மக்கள் பிறப்பதும் மகேசன் கையிலே' என்று பழமொழியே இருக்கிறது. தொழில் வெற்றியையும் அவற் றுடன் சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு ஆண்டுகளில் ஜெயித்தே தீருவாய் என்பதற்கு எந்த உத்திர வாதமும் இல்லை என்பது, உனக்கே, தெரியும்.''

முகம் இறுக அவள் காத்திருக்கையில் அவரே தொடர்ந்தார்.

''பழைய சினிமாக்களில் வருகிற மாதிரி, 12 மணிவரை டாக்டர் கெடு வைக்க, நிமிஷமுள் டொக்கு, டொக்கு என்று நகர்ந்து சரியாக பன்னிரண்டை அடையவும், நோயாளி கண் திறப்பதோ, மண்டையைப் போடுவதோ நடக்குமே, அதுபோல நான் சொல்ல மாட்டேன். தேவைப்பட் டால் இன்னும் ஓரிரு மாதங்கள் அதிகமாக எடுத்துக்கொள். ஆனால், அதற்குள் நீ கூறுகிற நிலை வந்துவிட வேண்டும். அல்லது ஒன்று நீ இந்த நிறுவனத்துக்கு தலைமுழுகிவிட வேண்டும். அது முடியாதென்றால் என் மகனை விட்டு ஒதுங்கி விடவேண்டும். என்ன சொல்கிறாய்?'' என்றார் சிதம்பரம்.

சொல்வதற்கு என்ன இருக்கிறது? நியாயமற்று அவர் பேசவில்லை. இரண்டு ஆண்டு அவகாசத்தை குறைக்க முற்படவில்லை. முயற்சியில் அவள் தோற்றால்கூட இன்னொன்றை பற்றிக்கொள்ள வாய்ப்பு தருகிறார். இழுபறிநிலையிலேயே இருக்கக் கூடாது என்பதுதான் அவரது நிபந்தனை. இதில் மறுக்கவோ மாறுகூறவோ என்ன இருக்கிறது?

''சம்மதம்'' என்று ஒப்புக்கொள்ளும் போதே அபிராமி நெஞ்சுக்குள் சிலீரென்றது!

ஒரு வேளை அதற்குள் வெற்றி பெற முடியாவிட்டால் எந்தக் கண்ணை இழப் பது? தொழில் வெற்றியும், அவளுக்கு காதலைப் போலவே முக்கியமானது!

''இது ஒரு 'ஜென்டில்மேன் அக்ரிமென்ட்' அபிராமி. சிவா காது வரை போகாது என்று நம்புகிறேன்'' என்ற சிதம்பரம், வந்த வேலை முடிந் தது என்பது போல எழுந்தார். ''வச திப்படும் நேரத்தை தெரிவி. என் மனைவியை சந்திக்க உன்னை அழைத் துப்போக

ஏற்பாடு செய்கிறேன். ஆனால். நினைவிருக்கட்டும், வருங் கால மருமகளாக அறிமுகம் செய்யமாட்டேன். சாதனைப் பெண்ணாக மட்டு மே'' என்றார்.

தயக் கத்துடன்தான், அபிராமி சென்றாள். சிதம்பரத்தின் அழைப்பின் பின்னே, ஏதா வது இருக்குமோ என்ற கலக்கம்.

ஆனால் மலர்ந்த முகத்துடன் சிவ சந்திரனை பார்த்துமே, அவளது கலக் கம் பறந்தோடிவிட்டது. கூடவே, அவ னுடைய தாயார் லட்சுமியும் பரிவும் பாசமுமாக அவளை வரவேற்கவே மிகவும் மகிழ்ச்சியாகவே உணர்ந்தாள்.

சிதம்பரம் வீட்டை தானே சுற்றிக் காட்டினார்.

வீண் டாம்பீகம் இல்லாவிட்டாலும் நன்கு செலவு செய்து, அழகாக கட்டப் பட்டிருந்தது. வசதியாகவும்.

இதற்கு ஆசைப்பட்டு என் கொள் கையை பறக்கவிட்டு விடுவேன் என்று எண்ணினாரா என்று அவள் யோசிக்க, அவர் சொன்னது வேறு!

அவளை கொண்டு விடுமாறு, மகனைப் பணித்தவர், வழியனுப்பும் பாணியில் வாயில் வரை அவளோடு கூட வந்தவர், ''பாரம்மா, இதெல்லாம் என் சாதனை. நான் சேர்த்தது. ஆனால் இதற்கு எனக்கு பதினைந்து ஆண்டுகள் பிடித்தன. உனக்கு அந்த அவகாசம் இல்லை என்பதை மனதில் வைத்துக் கொண்டு வேலை செய்'' என்றார்.

அவரது பேச்சு, தார்க்குச்சியாய் அவளை உசுப்பிவிட, முழுமுனைப் புடன் அபிராமி வேலை செய்து கொண்டிருந்தபோது, அழையா விருந்தாளி ஒருவர் அவளது அலுவலகத்துக்கு வந்தார்!

(தொடரும்)

முன்கதை: அபிராமி விளம்பர கம் பெனி நடத்துகிறாள். சோப் புத்தூள் கம்பெனி உரிமையா ளர் சிவசந்திரனை சந்திக்க நேர்கிறது. தன்னை மணக்க சம்மதமா? என கேட்கிறான். கம்பெனி நல்லநிலைக்கு வரும்வரை திருமணம் கிடை யாது என்கிறாள். காத்திருக் கிறேன் என்கிறான் அவன். தந்தையிடம் சொல்கிறான். அவர் அபிராமியிடம் பேசுகி றார். இரண்டு ஆண்டுக்குள் அவள் கம்பெனி மேலே வரத் தவறினால் அதை மூடிவிட வேண்டும் அல்லது சிவாவை மறந்துவிட வேண்டும் என்கி றார். சவாலை ஏற்கிறாள் அபிராமி. இனி...

வந்தவர் அழையா விருந்தாளி மட்டுமல்ல... வேண்டாத விருந்தாளியும்கூட. மைத்ரேயன்!

கிட்டத்தட்ட அவள் மறந்தே போய்விட்ட ஒருவர் அவளது அழைப்பேதும் இன்றி திடுமென ஆஜராகவும் அபிராமி சற்று திகைத்தாள்.

சில கணங்கள்தான். அதற்குள் இவர் ஏன் வந்தார் என்ற சிறு வெறுப்பு மாறி, எதற்காக வந்திருக்கக் கூடும் என்ற யோசனை தலை தூக்கியது.

எதையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் 'வாருங்கள் சார். உட்காருங்கள்' என்று வரவேற்று உபசரித்தாள்.

அலுவலகத்தில் இருந்த மற்றவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தினாள். ''மகாலட்சுமியை ஏற்கெனவே பார்த்திருக்கிறீர்கள்'' என்றவள் மைத்ரேயனின் முகம் கறுப்பதை திருப்தியுடன் பார்த்தாள்.

ஆனால், ''ஆமாம், அன்றைக்கு...'' என்று மகாலட்சுமி தொடங்கவும் அவசர மாக, ''நான் பயிற்சி எடுத்துக் கொண்டதெல்லாம் இவரது நிறுவனத்தில்தான். பார்கவி ஒரு வேலையை தொடங்கினால் பசி தாகம் பாராமல் அதை முழு வேகத்துடன் செய்து முடிப்பது இவரது 'ரேயன்' நிறுவனத்தின் தனிச்சிறப்பு'' என்று விவரித்தாள்.

அவரிடம் பணி புரிவோரின் பசி, தாகம் பற்றி அவர் நினைத்துக்கூட பார்ப்பதில்லை என்பது உண்மை தானே? விரட்டி, விரட்டி வேலை வாங்குவதிலும், அப்படித்தான்.

ஆனால், தற்பெருமையே உருவான மைத்ரே யன், அபிராமி யின் பேச்சை பாராட்டாகவே எடுத்துக் கொண்டார். நாலு பெண்களைப் பார்த்த குஷி வேறு. ''அப்படி பார்த்ததால் தானே என் நிறுவனம் இப்படி வளர்ந்திருக் கிறது'' என்று பெருமையடித்தார். அத்தோடு நில்லாமல், ''அபிராமி என் மாணவிதானே? அவள் நன்றாயிருக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம். அதற்காகவே பக்கத்தில் இருந்து, இன்னும் பலது கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது என் ஆசை. கற்றுக் கொடுத்து எங்கேயோ உயரத்தில் தூக்கி வைப் பதற்காகத் தானே அவள் இருப்பிடம் தேடி நான் வந்திருப்பதே. முதலில் வேலை நேரத்தில் இப்படி கூட்டம் போட்டு, வம்பு பேசக்கூடாது. இந்த நேரத்துக் கும் சேர்த்துதானே சம்பளம் கொடுக்கிறாள்?'' என்று அவர் மேதாவி போல கூறவும், சட்டென மற்ற பெண்கள் மூவரின் முகங்களும் வாடி கடுத்தன.

இவரை ஒரு மனிதர் என்று அறிமுகப்படுத்தியதால் அல்லவா, கைவேலையை போட்டுவிட்டு அவர்கள் இங்கே வந்து நின்றதே. இவரது மன்மத ரூபம் கண்டு மயங்கியதால் என்று எண்ணினாரா?

''அப்படி சொல்லாதீர்கள் சார். உங்களைப் போன்ற பெரிய மனிதர்களை இனம் கண்டு அறிவதில் எவ்வளவு நேரம் செலவானாலும், அது என் நிறுவனத்துக்கு பிற்காலத்தில் லாபமாகவே முடியும் சார். உபயோகமான முதலீடு போல மனிதர்களை புரிந்துகொண்டால்தானே, அவர்களை எங்கே நிறுத்தி பழக வேண்டும் என்பதும் புரியும்? நிறுவனம் இன்னும் முன்னேறி, வேலை அதிகம் ஆகும்போது வேண்டாத ஆட்களை, நேர விரயம் இல்லாமல் விரட்டி அடிக்க தெரிந்துவிடும். அது எவ்வளவு லாபம்'' என்று இரு பொருளில் அவள் பேசியது புரிந்துவிட, முறுவலித்தவாறு மூவரும் தமது இடத்துக்கு சென்றனர்.

அங்கே சுமனா, பார்கவி இருவரும் விளம்பர நிறுவன அனுபவம் உள்ளவர்கள். கூட வளர்ந்ததால் மகாலட்சுமி அபிராமியிடம் நட்புடன் பழகுகிறவளும்கூட. அபிராமியின் தேவை என்று வரும்போது, கவுரவம் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டாள். ஆபீஸ் பையன் போல சில்லரை வேலைகூட செய்வாள்.

பெருமளவு மற்றவர்களும் இப்போது அப்படித்தான். ஏனெனில் பெருக்கி துடைப்ப வள் வராவிட்டால், அபிராமியே துடைப்பம் எடுத்துவிடுவாள். அதேபோல பணம் வரும்போது சின்ன 'ட்ரீட்' கொடுப்பாள். எனவே ஒருவருக்கொருவர் ஒரு பிரியமும் ஏற்பட்டிருந்தது. அவளுக்காக உயிரைக் கொடுப் பார்கள் என்று சொல்ல முடியாது என்றாலும் அசவுகரியங்களை பொறுத்துக் கொள்வார்கள்.

மைத்ரேயனின் பேச்சு அதுபோல ஒரு அசவுகரியம். பொறுத்துப் போனார்கள்.

''உட்காருங்கள் சார்'' என்று அபிராமி அவரை தன் மேஜைக்கு அழைத்துச் சென்றாள். டெலிபோனை எடுத்து, ஒரு டீ சொல்லிவிட்டு, ''வெட்டியாக பொழுதுபோக்க உங்களுக்கு நேரம் கிடையாது என்று தெரியும். சொல்லுங்கள் சார். என்ன விஷயமாக வந்தீர்கள்'' என்று கேட்டாள்.

''அது..'' என்று தொடங்கியவரின் கண் களில் அபிராமி மேஜை மீது கிடந்த டீ நிறுவன கடிதம் தென்பட்டது. அவர் முகம் கறுத்தது.

அந்த கடிதத்தின் பின்னணியில் ஒரு கதை உண்டு. இந்த டீ நிறுவனத்தின் விளம்பரத்துக்காக மைத்ரேயன் ஏற்கனவே முயன்றார். ஆனால் 'அபிராமி'யின் விளம்பரங்களை பார்த்துவிட்டு அங்கேயே கொடுப்பதாக இருக்கிறார்கள் என்று தெரிந்ததும், ஆனமட்டும் அதை தடுக்க முயற்சித்தார். தன்னால் கறிவேப்பிலையாய் எடுத்தெறியப்பட்டவள் தனக்கே போட்டியாக வருவதை எப்படித் தாங்க முடியும்? ஆனால், அவரது இந்த முயற்சி தோற்றுவிட, அவர் உடனே திட்டத்தை மாற்றினார். அதன் அடிப்படையில்தான் அவர் அபிராமியை தேடிவந்ததே.

ஆனால் நினைத்து வந்ததை செயலாற்ற முடியவில்லை. அதற்கு வேண்டிய தனிமை அபிராமி அலுவலகத்தில் கிடைக்கவில்லை.

அன்றைய நிலையில் அவரை விடவுமே வளர்ந்துவிட்டாலும், வந்த பணத்தில் மைத்ரேயனை போல அபிராமி தன் சுகத்துக்காக தனியறை, அதில் ஏசி என்று செய்து கொள்ளவில்லை. அந்த பெரிய அறையில் ஒன்றரை மீட்டர் உயரத்தில் ஒரு தடுப்பு மட்டுமே, அவளது முக்கியத்துவத்தை காட்டியது.

தடுப்பு, கண்ணை மறைத்தாலும், அங்கே பிறர் அறியாமல் எதையும் பேசுவதற்கில்லை. அவரது திட்டமோ, அடுத்தவர் அறியக்கூடாதது. குறைந்தது இப்போதைக்கு.

எனவே, அந்தப் பேச்சையே விடுத்து, அவர் நடத்த இருக்கும் ஒரு 'பிரஸ் மீட்'டுக்கு அவளை அழைக்க வந்ததாக கூறினார். பெரிய நிறுவன நிர்வாகிகள் வருவதால், அவர்களை அறிந்துகொள்வது அவள் வளர்ச்சிக்கு உதவும் என ஆசைகாட்டினார்.

பொதுவாக, பெரிய நிறுவனங்கள் மும்பையில் தலைமைச் செயலகம் உள்ள பெரிய விளம்பர நிறுவனங்கள் மூலமாகத்தான் விளம்பரங்கள் வெளியிடுவது வழக்கம். பத்திரிகையாளர் கூட்டத் துக்காக மட்டும் அந்தந்த பகுதியில் உள்ளவர்களை நாடுவார்கள்.

சென்னையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை 'ரேயன்' பொறுப் பேற்று நடத்துவதும், கலந்து கொண்டோருக்கான பரிசுகளில் அவர் கொஞ்சம் 'அபேஸ்' செய்வதும்கூட அபிராமிக்கு தெரியும்.

மைத்ரேயன் சொன்னது போல, இந்த துறையில் உள்ள பெரிய மனிதர்களை அறிந்துகொள்வது நல்லது என்று எண்ணி கூட்டத்துக்கு வருவதாக, அபிராமி ஒப்புக்கொண்டாள்.

ஆனால், மைத்ரேயன் பற்றிய அனுபவபூர்வ அறிவு இருந்த தால், அதிக நேரம் தங்காமல், அதே சமயம் முக்கியமான அறிமுகங் களை பெற்றுக்கொண்டு விரைவிலேயே கிளம்பிவிடுவாள்.

அடுத்து இரு மாதங்களில் ஐந்தாறு முறை அவளை அழைத்தும், மைத்ரேயனால் அவளுடன் தனித்துப் பேச வாய்ப் பில்லாமலேயே போய், அவர் பொறுமையிழந்து கொண்டிருந்தார். இந்த இரு மாதங்களில் அபிராமியின் நிறுவனமும் நல்லபடியாக வளர்ந்தது.

டீ கம்பெனி விளம்பரங்களோடு மேலும் சில புதிய விளம்பரங் களும் கிடைத்தன. ஒரு பெரிய நிறுவனத்தின் தொடர் விளம்பர மாக குறுகிய காலத்தில் முடிக்க வேண்டியதும் அவற்றுள் ஒன்று.

அபிராமியின் திறமைக்கு சவால் விடுவது போன்றது, அந்த தண்ணீர் சுத்திகரிப்பு யந்திர விளம்பரம். சுத்தமான தண்ணீர் இன்றைய தலையாய தேவை என்பதால் விளம்பர அட்டையின் வாசகம், படம் எல்லாம் இலகுவாக அமைக்க முடிந்தது. ஆனால் இரு வாரங்களுக்குள், பத்து தொடர் விளம்பரங்களையும் தமிழகத்தின் முக்கியமான பத்திரிகைகள் அனைத்திலும் நல்ல இடம் பெற்று பிரசுரிப்பது எளிதல்ல. அதை அபிராமியின் குழு செய்து முடித்த விதத்தில் விளம்பரதாரருக்கு மிகுந்த திருப்தி.

அபிராமியின் அலுவலகத்துக்கே வந்து தன் திருப்தியை தெரிவித்துக் கொண்டார்.

''நிறைய ஆர்டர்கள். முன்பணம் கட்டி கேட்கிறார்கள். அத்தனைக்கும் கொடுத்து முடிக்கவே திணறிவிடும்போல இருக்கிறது. விளம்பரங்கள் பளிச்சென்று இருந்ததோடு, தொடர்ச்சி விடாமல் அவை வெளியான விதம் இதற்கு பாதிக்காரணம். சின்ன வயசிலேயே திறமையாக செய்தீர்கள். இன்னும் 'அங்கீகாரம்' கிடைக்கவில்லை யாமே. பணத்துக்கு அங்கே இங்கே புரட்டியிருப்பீர்கள். டி.டி. கொண்டு வந்திருக்கிறேன். கொடுத்து விடுங்கள்'' என்று அவர் மொத்த பணத்துக்கும் டி.டி.யை கொடுத்தபோது அபிராமிக்கு அவளது கண்களையும் காதுகளையுமே நம்பமுடியவில்லை.

விளம்பரம் வெளியானபின் உரிய அவகாசமான 75 நாட்களில் கொடுக்கவே பலருக்கு கசக்கும். இவர் ஒரு மாதம் முன்னதாகவே தருகிறாரே. முன் பணம் நிறையவே வந்துவிட்டதா? ஆனாலும், அவளுக்கு தரவேண்டும் என்று என்ன கட்டாயம்? அவர் சொன்னதுபோல வாங்கிய கடனை உடனே கொடுத்துவிடலாம். வட்டி மிச்சம்.

மகிழ்ச்சியோடு டிடியை வாங்கிக்கொண்டு நன்றி கூறினாள். ''எத்தனையோ பெரிய நிறுவனங்கள் இருக்க, எங்களிடம் பொறுப்பைக் கொடுத்தீர்களே, சார். அதற்காகவும் நன்றி சார்'' என்று மனதில் இருந்ததை உரைத்தாள்.

ஆனால், ''என்னம்மா நீ? 'வெண்புறா' சார் சொன்ன பிறகு வேறு இடத்தில் கொடுப்பேனா?'' என்று அவர் பதிலிறுக்கவும் முகம் மாறாமல் காப்பது அவளுக்கு கடினமாகிவிட்டது.

நாளை திருமணம் வரும்போது இதை எப்படி பேசுவார்கள்? அவள் அவ்வளவு சொல்லியும், அதற்கு மதிப்பு இவ்வளவுதானா? அவளிடம் அவனுக்குக் கூடவா நம்பிக்கை இல்லை?

சிவா என்றதும் வழக்கம்போல உணர்ச்சி வசப்படுகிறோமோ என்று வெகுநேரம் தனியே இருந்து பார்த்தும், ஆத்திரம் அடங்கவில்லை. தண்ணீர் சுத்திகரிப்புக்காரர் கொடுத்த டி.டியை யும் அந்த விளம்பரங்கள் சம்பந்தமான மற்ற விவரங்களையும் கணக்கிட்டாள். செலவோடு அவளது வேலைக்கு கூலியாக சிறு தொகை சேர்த்து கழித்துக் கொண்டு, மீதித் தொகைக்கு செக் எழுதி இந்த விளம்பரங்களுக்கான கமிஷன் என்ற விவரத் துடன் சிவசந்திரனுக்கு அனுப்பிவிட்டாள். அதன் பிறகே அவளால் இலகுவாக மூச்சுவிட முடிந்தது.

அபிராமி எதிர்பார்த்தது போலவே சிவசந்திரன் செக்கை எடுத்துக்கொண்டு உடனே வந்துவிட்டான். ''என்ன இது?''

குறிப்பறிந்தாற்போல், மகாலட்சுமியும் சுமனா வும் விலகிச் சென்றுவிட, அபிராமியும் மனதில் இருந்ததை கொட்டிவிட்டாள்! ''உங்களுக்கே நான் ஜெயிப்பேன் என்ற நம்பிக்கை இல்லையே..''

அவள் முடிக்கும்வரை, குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, மறுப்பாய் தலையசைத்து ''உனக்குத்தான் என் மேல் நம்பிக்கை இல்லை!'' என்றான். ''இந்தக் காரியம் நான் செய்வேனா என்று யோசிக்கவில்லை பார்!''

''ஆனால் சதானந்தம் சார் சொன்னாரே..''

''அவர் ஏன் பொய் சொல்லவேண்டும்? நீ சரியாகக் கேட்டாயா? ஒருவேளை... இந்த நேரத்தில் இது என்ன பேச்சு என்று எரிச்சல்படாதே. வேறு விளக்கம் இருக்க வழியில்லை. அதனால். ஒரு வேளை.. கனவி லும் நனவிலும் என்னையே நினைத்துக் கொண்டிருந்ததில் மிஸ்டர் சதாவும் என் பெயரை சொன்னதாக தோன்றிவிட்டதோ?'' என்று கேலியாக அவன் கேட்க, இப்போது அவள் மறுப்பாய் தலையசைத்தாள்.

''சதா சார் பெயரே சொல்லவில்லை. 'வெண்புறா சார்' என்று... கடவுளே, உங்கள் அப்பா'' என்றாள் திகைப்புடன்.

''நான் சொன்னது சரியாயிற்றா? 'வெண்புறா'வை உருவாக்கி வளர்த்தவர் என் தந்தை. அவரை அடியோடு மறந்து 'வெண்புறா' என்றாலே, சர்வம் நானே என்று எண்ணிவிட்டாய். இவ்வளவு தூரம் நீ காதல்வசப்பட்டு விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே. ஆஹா... என்ன காதல். என்ன காதல்...'' என்றான் அவன் கிண்டலாக.

உதட்டை கடித்துக்கொண்டு ஒருகணம் பேசாதிருந்து, ''நீங்கள் அப்பா விடம் சொல்லவில்லை என்று எனக்கு எப்படி தெரியும்?'' என்று சமாளித்தாள் அபிராமி.

''சொன்னேன். ஆனால் அவருக்கு அவசரம். மறுபடியும் அவரிடம் பேசுகிறேன்'' என்றான் சிவசந்திரன்.

''தப்பாக கோபப்பட்டுவிட்டேன், சிவா. ஸாரி'' என்றாள் சன்னக் குரலில்.

அவள் உள்ளூர குன்றியிருப்பது பொறுக்காமல், ''மன்னிப்பெல்லாம் இப்படியா கேட்பார்கள்? இங்கே ஒன்று கொடுத்து கேட்டால்தானே, தரப்படும்?'' என்று கன்னத்தை காட்டி உல்லாசக் குரலில் கூறினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, ''தாராளமாக கொடுக்கலாமே..'' என்று புன்னகையோடு கையை ஓங்கினாள் அபிராமி.

''ஊகூம்! இது தண்டிப்பதற்குரிய செயல்பாடு. நீ மன்னிப்பல்லவா கேட்டாய்?''

''திருமணத்துக்கு முன் இப்படியெல்லாம் கேட்டால், தண்டனைதான் கிடைக்கும்!''

சிரிப்பினூடே அபிராமி அனுப்பிய செக்கை கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போனான் சிவசந்திரன்.

சரியான வாய்ப்புக்காக காத்திருந்து பொறுமையிழந்து போனார் மைத்ரேயன்.

பத்திரிகையாளர் கூட்டத்துக்காக மும்பையிலிருந்து வந்த நிர்வாகிகளில் இளைஞனாக இருந்தவனிடம் அபிராமியை அறிமு கப்படுத்திவிட்டு ''கூட்டம் முடிந்தபின் சற்றுநேரம் பேசலாம் என்று சார் விரும்புகிறார்'' என்று தனியாக தெரிவித்தார்.

பெரிய துணி ஆலை குரூப்பின் விளம்பர நிர்வாகி அந்த இளைஞன். எனவே, இவள் இளித்துக்கொண்டு நின்றுவிடுவாள் என்று எதிர்பார்த்தார் போலும். கூட்டம் நடக்கும்போதே இடையிடையே அவனிடம் பேசிவிட்டு, அபிராமி கிளம்பலானாள்.

இந்த கூட்டம் எக்கேடும் கெடட்டும் என்று எண்ணியவர்போல, மைத்ரேயன் அபிராமியிடம் ஓடிவந்தார். வழியனுப்பும் பாவனையில் கூடவே நடந்தபடி, தன் திட்டத்தை தேனொழுக வெளியிட்டார்.

தன்னந்தனியே அபிராமி பாடுபடுவது, அவருக்குப் பொறுக்கவில்லையாம். அவரது 'ரேயனோடு' அவள் தன் நிறுவனத்தை இணைத்துக் கொள்ளலாமாம். அவருடன் இணைந்தால், அவள் கொடி கட்டிப் பறக்கலாமாம்!

இணைப்பை தொழிலோடு நிறுத்திக் கொள்வதாக அவரது பார்வை கூறவில்லை. ஆக, அவளை நாசமாக்கி, அவள் உழைப்பை யும் திருடவே இத்தனை அழைப்பா?

சாந்தியின் மெலிந்த உடலும், மரத்த முகமும் நினைவு வந்தன. பாவி. படுபாவி.

'பொறு பொறு' என்று பலமுறை அடக்கி வைத்திருந்த நாவு, சட்டெனக் கட்டவிழந்தது. ''ரொம்ப தாராள மனசு சார் உங்களுக்கு! 'நீ அவல் கொண்டு வா. நான் உமி கொண்டு வருகிறேன். இரண் டையும் கலந்து ஊதி ஊதித் தின்போம், என்ற வஞ்சகன், உங்கள் கால்தூசி பெறமாட்டான்'' என்றவள், ''இனி என்னை சந்திக்க முயற்சி செய்யாதீர்கள்; கேவலப் பட்டு போவீர்கள்!'' என்று கறார் குரலில் எச்சரித்துவிட்டு மடமடவென்று வெளியேறினாள்.

மைத்ரேயனின் முகம் விகாரமாக மாறுவதை பாராமலே சென்றுவிட்டாலும், அதிகமாக பேசி அநாவசியமாக ஓர் எதிரியை தேடிக்கொண்டோமோ என்று ஓர் உறுத்தல் அபிராமிக்கு உண்டாயிற்று. அதிலும், அவள் முயன்று முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் தொழில் வட்டாரத்தி லேயே!

(தொடரும்)

முன்கதை: அபிராமி விளம்பர கம்பெனி நடத்து கிறாள். சோப்புத்தூள் கம்பெனி அதிபர் சிவசந்திரன் அவளை விரும்புகிறான். தன் கம்பெனி நல்லநிலைக்கு வரும்வரை திருமணம் கிடையாது என்கிறாள். அவனது தந்தை அவளிடம் பேசுகிறார். இரண்டு ஆண்டுக்குள் அவள் கம்பெனி மேலே வரத் தவறினால் அதை மூடிவிட வேண்டும் அல்லது சிவாவை மறந்துவிட வேண்டும் என்கிறார். சரி என்கிறாள் அபிராமி. இடையே அவளது பழைய முதலாளி மைத்ரேயனுடன் மோதல் ஏற்படுகிறது.

இனி...

மைத்ரேயனை நினைத்து அபிராமி மனதை அலட்டிக் கொண்டி ருக்கவில்லை. அதற்கு நேரமில்லாமல் உழைப்பு காத்துக் கொண்டிருந் தது. ஊட்டி டீ கம்பெனி விளம்பரங்கள் வடக்கே வெளிவரத் தொடங்கியிருந்தன. பரந்தாமனின் அடுத்த செட் விளம்பரங்களோடு, நல்ல ராசி என்று, கடை திறப்புகளுக்காகவும் அவளை நாடி வந்தனர்.

எனவே, அபிராமிக்கு வேலை நிறையவே இருந்தது. புதுமையாக விளம்பரங்களை அமைப்பதிலும், ஏபிசி, என்ஆர்எஸ் என்று பத்திரிகை களின் விற்பனையை கணக்கிடுவதிலும், விளம்பரங்களுக்கு முன்பதிவு செய்வது, மெட்டீரியல் அனுப்புவது, வந்த விளம்பரங்களை சரிபார்த்து, வவுச்சர் காப்பி கொடுத்து, பணம் வாங்குவது போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்ததால், மைத்ரேயன் பற்றிய எண்ணமே வரவில்லை.

ஆனால், அவரிடம் அவளுக்கு இருந்த வெறுப்பை தூண்டிவிடுமாறு ஒன்று நடந்தது.

மருந்துக் கடை விளம்பரம் ஒன்று, அவள் மூலமாக வெளியாவதாக இருந்தது. இதுபோன்ற ஒற்றை விளம்பரங்களுக்கான பணத்தை அவள் முன்கூட்டியே வாங்கிவிடுவது வழக்கம். கல்லாவில் உட்கார்ந்து வியாபாரம் தொடங்கிவிட்டால், அப்புறம் அதிலிருந்து மொத்தமாக பணத்தை எடுத்துக் கொடுக்க பலருக்கு, மனம் வருவதே இல்லை.

சரக்கு இறக்கி கடையில் அடுக்கிக் கொண்டிருப்பதாகவும், அங்கே வந்து வாங்கிக் கொள்ளுமாறும் கடைக்காரர் கூறவே, அபிராமி உடனே கிளம்பி வந்தாள்.

பணத்தை தரும்போது உடனே வாங்கிவிட வேண்டும். கையில் இருக்கும்போது இன்னொரு செலவு வந்தால், இதையே கொடுத்துவிட தோன்றும். அப்புறம், அதை வசூலிக்க அலையும்படி ஆகிவிடலாம்.

இரு புறங்களிலும், வெவ்வேறுவித மருத்துவ மனைகள் இருந்தன. மருந்துக் கடைக்காரருக்கு வியாபாரம் நன்றாகவே நடக்கும் என்று எண்ணியபடி, பணத்தை வாங்கிக்கொண்டு அபிராமி வெளியே வந்தாள்.

அவளது மொப்பெட்டை தாண்டிச் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணின் மெலிந்த மேனியும் சோர்ந்த நடையும் அவளது கவனத்தை ஈர்த்தன. அறிமுகமான தோற்றம்.

ஒருகணம் யோசித்தவள், உடனே 'சாந்திக்கா!' என்று ஓடிச்சென்றாள்.

'அபிராமி!' என்ற சாந்தியின் புன்னகையில் உயிரே இல்லை.

'ரேயனி'ல் அவள் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த காலத்திலும் சாந்தி துடிப்புடன் இருந்து அபிராமி பார்த்ததில்லைதான். இப்போது ரொம்பவும் மோசமாக இருந்தாள். ஏதோ, நோயில் விழுந்து எழுந்தவள் போல.

மணிக்கட்டை திருப்பிப் பார்த்துவிட்டு, ''வாருங்கள், அக்கா! ஜூஸ் குடித்துவிட்டு வருவோம்..'' என்று அழைத்துச் சென்றாள்.

அருகிலேயே, பழச்சாறு மட்டும் விற்கும் இடம் இருந்தது. ரொம்ப சுத்தமாக செய்வார் கள் என்று கூறி, சிவசந்திரன் அபிராமியை ஒருதரம் அழைத்துப் போனதுண்டு.

இரண்டு சாத்துக்குடி சாறு சொல்லி விட்டு, சாந்தியிடம் திரும்பினாள். ''என்னக்கா எப்படி இருக்கிறீர் கள்?'' என்று வினவினாள்.

லேசாக முறுவலித்து, ''ம் இருக்கிறேன்...'' என்ற சாந்தியின் முகம் சட்டென கசங்கியது. ''செத்துப் போய்விடமாட்டோமா என்று இருக்கிறது அபிராமி. சொல்லக்கூட யாரும் இல்லை. வேண்டாம். என்னைப் பற்றி வேண்டாம். நீ எப்படி இருக்கிறாய்? அதைச்சொல்லு.'' என்று முயன்று பேசினாள்.

செத்துவிட விரும்பும் இந்த சாந்தி, அபிராமி அழிந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் உதவி செய்தவள். செய் நன்றி என்று ஒன்று இருக்கிறதே. வற்புறுத்தி விவரம் கேட்டாள்.

சாந்தியின் கதை, ஓரளவு அபிராமி எதிர்பார்த்தது தான்.

மைத்ரேயனால் நாச மாக்கப் பட்டவள். ஓரளவு பெரிய குடும்பம். இவளது வருமானம் கட்டாயம் தேவை. அதை பயன்படுத்திக் கொண்ட பாவி மைத்ரேயன்.

''உங்கள் பெற்றோரிடம் சொல்லியிருக்கலாமே, அக்கா..'' என்றாள் அபிராமி. எல்லோருமாக ஆலோசித்து, வழி கண்டிருக்கலாமே என்ற எண்ணம் அவளுக்கு.

ஆனால், சாந்தி வேறு சொன்னாள். ''ஜாடை மாடையாக சொல்லிப் பார்த்தேன், அபிராமி. ஆனால், என் பெற்றோருக்கு அந்த ஆளை பார்த்தால் 'காட்ஃபாதர்' மாதிரி! வெறும் பிளஸ்டு முடித்த எனக்கு, வேறு யார் ஆறாயிரம் சம்பளம் தருவார்கள் என்ற எண்ணம்.''

''அங்கே நீங்கள் செய்யும் வேலைக்கு, ஆறாயிரம் குறைவு, சாந்திக்கா!''

சில கணங்கள் பேசாதிருந்துவிட்டு, ''வீட்டைப் பொறுத்தவரை, மாதம் ஆறாயிரம் வந்து கொண்டிருந்தால் போதும்! வேறு எதைப் பற்றியும் கவலை.. கவலை என்ன, எதைப் பற்றியும் நினைக்கக்கூட அவர்கள் தயாராக இல்லை! சரி, ஆனது ஆகிவிட்டது. இப்படியே காலம் ஓடட்டும் என்றுதான் நினைத்தேன்.. ஆனால், இப்போது முடியவில்லை, அபிராமி. எந்த மாத்திரையும் எனக்கு ஒத்துக்கொள்ள வில்லை. இது நாலாவது கருக்கலைப்பு...'' என்று உதட்டை கடித்து விசிப்பை அடக்கினாள் சாந்தி.

பேச்சிழந்து அமர்ந்திருந்தாள் அபிராமி.

பெற்றோர், குடும்பம் என்றால் பாதுகாப்பு, துணை என்று எண்ணினாளே. அதுவே சுமையாகவும் ஆகும் போல இருக்கிறதே!

இந்த நிலையில் இருந்தபோதும் சாந்தி, அபிராமிக்கு உதவ முன்வந்திருக்கிறாள்!

மனதுக்குள் கணக்கிட்டுவிட்டு, ''சாந்திக்கா, அந்த ஆறாயிரம் ரூபாயை, மைத்ரேயன் தந்தால்தான் உங்கள் வீட்டில் ஒத்துக் கொள்ளவார்களா?'' என்று வினவினாள்.

''அப்படி இல்லை. ஆனால், வேறு யார் எனக்கு அவ்வளவு தருவார்கள்? வேலை தெரிந்தாலும், சான்றிதழ் எதுவும் இல்லையே!''

''சாந்திக்கா, எனக்கு உங்கள் வேலைத் திறமை தெரியும். ஆனால், நானும் வளர்ந்து வருகிறவள். எனவே, இந்த ஆறாயிரம் ரூபாயோடு, மேலே ஐநூறு சேர்த்து, ஆறாயிரத்து ஐநூறுக்கு மேல் இப்போது முடியாது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், என்னிடம் வந்துவிடுங்கள், அக்கா!'' என்றாள் அபிராமி.

இதனால், மைத்ரேயனின் வெறி அதிகரிக்கும் என்று அபிராமிக்கு தெரியும்தான். ஆனால், சாந்திக்கு உதவ இந்த ஒரு வழிதான் இருந் தது. அதோடு, மைத்ரேயனால் அப்படியென்ன செய்துவிட முடியும்?

சாந்தி ரொம்பவுமே சந்தோஷப்பட்டாள். இனி ஒன்றுமேயில்லை என்று ஓய்ந்து போயிருந்தவள், இப்படி ஓர் எதிர்பாராத விடுதலை கிடைக்கவும், பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவள் முகத்தில் பத்து வயது குறைந்து தோன்ற, அபிராமிக்கும் ஆறுதலாக இருந்தது.

ஒருமாத நோட்டீசுக்கு பதிலாக, அபிராமி முன்பணமாக தந்த ஆறாயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு வெளியேறி வந்த சாந்தி, அபிராமியிடம் ஒரு ஃபைலை கொடுத்தாள். ''இது உன்னதுதான். முதல்நாள் வாங்கி வைத்துக்கொண்டு, இன்னொருநாள் வந்து வாங்கிக்கொள்ளும்படி சொன்னாரே, அது உன் திறமையை ஆராய்ந்து மதிப்பிடுவதற்காக அல்ல! கம்ப்யூட்டரில், பதிவுசெய்து வைக்கத் தான். ஒன்றிரண்டில் உள்ள கருத்துகளை பயன்படுத்தியிருக்கிறார். இப்போது உன் ஃபைலை நகல் எடுத்துக்கொண்டு, அந்த கம்ப்யூட்ட ரிலிருந்து முழுமையாக அழித்துவிட்டு வந்தேன். எப்படியும், இது உன் உடமைதானே?''

சாந்தி, 'அபிராமி'யில் நன்றாக பொருந்திக் கொண்டாள். வேகமாக வளர்ந்துகொண்டிருந்த 'அபிராமி'க்கும் அவளது உழைப்பு தேவைப்பட, இருவருக்குமே திருப்தி.

சில மாதங்களில் சாந்தியோடு கலந்து பேசி, விளம்பர தயாரிப்புக்கும் 'மீடியா' பார்க்கவும் வேறு சிலரையும் அபிராமி நியமித்தாள். இடம் போதாமல், அலுவலகத்தை பெரிதான இடத் துக்கு மாற்றினாள்.

பத்திரிகைகளில், 'அபிராமி'யின் விளம்பரங்கள் அடிக்கடி வெளிவரலாயின.

''போகிற போக்கைப் பார்த்தால், ஒன்றரை ஆண்டுகளிலேயே மருமகள் வந்துவிடுவாள் போலிருக்கிறதே!'' என்று சிதம்பரம் சிரித்தார்.

ஒருநாள், அன்றைய தினசரிகளில், இரண்டு கால்பக்க விளம்பரங்க ளில் 'அபிராமி'யின் பெயரை பார்த்து முகம் மலர்ந்த சிவசந்திரன் அவளை வாழ்த்த வந்தான்.

மேஜையில் இருந்த கம்ப்யூட்டரில் கண்ணை பதித்தவாறு பேசிக்கொண்டிருந்த அவளிடம், வாழ்த்தை இருமுறை கூற வேண்டியிருந்தது.

இரண்டாவது தடவை அவன் சற்று உரக்க பேசவும், நிமிர்ந்து முறுவலித்தாள். குறும்பாய் நோக்கி, ''இந்த வாழ்த்து எனக்கா? உங்களுக்கேவா?'' என்று தலையை சரித்து அவள் கேட்க, இப்போது அவன் முறுவலித்தான்.

''நமக்கெல்லாம் பிரிவினை புத்தியே கிடை யாதுப்பா! என்னது எல்லாவற்றிலும் சம உரிமை உனக்கு உண்டு. அதேபோல உன்னதிலும்.. உன் இருக்கையில் பாதி தந்தாலும் நெருக்கியடித்து உட்காரக்கூட நான் தயார்ப்பா..!''

''ம்ம்ம்..!'' என்று புன்னகையோடு அவள் மிரட்டும்போதே, டெலிபோன் குரல் கொடுத்தது.

தொடர்ந்து, இரு 'கால்'கள். முடிந்ததும், ''இந்த அடுத்த செட் டீ விளம்பரங்களில் எனக்கு ஒரு குழப்பம் சிவா. வட மாநிலங்களில் எல்லாம் வெற்றிகரமாக வெளிவந்துவிட்டன. இனி நினைவூட்டும் விதமாக அவ்வப்போது சிறு விளம்பரங்கள் மட்டுமே. தென் மாநிலங்களில்தான்... சிவா, கேரளாவில் டீ நிறைய குடிப்பார்கள், தெரியும். தமிழ்நாட்டிலும் பரவாயில்லை. கர்னாடகாவில் எப்படி? அங்கே, அதிக விளம்பரப்படுத்துவதில் பலன் இருக்குமா? என் லாபத்துக்காக மட்டும் விளம்பரங்களை போட்டுவிட்டு, பலன் இல்லாமல் போய் விடக்கூடாதே..'' என யோசனையோடு இழுத்தாள்.

உரக்க யோசிக்கிற பாவனையில் இருந்தபோதும், அதை கேள்வியாக ஏற்று, ''கர்நாடகாவில், அதிகம் காபிதான் அபிராமி. டீ குடிக்கிறவர்கள் கொஞ்சம்தான்'' என்று சொல்லிவிட்டு, இரு கைகளையும் நீட்டினான்.

''என்ன..'' என்று திகைத்தபடி தன் கைகளை அவன் கைகளில் வைத்தாள்.

''உன் தொழில் வளர்ச்சி ரொம்ப அவசியம்தான். இருவருக்காகவுமே அவசியம். ஆனால், வேலை மும்முரத் தில் என்னை அடியோடு மறந்துவிடக் கூடாது!'' என்று குனிந்து அவளது விரல்களில் முத்தமிட்டான்.

இரவில் உண்ணும்போது டி.வி. போட்டுக்கொண்டு உட்கார்வது, அபிராமிக்கு வழக்கமாயிருந்தது. அப்படி பார்த்ததில் ஒரு காட்சியில் உணர்ச்சிவசப்படும்போது கதாநாயகனின் கையிலிருந்து நரம்புகள் புடைத்துக்கொண்டே போவதுபோல வரும். இப்போது, அபிராமிக்கும், விரல் நுனி தொடங்கி, இதயம் வரை சிலிர்த்துப் போயிற்று.

கன்னக் கதுப்புகள் சிவக்க, ''என் வேலையை கெடுக்கிறீர்கள்'' என்றாள்.

''அந்த அளவு சக்தி எனக்கும் இருக்கிறது என்றால் சந்தோஷமே!'' என்று அவனும் தாழ்ந்த குரலிலேயே சரசமாய் சொல்ல, முகம் மேலும் சிவந்தது.

அடுத்த போன் கால் வரும்வரை பேசிக் கொண்டிருந்து ''அவ்வப்போது வரவேண்டும்'' என்ற அழைப்பை யும் பெற்று சிவசந்திரன் கிளம்பினான்.

இருவர் வேலை யும் கெடாதபடி, அவன் வந்துபோவது வழக்கமானது.

அப்படி ஒரு தரம் அவன் கிளம்பி கொண்டிருந்தபோது, வாயிலில் ஒரு கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

பத்திரிகை படித்துக் கொண்டிருந்த தந்தையிடம், ''அப்பா, சுரேகா என்று நினைக்கிறேன். சும்மா இங்கே சுற்றிக் கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். நான் கிளம்புகிறேன்'' என்று பெட்டியை எடுத்தான்.

குப்பென்ற வாசனையுடன் சுரேகா உள்ளே வந்தாள். சிவசந்திரனிடம், ''என்ன அத்தான், உங்களை இப்போதெல்லாம் அலுவலகத்தில் பார்க்கவே முடிவதில்லையே! எப்போதும் பிஸி என்கிறார்களே'' என்று சிணுங்கினாள்.

''இப்போதும் பிஸிதான்'' என்று கையிலிருந்த பெட்டியை தூக்கிக் காட்டினான். ''அப்பாவிடம் பேசு. நான் வருகிறேன், அப்பா'' என்றதோடு, வெளியேறிவிட்டான் அவன்.

கிளம்புமுன் அவன் தந்தையைப் பார்த்த பார்வை, சற்றுமுன் சொன்னதை வலியுறுத்தியது.

ஆனால், சுரேகாவிடம் வெளிப்ப டையாக பேச, சிதம்பரம் தயங்கினார். இப்போதைக்கு அபிராமி நன்றாகத் தான் செய்து கொண்டிருந்தாள். ஆனால், இன்னும் எத்தனையோ படி ஏறவேண்டுமே? ஒருவேளை அதில் வெற்றி பெறவில்லையானால்? பிறகும், தொழிலைவிட மறுத்து விட் டால்?

இந்தப் பெண்ணானால், பையனி டம் பைத்தியமாக இருக்கிறாள். நல்ல குடும்பம். காத்திருக்கச் செய்து, இல் லையென்று ஆனாலும் மனம் ஒடிகிற ரகம் அல்ல. திடம் உள்ளவள்.

இதையெல்லாம் எண்ணி சிதம்ப ரம் மவுனம் காத்தாலும் சுரேகாவுக்கு சிவா தன்னை தவிர்க்கிறானோ என்ற சந்தேகம் ஏற்கெனவே வந்திருந்தது.

ஒரு தரத்துக்கு இருதரமாக சிவசந் திரன் காரை 'அபிராமி அட்வர்டை சிங்' எதிரே பார்க்க நேர்ந்தபோது, சந்தேகம் இன்னமும் பலப்பட்டது.

விளம்பர நிறுவனம் என்ற பெயரை வைத்துக்கொண்டு இவள் என்ன தொழில் செய்கிறாள்?

நேரே உள்ளே போய் அந்த அபிராமியை கையும் களவுமாக பிடித்து, அடித்து, உதைத்து, கத்தி ஆர்ப்பாட்டம் செய்தால் என்ன?

இல்லை. பெரிய குடும்பத்துக் பெண்கள் அப்படி செய்யமாட்டார் கள். வேறு வகையில்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காரை திருப்பிக்கொண்டு, சிவசந்திரனின் வீட்டை அடைந்தாள் சுரேகா. அவனோ தந்தையிடம் பேச சொல்லி விட்டு கிளம்பி விட்டான்.

சிதம்பரம் தெரிவித்த சேதியில், அவளுள் தீப்பிடித்தது.

அந்த அபிராமி ஜெயிப்பதா? அதுவும் அவளை? விடக்கூடாது என்று முடிவு செய்த சுரேகா, அதற் கான முயற்சிகளில் இறங்கினாள்.

அந்த முயற்சிகளின் விளைவாக அபிராமி கஷ்டப்பட்டு கண்ணும்கருத்துமாக வளர்த்த சாம்ராஜ்யம் சரிந்து விழலாயிற்று!

(தொடரும்)

அபிராமி விளம்பர கம்பெனி நடத்துகிறாள். சோப்புத்தூள் நிறுவன அதிபர் சிவசந்திரன் அவளை விரும்புகிறான். கம்பெனி நல்ல நிலைக்கு வரும்வரை திருமணம் கிடையாது என்கிறாள். அவன் தந்தை அவளிடம் பேசுகிறார். இரண்டு ஆண்டுக்குள் அவள் கம்பெனி மேலே வரத் தவறினால் அதை மூடிவிட வேண்டும் அல்லது சிவாவை மறந்துவிட வேண்டும் என்கிறார். அபிராமிக்கு அவளது பழைய முதலாளி மைத்ரேயனுடன் மோதல் ஏற்படுகிறது. சிவா - அபி திருமணத்தை தடுக்க மைத்ரேயனு டன் அணி சேர்கிறாள், சிவாவின் மாமா மகளும் அபிராமியின் விரோதியுமான சுரேகா. **இனி..**

அன்று சிதம்பரத்தின் வீட்டிலிருந்து கொதிப்புடன் வெளியே வந்த சுரேகா, வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல நேரே தந்தையிடம் போய் நின்றாள். ''அப்பா. நான் செத்துப்போக போகிறேன்'' என்று அறிவித்தாள்.

பதறிப் போய், ''என்னடாம்மா, என்ன பேச்சு இது?'' என்று எழுந்தார் அவர்.

''ஆமாம்ப்பா. சிவாத்தானுக்கும் அந்த அபிராமிக்கும் திருமணமாம். அவளை ஒழித்துக்கட்ட வேண்டும். அல்லது நான் உயிரை விட்டு விடுவேன்'' என்றாள் மகள்.

''ஒழித்துக் கட்டுவதா? கொலை, கிலை எல்லாம் கூடாதும்மா. ஏதாவது ஒரு சின்னத் தடயத்தை வைத்துக் கண்டுபிடித்து விடுவார்கள். அது கேவலம் என்பதோடு அப்புறம் சிறைக்கும் போக நேரும்.''

''சீ உளறாதீர்கள், அப்பா. 'ஒழித்துக் கட்டுவது' என்றால், உயிரை எடுப்பது மட்டும்தானா? அபிராமியின் உயிர் நாடி அவளது விளம்பரத் தொழில். அதை அழிக்க வேண்டும். அதற்கு நிறைய பணம் வேண்டும். அந்தப் பணம் முக்கியமா? அல்லது என் உயிர் முக்கியமா? நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்'' என்றாள் அவள் உறுதியான குரலில்.

''எவ்வளவும்மா?''

அவள் சொன்ன தொகையை கேட்டதும் அவருக்கு தலை சுற்றியது. ''இவ்வளவு பணமா? என்னம்மா, நீ'' என்று உட்கார்ந்து ஃபைலை திருப்பினார்.

''சரி. பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் பிளக்கில் கையை வைத்து செத்துப் போகிறேன்'' என்று திரும்பினாள் சுரேகா.

ஒரு வேளை மெய்யாகவே இவள் ஏதாவது பண்ணிக் கொண்டுவிட்டால்? பீதியுற்று சுரேகாவிடம் பேசினார் அவர்.

''இப்போது இவ்வளவு பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்? முதலில் அதைச் சொல்லும்மா. உனக்கே தெரியும். எனக்கு உன்னைவிட எதுவுமே பெரிதில்லை. ஆனால், ஆற்றில் போட்டாலும் அளந்துதான் போடவேண்டும் அல்லவா? இன்னொன்று, அடிதடி போல கிரிமினல் குற்றங்கள் எதுவும் செய்யக்கூடாது. அது திரும் பிக்கொண்டு, உன்னையே தாக்கிவிடக் கூடும். பணத் தையும் கொடுத்து அந்த துன்பத்தையும் அனுபவிக்க என்னால் முடியாது. மற்றபடி என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டார்.

என்ன செய்வது என்று சுரேகாவுக்கே நிச்சயமில்லை. ஆனால் ஒரு திட்டம் இருந் தது. அவள் சொன்ன அளவில் அவள் தந்தைக்கு ஓரளவு திருப்திதான்.

அடுத்தவர் தொழிலை அழிப்பது தொழில் வட்டா ரத்தில் அப்படி ஒன்றும் பழக்கமற்ற விஷயம் அல்ல தான். அப்படி அழிக்கும் போது அதில் நமக்கு லாப மும் இருக்க வேண்டும். இதில் அப்படி இல்லையே என்ற வருத்தம் மட்டும் அவருக்கு இருந்தது.

ஒருவேளை அவருடைய அருமை மகளின் மன அமைதி தான் அவரது லாபமோ, என்னவோ? பெருமூச்சுடன் பணத்துக்கு ஏற்பாடு செய்தார் அவர்.

அன்றைக்கு சிவசந்திரனை பற்றிய புகாருடன் சென்ற சுரேகாவுக்கு அவனுடைய தந்தை சிதம்பரத்தின் பேச்சு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல இருந்தது.

முதலில் சிதம்பரம் மகனைப் பற்றி பேசவே தயா ரில்லை.

''கண்ட அனாதைக் கழுதைகளிடம் மகனை திருட்டுக் கொடுக்கப் போகிறீர்கள்'' என்று அவள் பயமுறுத்தியதற்கு எந்தவித பலனுமே இல்லை.

''தன்னையே தொலைப்பதற்கு அவன் என்ன பல் முளைக்காத பச்சைப் பாப்பாவா? விடம்மா'' என்றார் அவர் அசிரத்தையாக, ''உன் அப்பாவுக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? இந்த ஆண்டு சளித்தொல்லை. அவருக்கு மிக அதிகம் என்று கேள்விப்பட்டேனே. சித்த வைத்தியத்தில் அதற்கு...''

''ஆயிரக்கணக்கில் பணம் வாங்கிக்கொண்டு எங்கள் அப்பாவுக்கு சிகிச்சை செய்ய வைத்தியத்தை கரைத்துக் குடித்த எத்தனையோ பேர் இருக்கிறார்கள் மாமா. முதலில் நீங்கள் உங்கள் கண்ணில் விழுந் திருக்கும் உத்திரத்தை எடுக்க வழி தேடுங்கள். அது போதும்'' என்றாள் சுரேகா ஆத்திரத்துடன்.

அவள் முகத்தை ஒருதரம் பார்த்தார் சிதம்பரம்.

பிறகு, லேசாக முறுவலித்து, ''அவன் சின்னப் பையன் இல்லையென்று தான் சொன்னேனே. நான் உன் அப்பா வைக் கேட்ட காரணம்...'' என்று அவர் தொடருமுன் ''அவரை வரச் சொல்லட்டுமா?'' என்று அவசரமாகக் கேட்டாள் சுரேகா.

''அதெல்லாம் வேண்டாம்மா. பாவம் உடம்பு சரியில் லாத மனிதர். சும்மா அவரிடம் ஒரு விஷயம் தெரிவிக்க வேண்டும். அவ்வளவுதான்'' என்று மிகமிக சாதாரணமான குரலில் சிதம்பரம் கூறினார்.

''தெரிவிக்க? என்ன சொல்ல வேண்டும்?''

''மும்பையில் தெரிந்தவர் ஒருவர் ஓர் அருமையான பையன் பற்றி சொன்னார். அதைத்தான் உன் தந்தையின் காதில் போட வேண்டும் என்று நினைத்தேன்.''

''என்னது?'' என்று ஒரு கணம் திகைத்தவளுக்கு வழக்கம்போல ஆத்திரமே மேலோங்கியது.

''என்ன உளறுகிறீர்கள்? யார் மகளுக்கு யார் மாப்பிள்ளை பார்ப்பது?'' என்று உதாசீனமாகப் பேசினான்.

''ஏனம்மா, நல்ல பையன் இருப்பது தெரிந்தால் சொந்தத்தில் பெண்ணும் இருந்தால் விவரம் தெரிவிப்பது இயல்புதானே?'' என்றார் அவர் முகம் மாறாமல்.

''ஓஹோ.'' என்று அவரை வெறித்து நோக்கினாள் சுரேகா. ''புரிகிறது. சிவாத்தானுக்கு என்னவோ நடந்திருக்கிறது'' என்றவளுக்கு சிவசந்திரனின் காரைப் பார்த்த நினைவு வந்தது.

''அப்படியானால்..?''

முகம் கன்ற, ''தகப்பன் என்று நீங்கள் இருந்தும் இந்தக் கேவலத்துக்கு இடம் கொடுக்கிறீர்களா? அனாதைக் கழுதை. எந்த அசிங்கத்தில் பிறந்தவளோ...'' என்று தொடங்கியவளை இடைமறித்து, ''வேண்டாம்மா. பெண் நல்லவள். இது போல எல்லாம் பேசாதே'' என்று மெதுவாகவே எச்சரித்தார் சிதம்பரம்.

''நல்லவளா? கேடுகெட்ட நாய். பணக்காரப் பையன்களை வலை போட்டுப் பிடிப்பதுதானே அவளது முக்கியத் தொழில். விளம்பர தொழிலில் அவள் ஈடுபட்டதே அந்த நோக்கத்தில்தானே? குறுக்கு வழியில் பணக்காரியாக வேண்டும் என்று..''

''போதும் சுரேகா. நிறுத்து. உண்மை தெரியாமல் சும்மா வாயில் வந்ததை உளறக் கூடாது. நீ சொல்கிற நோக்கம் அபிரா மிக்கு இருந்திருந்தால் ஆறு மாதம் முன்பே அவள் என் மருமகளாகி இருப்பாள். மணந்து கொள்ளும்படி சிவா கேட்ட பிறகும் தொழிலில் ஜெயித்த பிறகுதான் திருமணம் என்று பிடிவாதம் பிடித்திருக்க மாட்டாள். இரண்டு ஆண்டு அவகாசம் கேட்டு அவளே திருமணத்தை தள்ளிப் போட்டும் இருக்க மாட்டாள்.''

இனம் இனத்தோடே! ஒன்றும் இல்லாத குடும்பத்தில் இருந்து வந்த சிதம்பரத்துக்கும் ஒரு காலத்தில் இவர் இருந்தது போலவே பணம், அந்தஸ்து போன்ற எந்தவித பின் புலமும் இல்லாத அபிராமியிடம் உருகுகிறதாக்கும்.

ஆனால், இந்தத் திருமணத்தை நடக்க விடக்கூடாது. இரண்டு ஆண்டு அவகாசம் என்று அவளே திருமணத்தைத் தள்ளிப் போட்டாளாமே. அது என்னவென்று முதலில் அறிந்துகொள்ள வேண்டும். பிறகு அவளைப் போயோட்ட வேண்டும்.

புருவத்தை நெரித்து, ''உண்மையாகவே எனக்குத்தான் எதுவுமே தெரியாதே. மாமா அது என்ன இரண்டாண்டு அவகாசம்? ஒன்றும் புரியவில்லையே. பேரன், பேத்தி என்று அத்தை அவசரப்படுவதாக அம்மா சொல்லுவார்களே. உங்களுக்கும் அதே எண்ணம்தான் என்றார்கள்..'' என்று முடிக்காமலே நிறுத்தினாள் அவள்.

''தெரியாததை விவரம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படிக் கண்ட வார்த்தை பேசக் கூடாது'' என்று அப்போதும் புத்தி கூறிவிட்டு சுருக்கமான விவரம் கொடுத்தார். சிதம்பரம்.

விவரம் தெரிவித்த பிறகும், ''நீ சொல்லுகிற பேராசை, அபிராமிக்கு இருந்திருந்தால் பையன் காதல் என்றதுமே நான் தடுப்பதற்குக்கூட வழியில்லாமல் தாலியைக் கட்டிக்கொண்ட பிறகல்லவா என்னைப் பார்க்க வந்திருப்பார்கள்? இப்போதும் வெளிப்படையாக ஒன்றும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பவள் அவள்தான் என்றால் அதிலிருந்தே அபிராமியின் நல்ல குணம் உனக்குப் புரிந்திருக்கும். பாரம்மா முன்னே படிக்கும்போது போட்டி பொறாமைகள் இயல்புதான். ஆனால், இனி நீங்கள் இருவரும் உறவுக்காரர்கள் ஆகப் போகிறீர்கள். நல்லபடியாகப் பழக வேண்டியவர்கள். அதனால்தான் இவ்வள வும் சொன்னேன். கவனமாக நடந்துகொள்'' என்று முடித்தார்.

மனதை மறைத்து தலையாட்டிவிட்டு வெளியே வந்தவளுக்கு நெஞ்சு கனன்றது.

முடியாது. இதை ஒரு நாளும் நடக்கவிடக் கூடாது. அப்படி நடந்தால் சுரேகா என்று ஒருத்தி இருப்பதிலேயே அர்த்தம் இல்லை.

ஆத்திரத்துடன் தந்தையின் முன் சென்று நின்றாள் அவள்.

பாசத்தைக் கொண்டு தந்தையை தன் புறமாக வளைத்து மேலே தன் காரியத்தை தொடங்கினாள்.

ஒருவரை விழத்தட்டுவது என்றால் முதல் வேலை அவரது பலம், பலவீனம் பற்றி அறிந்தாக வேண்டும்.

எனவே, சுரேகா முதலில் அபிராமியைப் பற்றி ஆராய்ந்தாள்.

அபிராமியின் பூர்வோத்திரம் சுரேகா அறிந்ததுதான். அவளது கல்வித் தகுதியும்கூட.

விளம்பரத் தொழிலை அபிராமி எப்படிப் பயின்று எப்படித் தொடங்கி அதில் எப்படிக் காலூன்றினாள் என்ற முழு விவரத்தையும் ஒரு பெரிய உளவு நிறுவனத்தின் மூலம் விசாரித்து அறிந்தாள்.

மைத்ரேயன் விவகாரம் பற்றிய விவரம் அதிகப்படி போனசாக அவளுக்கு தெரிய வந்தது.

அவரை தன் வேலையில் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தாள்.

மைத்ரேயனும், அபிராமியுடன் தீயாய்க் காய்ந்து கொண்டுதான் இருந்தார்.

ஏறிச் சவாரி செய்யவிடாமல் விலக்கியதோடு நில்லாமல், இப்போது அவள் சாந்திக்கு வேலை வேறு கொடுத்து அவரிடமிருந்து பிரித்ததைக் கீழே தள்ளிய குதிரை, குழியையும் பறித்த மாதிரியாகவே எண்ணினார்.

அபிராமியை ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று குமுறிக் கொண்டிருந்தவருக்கு. சுரேகாவின் பழிவெறி நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது.

விளம்பரத் தொழிலின் நெளிவு, சுளிவுகள் அத்தனையும் அறிந்தவர் மைத்ரேயன்.

பணத்துடன் சுரேகாவும் சேர்ந்துகொள்ள இருவருமாக அபிராமியின் வீழ்ச்சியைத் திட்டமிட்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்றவும் தொடங்கினர்.

இப்படிப் பணமும், குயுக்தியும் சேர்ந்து, தனக்கு எதிராகக் கொரில்லாப் போர் தொடுக்கக் கூடும் என்று சற்றும் எதிர்பார்த்திராத அபிராமி தன் சரிவைத் தடுக்கும் வகை அறியாமல் திகைத்தாள்.

ஒரே வாரத்தில் இது மூன்றாவது ஆள்.

முதலில், ஆர்ட்டிஸ்ட். இரண்டு மூன்று நாட்களாகவே, அந்தப் பெண்ணின் வேலை, அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லை. மூன்றாவது தடவையாகத் திருப்பிச் செய்யச் சொன்னதும் வேலையிலிருந்து நிற்பதாகச் சொல்லிவிட்டாள் அவள்.

அவளுக்கு வேலை கொடுத்தபோது, அவளுடைய பெற்றோரே, அலுவலகத்துக்கு வந்து வயது வேறுபாடுகூட பார்க்காமல் அபிராமியின் காலில் விழப் போனார்கள். 'வாழவைக்கும் தெய்வம்' என்றார்கள்.

இப்போது 'மானம் மரியாதையை விட்டுவிட்டு வேலை செய்தாக வேண்டிய கட்டாயம் இல்லை' என்றாள் அந்தப் பெண்.

மற்ற இருவரும் எந்தவிதக் காரணமும் சொல்லத் தயாராக இல்லை.

ஏன்?

வேலை, தொழில் என்று வந்துவிட்டபின் எத்தனையோ பார்த்துப் பழகியிருந்தபோது விட்டுத்தள்ள முடியாமல் அபிராமிக்கு முணுமுணுவென்று உள்ளுர உறுத்திக்கொண்டே இருந்தது.

மிகவும் முயன்று மனதிலிருந்து அதை ஒதுக்கிவிட்டதாகத்தான் அவள் நினைத்தாள். ஆனால், அன்று சந்தித்துக் கொஞ்ச நேரத்தில் ''என்ன விஷயம்?'' என்று சிவசந்திரன் அவளிடம் கேட்டுவிட்டான்.

''ஒன்றும் இல்லையே'' என்று முறுவலித்தாள் அபிராமி.

அவளை நேராக நோக்கி ''வேறு யாரேனும் என்றால், இந்தப் பதிலில் திருப்தியடைந்து இதை விட்டு வேறு பேச்சுக்குப் போய்விடுவார்கள்தான். ஆனால், இங்கே உள்ளே இருந்து குடைவது, எனக்கு நன்றாகத் தெரிகிறதே'' என்று நெற்றியைச் சுட்டிக்காட்டிப் புன்னகை செய்தான் அவன்.

ஒருகணம் தயங்கிவிட்டு, விஷயத்தைச் சொன்னாள் அவள். ''ஓரளவு நன்றாகத்தான் சம்பளம் கொடுக்கிறேன் சிவா. தன் மதிப்புக்குப் பங்கம் நேராதவாறு நடத்துவதாகவும்தான் நினைத்தேன். ஆனால், குறை இருந்தால், சொல்லுங்கள் என்றால், சரியான பதிலும் இல்லை. அதுதான் கொஞ்சம்..''

''அதிகச் சம்பளத்தில் வேலை கிடைத்திருக்கும்.'' என்றான் சிவசந்திரன்.

''போகட்டும் இந்த மாதிரி ஓடுகிறவர்கள் போய்விடுவதே நல்லது. இப்போது வேறு ஆள் பார்க்கட்டுமா?'' என்று கேட்டான்.

அவள் முறைத்துப் பார்த்துவிட்டு, ''இதற்காகத்தான் உங்களிடம் சொல்லக் கூடாது என்று நினைத்தேன். எல்லாம் நானே பார்த்துக்கொள்வேன். இந்தத் தொழில் விஷயத்தில் உங்கள் உதவியே கூடாது என்று சொல்லியிருக்கிறேனே நினைவில்லையா?'' என்றாள் அவள் கண்டிப்புடன்.

''நன்..றாய்.'' என்று தோளைக் குலுக்கினான் அவன்.

''அப்பா செய்ததற்காக எனக்கே செக் அனுப்பியவள் ஆயிற்றே. மறக்குமா? என்னவோ, ஒரு காற்று உன் மேல் பலமாக வீசினால்கூடக் குடையாக வந்து தடுக்க மாட்டோமா, என்றிருக்கிறது. அந்த வேகத்தில், சொல்லி விட்டேன். சரிம்மா. நீயே பார். இனி, உன் வேலையில் தலையிடுவதே இல்லை. போதுமா?'' என்றான் அவன்.

சிறு அமைதியின் பின், ''கோபமா, சிவா?'' என்று மெல்லிய குரலில், அபிராமி கேட்டாள்.

கண்ணில் கனிவுடன் தலையசைத்துவிட்டு, வேறு பேசத் தொடங்கினான் சிவசந்திரன்.

அடுத்து வந்த பத்து நாட்களில், அபிராமி, இன்னும் இருவரை வேலையில் சேர்த்து, அவர்களும் விலகிப் போனார்கள்!

ஓய்வின்றி, அந்த வேலைகளையும் சேர்த்துச் செய்து களைத்தாள் அவள்.

இந்த நிலையில், அவளுக்கு அவ்வப்போது பத்திரிகைகளில் முன் பணம் கட்டப் பணம் கொடுத்து உதவி வந்த நிதி நிறுவனத்திலிருந்து அன்று வரை உள்ள பாக்கியை உடனே கட்டுமாறு தாக்கீது வந்தது.

ஐந்தரை லட்ச ரூபாய். எப்படி முடியும்?

சற்றும் இளக்கமற்ற விதத்தில் அமைந்திருந்த கடித வாசகத்தைப் பார்த்துப் பிரமித்து நின்றாள் அபிராமி.

அபிராமி விளம்பர கம்பெனி நடத்துகிறாள். சோப்புத்தூள் நிறுவன அதிபர் சிவசந்திரன் அவளை விரும்புகிறான். கம்பெனி நல்ல நிலைக்கு வரும்வரை திருமணம் கிடையாது என்கிறாள். அவன் தந்தை, இரண்டு ஆண்டுக்குள் கம்பெனி வளரத் தவறினால் அதை மூடிவிட வேண்டும் அல்லது சிவாவை மறந்துவிட வேண்டும் என்கிறார். அபிக்கு பழைய முதலாளி மைத்ரேயனுடன் மோதல் ஏற்படுகி றது. சிவா - அபி திருமணத்தை தடுக்க மைத்ரேயனுடன்

அணி சேர்கிறாள், சிவாவின் மாமா மகளும் அபிராமியின் விரோதியுமான சுரேகா. அப்பாவிடம் லட்சக்கணக்கில் பணம் பெறுகிறாள். இனி..

எந்த ஒரு தொழிலை நடத்துவது என்றாலும், 'வொர்க்கிங் காபிடல்' என்கிற பண முதலீடு வேண்டும்.

அபிராமியை பொறுத்தவரை அது பூஜ்யம். 'இல்ல'த்தில் வேலை செய்து அவள் சேர்த்து வைத்திருந்த சில ஆயிரங்களுக்கு ரேயனில் அவள் பயிற்சி எடுத்த காலம், உலை வைத்திருந்தது. அப்படியில்லாவிட்டாலும் அந்த பணம் யானைப் பசிக்கு சோளப்பொரி மாதிரிதான்.

நல்ல சமயத்தில் பரந்தாமன் கை கொடுத்ததால், அபிராமியும் இப்படி ஒரு தொழிலை தொடங்கி ஓரளவு வளர்ச்சி அடையவும் முடிந்தது. ஆனால், செலவு போகக் கிடைத்த பணம் ஓரளவுக்குதான் கட்டி வந்தது. அலுவலகச் செலவு நிறைய இருந்தது. பத்திரிகையாளர் சங்கத்தின் அங்கீகாரம் இன்னமும் கிடைக்காத நிலையில் முன்பணம் கட்டியே விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டியிருந்ததால் பெரும்பாலும் வட்டிக்கு கடன் வாங்கிதான் அதை செய்து வந்தாள். விளம்பரம் வெளியாகி 75 நாட்களில் விளம்பரதாரரிடமிருந்து பணம் வந்ததும் நிதிநிறுவனத்துக்கு பணத்தை கொடுத்துவிடுவாள். அவள் நாணயத்தோடு நடந்து கொண்டதால் நிதி நிறுவனத்தாரும் அவள் எப்போது எவ்வளவு கேட்டாலும் பணம்தர தயங்குவதில்லை. அவளுக்கு தேவைப்பட்ட அந்த இரண்டரை மாத அவகாசத்தில் அதற்கு முன்னதாக திருப்பித் தருமாறு நெருக்குவதும் இல்லை.

பணம் திருப்பி வந்துவிடும் என்பதோடு அவர்களுக்கும் வட்டி லாபம்தானே?

இப்படியே, ஐம்பதாயிரத்தில் தொடங்கியது ஐந்தரை லட்சம் வரை வளர்ந்திருந்தது. மற்ற விளம்பர நிறுவனங்களின் மூலமாக வெளியிட்டு பாதியை அவர்களுக்கு கமிஷனாக கொடுப்பதைவிட இது லாபமாக இருக்கவே அபிராமி கடன் வாங்குவதை பொருட்படுத்தவில்லை. இவ்வளவு வட்டியா என்று மலைப்பதும் இல்லை.

எல்லாம் இயல்பாகத்தானே சென்று கொண்டிருந்தன? ஒரு வாரத்துக்கு முன்பு கூட நிதி நிறுவனத்தின் நிர்வாகி நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந்தார். எம்.டி.யிடம் அழைத்துச் சென்று புகழ வேறு செய்தாரே. இன்று எப்படி இப்படியொரு கடிதம் எழுதக் கூடும்?

வெகுநேரம் யோசித்தும் விடை காண முடியாமல் திணறிவிட்டு மறுநாள் நிதி நிறுவனத்துக்கு அபிராமி நேரே சென்றாள்.

வழக்கத்துக்கு விரோதமாக, தலைமை நிர்வாகியை பார்ப்பதற்கே அன்று அவள் காத்திருக்க நேர்ந்தது. காத்திருந்து சந்தித்தவளிடம், ''உங்கள் வேலையில் திருப்தியில்லாமல் பல வாடிக்கையாளர்கள் அபிராமியை விட்டுவிடப் போவதாக நம்பிக்கையான இடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. அப்படி விடும்போது எங்கள் பணத்துக்கு என்ன உத்திரவாதம்?'' என்று கேட்டார் அவர்.

தன் டைரியை வாசித்துக் காட்டினாள் அவள். ''விளம்பரதாரர்கள் கூடியிருக்கிறார்கள். விளம்பரங்கள் கூடியிருக்கின்றன. அப்படியிருக்க எப்படி இப்படி சொல்கிறீர்கள்?''

''உங்களிடம் விளம்பரம் கொடுப்பவர்களில் முக்கியமானது வெண்புறா. அவர்கள் வேறு நிறுவனம் தேடுவதாக சொல்கிறார்களே. சொன்னது அவர்களின் உறவினர். தொழில்

வட்டாரத்தில் அதுவும் பெரிய குடும்பம். வேறு எந்த விளம்பர நிறுவனத்துக்கு போகப் போகிறார்கள் என்றுகூட தெரிவித்தார்கள். அவர்கள் பேச்சை சந்தேகப்பட காரணம் இல்லையே.''

யாராக இருக்கும்? சொன்னவர் பற்றி நிர்வாகி விவரம் கூறப்போவதில்லை என்று புரிந்தது. தன்னை அழிக்கும் வேகம் யாருக்கு இருக்கும்?

யோசிக்கும்போது மைத்ரேயனின் நினைவு வரத்தான் செய்தது. ஆனால் அவர் சிவாவுடைய உறவு அல்லவே. உறவில் அபிராமியை வெறுக்கும் சுரேகா இருந்தாள். ஆனால் விளம்பரத் தொழிலுக்கும் அவளுக்கும் தொடர்பே இல்லை. அடுத்த விளம்பர நிறுவனத்தின் பெயர்வரை அவள் எப்படிச் சொல்வாள்?

ஆனால், யோசித்துக் கொண்டிருக்க அவகாசமில்லை. நிர்வாகி பொறுமையிழப்பது தெரிந்தது. இந்த இக்கட்டை சீர் செய்வதைத்தான் முதலில் பார்க்கவேண்டும்.

ஒரு வழி தோன்ற, ''இது வெறும் புரளி சார். வேண்டுமானால் இப்போதே வெண்புறாவுக்கு ஃபோன் செய்து இந்த செய்தி பற்றி கேளுங்கள். உண்மை புரியும். சுலபம் உரிமையாளரிடமும் விசாரித்துப் பாருங்கள். என்னிடம் விளம்பரம் தரும் யாரிடம் வேண்டுமானாலும் கேளுங்கள். யாரோ சொன்னார்கள் என்று விடாமல் அடிப்படை வரை ஆராய்ந்து முடிவெடுங்கள் சார்'' என வேண்டுகோள் குரலில் சொன்னாள் அபிராமி.

மழுப்பலோ நழுவலோ இன்றி அவள் சொன்ன விதம் நம்பிக்கையூட்டிய போதும், ''இது பண விஷயம் மிஸ் அபிராமி. தீர ஆராயாமல் சட்டென நான் உங்களுக்கு வாக்குக் கொடுக்கமுடியாது. பார்க்கலாம்'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அதுவே அபிராமிக்கு திருப்திதான். ஏனெனில் விசாரித்தால் உண்மை தெரியும். உண்மை அவளுக்கு சாதகமானது. எனவே மலையோ என்று அவளை மிரட்டிய துன்பம் பனிபோல விலகிவிடும்.

இருந்தபோதும், பழைய நிலையையே தொடரலாம் என்று நிதி நிறுவனம் கடிதம் எழுதும்வரை அபிராமியை சிறு கவலை அரித்துக் கொண்டேதான் இருந்தது.

கடிதம் வந்த பிறகும் கவலை அகன்றுவிட்டதாக சொல்ல முடியாது. புரளிதான் என்று தெரிந்துவிட்டாலும் இனி அந்த நிதி நிறுவனம் முன்பு போல கேட்டபோதெல்லாம் கேள்வியே இல்லாமல் பணம் தருவது சந்தேகமே. அவர்களுக்கு நெருடல் இருந்து

கொண்டே இருக்கும். ஒருமுறைக்கு இருமுறை தெளிவு படுத்திக்கொள்ளாமல் தரமாட்டார்கள். பழைய நம்பிக்கை வராது. இன்னொன்றும் அவளை உறுத்தியது.

இந்த குட்டையைக் குழப்பி விடுகிற வேலை யார் செய்தது? ஏன் செய்தார்கள்? அவளுக்கு தொல்லை தரவேண்டும் என்று யார் முயற்சி செய்கிறார்கள்?

வெறும் தொல்லைதான். அவளால் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும் என்பது குட்டை குழப்பியவர்களுக்கும் தெரிந்துதான் இருக்கும். அல்லது பிரச்னை இருக்கும் பக்கமே போக வேண் டாம் என்று நிதி நிறுவனம் அபிராமியை கைகழுவி விடும் என்ற எதிர்பார்ப்பாக இருக்குமா?

நேரம் கிடைத்தபோதெல்லாம் அபிராமிக்கு இந்த நினைவாகவே இருந்தது. சுரேகா, மைத்ரேயன் இருவர் பற்றிய ஞாபகம் வந்தபோது மைத்ரேயனை பற்றித்தான் அதிகம் சந்தேகப்பட்டாள்.

மைத்ரேயன் பாம்பு. கரம் வைத்து கொத்தும் பாம்பு. பயிற்சியின்போது அவளையே கொத்த முயன்றிருக்கிறது. நற்சான்று கொடுக்கும்போது விஷம் கக்கியும் இருக்கிறது. விளம்பர தொழிலும் அதற்கு அத்துபடி. இப்போதும் அவளிடம் நேரே அவமானப் பட்டதோடு அதிகப்படியாக சாந்தி விஷயம் வேறு இருக்கிறது.

ஆனால் அவர் சொன்னதற்காக இவ்வளவு பெரிய நிதி நிறுவனத்தில் எதையேனும் மாற்றிச் செய்வார்களா? அதிலும் ஒழுங்காக நடந்துகொண்டிருப்பதை? சிவசந்திரனுடைய உறவுக் குடும்பங்களுள் ஒன்று என்றாரே...அதற்கும் மைத்ரேயனுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றும் இல்லையே.

சுரேகாவின் குடும்பத்தொழிலின் விளம்பரங்கள்கூட வேறு நிறுவனத்தின் மூலமாத்தான் வெளியாகிறது. அந்த குடும்பத்தோடு கொஞ்சம் நட்புறவு இருந்தாலும் அவர்களின் விளம்பரங்களை தன் ரேயனுக்கு மைத்ரேயன் இழுத்துவிட்டிருக்க மாட்டாரா?

அபிராமியை அழிக்க விரும்பக்கூடிய அடுத்தநபர் சுரேகா.

அவள் தந்தை மூலமாக இந்த கடனை சுரேகா நிறுத்தி இருக்கலாம். சாத்தியமே. மகளுக்காக அவர் உயிரையே கொடுப்பார் என்று சுரேகா பற்றியதில் பாதி உண்மை இருந்தால்கூட அவள் அவரை இந்த வேலை செய்ய வைத்திருக்கலாம்.

ஆனால் தன்னால் ஆகாவிடினும் சிவசந்திரனை கொண்டேனும் இந்த சிக்கலை அபிராமி தீர்த்துக் கொள்ள முடியும் என்று சுரேகாவுக்கு புரிந்திருக்காதா? தன் முயற்சியால் வெற்றிபெற உறுதி கொண்டுள்ள அபிராமி அவனது உதவியை நாடமாட்டாள்; தொழிலை பொறுத்தவரை அவனை விலக்கியே வைத்திருக்கிறாள் என்பதெல்லாம் சுரேகாவுக்கு எப்படி தெரிய முடியும்? இப்போதுகூட உண்மை சொல்வார்கள் என்று வெண்புறா பெயரை அபிராமி கூறினாளே தவிர சிவாவிடம் உதவி கேட்டு அல்ல.

உதவிக்கென்றால் அவளே சிவசந்திரனை அழைத்திருப்பாளே. அழைக்காத காரணம் அவளது கொள்கை.அவர்கள் உறவை போலவே அவளின் இந்த கொள்கையும் பிறர் அறியாததுதானே? அப்படியிருக்க சுரேகா இந்த முயற்சியை செய்வானேன்?

எவ்வளவு முயன்றும் அபிராமியால் தெளிவான முடிவுக்கு வர முடியவில்லை. இந்தப் பிரச்னையில் அவள் அறியாத ஏதோ ஒன்று இருப்பது மட்டும் புரிந்தது. என்ன முயன்றும் அது என்னவென்று அவளால் கண்டுபிடிக்கவும் முடியவில்லை.

அலுத்துப்போய், இருக்கட்டும்; செய்தது யாரானாலும் எப்படியும் அடுத்து முயலாமல் இருக்க மாட்டார்கள். அப்போது பார்த்துக் கொள்ளலாம். என்று ஒதுக்கிவிட்டு வேலையில் ஈடுபட்டாள்.

அடுத்த முயற்சி அவளுக்கு வலிக்கக்கூடும் என்று அபிராமி அப்போது எதிர்பார்க்கவில்லை.

இந்த பணவிவகாரம் போல சமாளிக்கக் கூடியதாகவே இருக்கும் என்று எண்ணினாள். ஆனால் அவளுடைய எதிரிகளின் அடுத்த முயற்சி அபிராமிக்கு விலை உயர்ந்த பாடமாக அமைந்தது.

எதையும் முழு ஈடுபாட்டோடு செய்கிறவள் என்பதால் வேலையில் மூழ்கிய அபிராமி இந்த பிரச்னையைக் கிட்டத்தட்ட மறந்தே போனாள்.

ஆனால் அடியோடு மறந்துபோய்விடாமல் நினைவூட்டுவது போல வட்டமாக விரிந்த விழிகளுடன் அன்று சுமனா வந்தாள். ''அபிராமி இன்று ஓர் ஆள் என்னிடம் வந்து மூன்று மடங்கு சம்பளம் தருவதாக சொல்லி வேலைக்கு கூப்பிட்டான். இரண்டு மாதம் கழித்து நடுத்தெருவில் நிறுத்திவிடுவாயே. ஐந்து ஆண்டு சம்பளத்துக்கு பாங்க் உத்திரவாதம் தருவாயா என்றேனா, ஓடிவிட்டான்'' என்று வியப்பும் சிரிப்புமாக விவரித்தாள். 'இதற்கு மூன்று மடங்கு சம்பளம் கட்டி வருமா என்று யோசிக்க மாட்டார்களா, என்றுகூட இல்லாமல் கேட்கிறானே.'

கட்டி வராது. அபிராமியிலிருந்து சுமனாவை அகற்ற வேண்டும் என்று விரித்த வலை. காரணமே கூறாமல் வேலையை விட்டு சென்ற அறுவரின் நினைவு வந்தது.

''அவ்வளவு ஊதியம் தர முன்வருவது எந்த கம்பெனி என்று கேட்டீர்களா சுமனா?'' என்று விசாரித்தாள்.

''இல்லை அபிராமி. நமக்கும் நாலு விளம்பர கம்பெனிகளில் வேலை பார்த்த அனுபவமா? இது போகாத ஊருக்கு வழி என்று புரிந்துவிட்டதால் அவன் வயிற்றை கலக்கிவிட்டேனே தவிர, யார் என்னவென்று கேட்கவே தோன்றவில்லை'' என்றாள் அவள்.

''ஒரு மாதம் இருக்கும். என்னிடம்கூட இதே போல கேட்டார்கள். யாரோ முட்டாளடிக்க முயற்சிக்கிறார்கள் என்று திட்டி விரட்டிவிட்டேன்'' என்றாள் பார்க்கவி.

முட்டாளடிக்கும் முயற்சியில்லை. அபிராமியின் மூக்கை உடைக்கும் முயற்சி. முழு உயிரையும் எடுக்கும் முயற்சியாகக் கூட இருக்கலாம். அவளது விளம்பரத் தொழிலை அடியோடு அழிக்கும் முயற்சி.

தொடங்கியதிலிருந்து கூடவே இருக்கும் இவர்களிடம் நடந்த விஷயத்தை பகிர்ந்து கொள்ளலாமா என்று ஒரு கணம் யோசித்து, வேண்டாம் என முடிவு செய்தாள்.

பார்கவி, சுமனா இருவரிடமும் கலைக்கும் முயற்சி நடந்து முடிந்துவிட்டது. சாந்தி அசைய மாட்டாள். மகா லட்சுமிக்கு இந்த தொழிலுக்குரிய தகுதிகள் போதாது. எனவே இவர்களிடம் இனி முயற்சிக்க மாட்டார்கள். இதெல்லாம் திட்டமிட்ட சதி என்று கூறி, நிம்மதியாக இருக்கும் இவர்கள் மனதை சலனப்படுத்துவானேன்?

அதோடு பணத்தால் அடிக்க முயன்றது தோற்றுப் போயிற்று. அலுவலர்களை கலைக்கும் முயற்சி முக்கிய மானவர்களிடம் பலிக்கவில்லை. இனி அந்த கெடுமதியாளர்களால் எதுவும் செய்ய முடியாது. எனவே எதையாவது சொல்லி இவர்களுக்கு கவலையூட்டுவதைவிட நடந்ததை அபிராமியுமே மறக்க முயற்சிப்பது மேல்.

அபிராமி நம்பினாள். ஆனால் விளம்பரத் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்ட மைத்ரேயன் இன்னமும் தன்னால் என்னென்ன செய்ய முடியும் என்று காட்டினார்.

அடுத்த மாத தொடக்கத்தில் ஒரு பெரிய விளம்பரம் ஆந்திரா முழுவதிலும் சின்னஞ்சிறு பத்திரிகைகளில்கூட வெளிவர இருந்தது. முதல் பக்க விளம்பரம். சிவசந்திரன் புதிய சோப்புத்தூளை அறிமுகம் செய்த மாதிரி இது ஒரு வகை மசாலாத்தூளின் அறிமுக விளம்பரம்.

இன்னும் ஒரு வெற்றிப்படி என்று அபிராமி மகிழ்ந்து கொண்டிருந்தாள். அந்த அளவுக்கு மசாலாத்தூள் தயாரிப்பாளருக்கே விளம்பர அமைப்பு பிடித்துப் போயிருந்தது. இலவச விநியோகத்துக்கும் விற்பனைக்கும் தேவையான சரக்குடன் தயாரிப்பாளர் அங்கே சென்றும் ஆயிற்று.

ஆனால் அந்த ஒன்றாம் தேதி விடிந்த விதம்தான் அபிராமிக்கு சரியில்லாது போயிற்று.

அதிகாலை ஐந்தரை மணிக்கே போன் வந்துவிட்டது.

காச் பூச்சென்று மசாலாத்தூள் தயாரிப்பாளர் கத்தியதில் ஒருவாறு அபிராமி உணர்ந்து கொண்டது, அன்றைய முக்கிய பத்திரிகைகள் இரண்டில் விளம்பரம் வெளியாகவில்லை என்பதே.

அடுத்து அவர் சொன்னது, இந்த விளம்பரத்துக்காக ஒரு பைசா தர முடியாது என்றது.

பணத்தை விடவும் அவள் மனதை பாதித்தது விளம்பரம் வெளியாகவில்லை என்பதுதான். இது எப்படி சாத்தியம்?

முன்னதாகவே பத்திரிகைகளில் இடம் பதிவு செய்து. விளம்பர அட்டைகளையும் குறித்த காலத்தில் அனுப்பி அட்டைகள் வந்து சேர்ந்துவிட்டதையும் கேட்டறிந்த பிறகு விளம்பரம் எப்படி வெளிவராமல் நிற்கக் கூடும்?

பத்திரிகையை நன்றாக பார்த்தீர்களா என்ற கேள்வி நாக்குநுனி வரை வந்து அடக்கப்பட்டது. சரியாகப் பாராமல் அவர் இந்தக் கத்து கத்த மாட்டார். அதோடு இது முதல் பக்க விளம்பரம். ஏதோ உள்பக்கத்தில் கண்ணில் படாது போயிற்று என்று சொல்ல முடியாது.

அவசரமாக கிளம்பி அலுவலகத்துக்கு சென்று பார்த்தாள். ஃபேக்ஸில் சில தகவல் வந்திருந்தன.

அபிராமி அட்வர்டைசிங் சார்பில் அனுப்பப்பட்ட ரத்து வேண்டுகோளின்படி மசாலாத்தூள் விளம்பரம் நிறுத்தப் பட்டதாக இரண்டு பத்திரிகைகளும், ரத்து உத்தரவு காலம் தாழ்ந்து வந்ததால் முதல் ஆர்டரின்படி விளம்பரம் பிரசுரிக் கப்பட்டுவிட்டது; விரைவில் பில் அனுப்பப்படும் என்று சில பத்திரிகைகளும் தெரிவித்திருந்தன.

அவள் எதையும் ரத்து செய்யவில்லையே. பின்னே இது இந்தக் குளறுபடி எப்படி நடந்தது?

ரத்து ஆர்டர்களை ஃபேக்ஸ் மூலம் தனக்கு அனுப்புமாறு பத்திரிகைகளுக்கு பணிவுடன் வேண்டுகோள் விடுத்தாள்.

பணிவுடன்தான். முள் செடியில் விழுந்துவிட்ட சேலை அவளுடையது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சேதமின்றி எடுத்தாக வேண்டுமே.

அபிராமியால் இதுவரை தொல்லை நேர்ந்தது இல்லை என்பதால் பத்திரிகைக்காரர்களும் ஒத்துழைத்தனர்.

அனுப்புவோர் அபிராமி அட்வர்டைஸிங் என்றுதான் ஃபேக்ஸ் தகவலில் இருந்தது. ஆனால் அதில் இருந்த டெலிபோன் எண் வேறு. அவளது கையெழுத்து இருக்க வேண்டிய இடத்திலும் வேறு ஏதோ கோழிக் கிறுக்கல் இருந்தது.

இது சதிவேலை என்பது அவளுக்கு நிச்சயமாயிற்று.

டெலிபோன் எண்ணை விசாரித்ததில் ஒரு தபால் ஆபீசின் எண் என்று தெரிய வந்தது.

யாரோ வேண்டுமென்று அந்த தபால் ஆபீசுக்கு போய் இந்த பேக்ஸ் கொடுத்து மசாலா தூள் விளம்பரம் வெளியாவதை தடுக்க முயன்று வெற்றியும் பெற்றுவிட்டார்கள்.

பத்திரிகை அலுவலகங்களில் இதையெல்லாம் நுணுக்கமாக சரிபார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மசாலாத்தூள்காரரிடம் சதி விஷயத்தை சொல்லிப் பார்த்தாள்.

ஆனால், ''உன் எதிரிகள் சதி செய்தால் அதற்கு நானா பிணை? இப்படி ஆயிரம் விரோதிகள் உனக்கு இருக்கிறார்கள் என்று தெரிந்திருந்தால் உன்னிடம் விளம்பரத்தை கொடுத்தே இருக்க மாட்டேன்!'' என்று எகிறிக் குதித்தார் அவர்.

சட்டென சுதாரித்தாள் அபிராமி.

இது வெளியே தெரிவது அவளுக்கே நல்லதல்ல.

அவசரமாக யோசித்து ''சார் இந்தச் சதி வேலையை உங்கள் எதிரிகள் செய்திருப்பார்கள் என்பது என் சந்தேகம் சார்.'' என்றாள் அழுத்தமான குரலில். அதனால் இப்போது எனக்கல்லவா நஷ்டப்படுகிறது.

ஏதோ ஒரு வழியாக பாதிப் பணம் தருவதாக அவர் ஒப்புக் கொண்டார். பாதி கைப்பிடிப்பாகிறது. விலை உயந்த பாடம் படித்ததாக தன்னையே தேற்றிக் கொண் டாள் அபிராமி.

பாடம்தான். அன்றிலிருந்து ரத்து ஆர்டர்களை மீண்டும் ஒரு தரம் அபிராமி நிறுவனத்துடன் கலந்து கொண்ட பிறகே அமல்படுத்த வேண்டும் என்ற விசேஷ குறிப்புடன் அவளது விளம்பரங்கள் அனுப்பப்பட்டன. கடைசி நிமிஷ விசாரிப்பையும் வழமையாக்கிக் கொண்டாள்.

இந்த ஒன்றை எண்ணி சோர்ந்துவிடக் கூடாது என்று தனக்குத்தானே அறிவுறுத்திக்கொண்டு வேலையில் முனைந்தாள். தோதாக நகரின் பல்வேறு பகுதிகளில் பெரிய அளவில் சூப்பர் மார்க்கெட் திறந்து கொண்டிருந்த உதயா ஸ்டோர்ஸ் நிறுவனம் தன் விளம்பரப் பொறுப்பை அபிராமியிடம் ஒப்படைத் தது.

விளம்பர தயாரிப்புக்காக முதலிலேயே இரண்டு லட்ச ரூபாயை கையில் கொடுத்து விடவும் அபிராமி மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்தாள்.

முதல் விளம்பரம் தொடங்கி, இரு மாதங்கள் முடியுமுன் பில் தொகை பத்துலட்ச ரூபாய்க்கும் அதிகம் ஆயிற்று.

இன்னும் பதினைந்து நாட்கள். அதிலிருந்து உதயாவினர் விளம்பரங்களுக்கான தொகையைத் தர தொடங்கி விடுவார்கள். இந்த ஒரே கணக்கில் ஒன்றரை லட்சம் லாபம் வரும். அத்தோடு பெயரும் பரவும். அதன்பின்...

வண்ணக் கனவுகளுடன் அன்றைய பத்திரிகை ஒன்றை பிரித்த அபிராமி சட்டென அசைவற்றுப் போனாள்.

அரைப் பக்க அளவில், 'ரேயன்' விளம்பர நிறுவனத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த உதயா ஸ்டோர்ஸ் விளம்பரத்தில் இருந்த எழுத்துகள் தனித்தனியே எழுந்து நின்று அவள் முன் தாண்டவமாடின.

அவளது சொந்த நிறுவனத்தின் மூடு விழாவைக் கொண்டாடுவதுபோல!

(தொடரும்)

அபிராமி விளம்பர கம்பெனி நடத்துகிறாள். சோப்புத்தூள் நிறுவன அதிபர் சிவசந்திரன் அவளை விரும்புகிறான். கம்பெனி நல்ல நிலைக்கு வரும்வரை திருமணம் கிடையாது என்கிறாள். அவன் தந்தை, இரண்டு ஆண்டுக்குள் கம்பெனி வளரத் தவறினால் அதை மூடிவிட வேண்டும் அல்லது சிவாவை மறந்துவிட வேண்டும் என்கிறார். அபிக்கு பழைய முதலாளி மைத்ரேயனுடன் மோதல் ஏற்படுகிறது. சிவா - அபி திருமணத்தை தடுக்க

மைத்ரேயனுடன் அணி சேர்கிறாள், சிவாவின் மாமா மகளும் அபிராமியின் விரோதியுமான சுரேகா. அப்பாவிடம் லட்சக்கணக்கில் பணம் பெறுகிறாள். அபிராமிக்கு உதவி வந்த நிதி நிறுவனம் மூலமும், வாடிக்கையாளர் மூலமும் பிரச்னை கொடுக்க தொடங்கினர்
மைத்ரேயனும் சுரேகாவும். இனி..

சற்று நேரம் அபிராமி அசையாமல், சிலையாக அமர்ந்திருந்தாள்.

இது எப்படி முடியும்?

ஒரே நிறுவனம் தன் விளம்பரங்களை, இரு வேறு விளம்பர நிறுவனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பது உண்டுதான். ஆனா, அவை, ஒரே தொடர்ச்சியில் இல்லாத, வெவ்வேறுவித விளம்பரங்களாக இருக்கும். இப்படி, ஒரே தொடராக வருவதைத் திடுமென ஆள் மாற்றிக் கொடுப்பது இல்லை.

இவ்வளவு நாளாக, ஏறத்தாழ இரண்டு மாதங்களாக அவளது அபிராமி மூலமாக மட்டுமே வெளியான தொடர் விளம்பரங்கள், இப்போது, இன்னொரு நிறுவனத்தின் மூலமாகப் பிரசுரிக்கப்படுவது, அவளுக்கு வைக்கப்படும் கரும் புள்ளியல்லவா?

சென்ற வாரம் கூட, அதாவது ஏழே நாட்களுக்கு முன்பாகச் சந்தித்தபோது கூட, அவளது விளம்பரத்தாலேயே, தன் சூப்பர் மார்க்கெட்டுகளில் கூட்டம் அலை மோதுவதாக, 'உதயா ஸ்டோர்'ஸின் உரிமையாளர் தீனதயாளு கூறினாரே.

இந்தப் பெரிய பத்திரிகையில், இன்று இந்த விளம்பரம் வருவதானால், அப்போதே, மைத்ரேயனிடம் 'உதயா'வின் விளம்பரங்களைக் கொடுக்கும் ஏற்பாடும் நடந்து முடிந்திருக்க வேண்டும். இது போன்ற அரைப்பக்க விளம்பரம் எல்லாம், இன்று கொடுத்து, நாளை பிரசுரமாவது, கடினம். அதுவும், இந்தப் பத்திரிகையில், நடக்காத காரியம்.

திரைமறைவில் சதி நடத்தி, அவள் முதுகில் குத்தியிருக்கிறார்கள்.

ஒரு பயச் சிலிர்ப்புடன், அபிராமி நிமிர்ந்தாள். சதி செய்து, இப்படி அவள் முதுகில் குத்தியவர்கள், அவளை அடியோடு அழிக்கத்தான், அப்படிச் செய்திருப்பார்கள்.

இது, வெறும் கரும்புள்ளி மட்டும்தானா? அல்லது.. இந்த விளம்பரங்களுக்காகக் கடன் வாங்கிப் பத்திரிகைகளுக்குக் கட்டிய பெரும் தொகை நினைவு வர, அபிராமியின் நா உலர்ந்தது.

நெஞ்சுக் கூடு காலியாவது போன்ற உணர்வைச் சிரமப்பட்டு, சமாளித்தபடி, 'உதயா'வின் உரிமையாளருக்கு போன் செய்தாள்.

அழிவின் அளவைத் தெரிந்து கொண்டாக வேண்டும் அல்லவா?

எடுத்தது தீனதயாளுதான்.

என்ன மாதிரிப் பெயரை வைத்துக் கொண்டு, என்ன வேலை செய்துவிட்டார் என்று அபிராமியின் மனது பரிதவித்தது. அடக்கிக் கொண்டு பேசினாள்.

அவளை எதிர்பார்த்திருந்தவர் போலத் தோன்றினார். ''என்னம்மா செய்வது? உன் வேலை எனக்குத் திருப்தியாக இல்லை. அதான், வேறே ஆளிடம் கொடுத்துவிட்டேன்'' என்றார், அசிரத்தைக் காட்டி.

நடிப்பு, குரலில் நன்றாகவே தெரிந்தது. அன்று, 'பிரமாதம்' என்று சொன்னாயே என்று கேட்டு, இப்போது ஒரு பயனும் இல்லை. சேதம் எவ்வளவு என்பதைத்தான் முதலில் பார்க்க வேண்டும்.

உலர்ந்துபோன தொண்டையை, விழுங்கி ஈரமாக்கிக்கொண்டு, ''சா...ர், என் பணம்?'' என்று கேட்டாள் அவள்.

''பணமா?'' என்று, 'இதுதான் பூலோகமா?'க் குரலில் கேட்டான் அந்தப் பாதகன். ''நான் உன்னிடம் ஒன்றும் கடன், கிடன் வாங்கியது இல்லையே.''

''உங்கள் விளம்பரங்களுக் காகப் பத்திரிகைகளுக்கு, நான் கட்டிய முன்பணம், சார். கிட்டத்தட்ட பத்து லட்சத்துக்கும் மேல் ஆகிவிட்டது, சார்'' என்றபோது, கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு, அவளது குரல் நடுங்கியது.

''அடேயப்பா, அவ்வளவா? யம்மாடி. கணக்கைச் சரியாகத்தான் கூட்டினாயா?'' என்றார் தீனதயாளு. ''பாரும்மா, நானே, கடைகளிலே பணத்தை நிறையப் போட்டுவிட்டு, முழித்துக்கொண்டு இருக்கிறேன். இப்போதைக்குக் கையிலே, பைசா இல்லை. ஒரு.. ஒரு ஆறு மாசம் பொறு. அப்பறமா, கடைகள் நல்லா நடந்து, கையிலே பணம் வந்தால், கொஞ்சம் கொஞ்சமா, ஐயாயிரம், பத்தாயிரமாகத் திருப்பித் தந்து விடுகிறேன்.. ஆனாலும், கணக்கைக் கொஞ்சம் நல்லாப் பார்த்து வையம்மா. இவ்வளவு பணம் எப்படி வரும்? ஊகூம். எனக்கு நம்பிக்கை இல்லை. என் ஒரு கடைக்கு, முதலே.. சரி சரி அதையெல்லாம் அப்பறம் பார்க்கலாம். ஒரு ஆறு மாதம் கழித்து, இந்தக் கணக்குகளை எடுத்துக் கொண்டு வா. கூட்டிக் கழித்து, ஏதோ, தர முயற்சிக்கிறேன். இப்போது, போனை வைக்கிறாயா? நான் வேறே ஒருத்தரோடு பேச வேண்டியிருக்கிறது..''

தீனதயாளு வைத்துவிட்டார்.

செய்வதறியாமல், கையில் இருந்த ரிசீவரை வெறித்துப் பார்த்தவாறு, அப்படியே அமர்ந்திருந்தாள், அபிராமி. யோசிக்கக்கூட முடியாமல், மூளை மக்கர் செய்தது.

ஏதோ சத்தம் கேட்கவே, ரிசீவரை மீண்டும் காதில் வைத்தாள்.

தீனதயாளுதான். ''அட, என்னம்மா. போனைக் கீழே வைக்காமல், கையிலேயே வைத்து, அழகு பார்த்துக் கொண்டு, இருந்தியாக்கும்? மற்றவர்கள் பேச வேண்டாம்? கீழே வைத்து, தொடர்பை வெட்டு'' என்று அதட்டினார்.

நெற்றிப் பொட்டைத் தேய்த்துவிட்டபடி, அவர் சொன்னதைச் செய்தாள் அபிராமி.

இப்போது, இந்தப் பத்து லட்சத்துக்கும் மேல் போயிருந்த பணத்துக்கு என்ன செய்வது? தீனதயாளு மேல் கேஸ் போடலாம். ஆனால், அது முடிய எத்தனை ஆண்டுகள்

ஆகுமோ? விண்ணப்பித்து இருந்த ஐஎன்எஸ் அங்கீகாரம் இன்னும் கைக்கு வந்து சேராத நிலையில், அவளுக்கு, ஒரு பிடிமானமும் இல்லையே.

இவ்வளவு பணத்தையும் தந்து உதவிய நிதி நிறுவனத்துக்கு எப்படித் திருப்பிக் கொடுப்பது?

காதுக்குள் இந்தக் கேள்விகளே, 'ஹொய்' என்று இரைந்து கொண்டிருந்ததில், போன் மணி அடித்ததுகூடச் சற்று நேரம், அவளுக்குக் கேட்கவே இல்லை.

ஒருவாறு, அவளது தவிப்பைத் துளைத்து, அது. அவளது காதில் விழவும், பயந்துகொண்டே, ரிசீவரை எடுத்தாள்.

பயம் சரியானதே என்பது போலப் பேசியவள் சுரேகா.

''ஏய் என்ன? போன் அடித்தால், எடுக்கக்கூடத் தெரியாதா? நீயெல்லாம் விளம்பரக் கம்பெனி நடத்த வந்தால், இப்படித்தான் இழுத்து மூடி, முக்காடு போட்டுக் கொள்ளும்படி ஆகும்'' என்றாள் எகத்தாளமாக.

சட்டெனப் பொறி தட்டியது. தீனதயாளு போன் பேசியது இவளுக்கோ? கூட்டு சதியா? முயன்று சுதாரித்து ''என்ன உளறுகிறாய்?'' என்றாள் அபிராமி.

''உளறுவதா? நானா? முட்டாள். கொஞ்ச நாளில், வாயில் வந்ததை உளறிக்கொண்டு, நடுத்தெருவில் பைத்தியமாய் அலையப் போகிற நீ, என்னைப் போய், உளறுவதாகச் சொல்லுகிறாயா? இடியட். உன்னை எப்படி விழத் தட்டினேன் பார்த்தாயா? 'உதயா'வுக்கு இரண்டு லட்சம். மைத்ரேயனுக்கு இரண்டு, மற்ற செலவுகள் ஒரு லட்சம். ஐந்தே லட்சத்தில், உன்னை, அதல பாதாளத்துக்கே கொண்டு போய்ச் சேர்த்துவிட்டேனே. இன்னும், இத்தோடு விடுவேன் என்று நினைக்காதே. பத்தரை மணி ஆகட்டும். உன் நிதி நிறுவனத்துக்குப் போய், அவர்களை உசுப்பி விடுகிறேன். அப்புறம், உன் பொருட்களை எல்லாம் ஏலத்துக்குக் கொண்டு வந்து, அவர்கள் ஆடுகிற ஆட்டத்தில், உனக்குக் கட்டாயம் பைத்தியம் பிடித்தே தீரும்.''

அபிராமி திகைத்து நின்றாள்.

ஆக, இவளும், மைத்ரேயனும் சேர்ந்து செய்திருக்கிறார்கள்.

பணத்துக்கு சுரேகா, விளம்பரத் தொழில் நுணுக்கங்களுக்கு, மைத்ரேயன். பாவிகள். உழைத்து முன்னுக்கு வர விரும்புகிற ஒரு பெண்ணை அழிக்க, இப்படியா கூட்டுச் சேர்வார்கள்?

அவர்கள் அதில் வெற்றி பெற்று விட்டதுதான், அபிராமிக்கு அநியாயமாகத் தோன்றியது.

''இந்த அவமானத்திலிருந்து தப்பிக்க உனக்கு ஒரு வழி இருக்கிறது.''

சுரேகா மேலும் பேசினாள். ''உனக்குக் கைவந்த கலைதான் நிறைய இருக்கிறதே, அதைச் செய். சோகம். சிருங்காரம். சிவாத்தானிடம் போய்க் கண்ணீர் வடித்துக் காரியம் சாதி. அவருக்குப் படுக்கை விரித்துஒரு நாளைக்கு, ஒரு லட்சம் என்று வசூல் பண்ணு. பத்தே நாளில் பத்து லட்சம் சேர்த்து உன் கடனைக் கட்டிவிடு. அப்புறம், ஏலமாவது? மண்ணாவது? சீக்கிரமே அத்தானைப் பாப்பர் ஆக்கி, நீ கோடீசுவரியே ஆகிவிடலாம்.''

டெலிபோன் கருவியின் வழியே, தீ வந்து, காதில் பாய்ந்தாற்போல, ரிசீவரைக் கீழே போட்டாள் அபிராமி.

பாவி, பாதகீ, பெண்ணாயிருந்து கொண்டு, என்னவெல்லாம் பேசுகிறாள்.

வாசலில் மணியை யாரோ அழுத்தினார்கள்.

போய்க் கதவைத் திறந்தால், சிவசந்திரனே அங்கே நின்றான்.

சுரேகாவின் பேச்சு நினைவு வர, அவனை வெறித்து நோக்கினாள் அபிராமி. இப்போது இவனிடம் சாதாரண உதவிகூடக் கேட்க முடியாது போலத் தோன்றியது. உதவியென்ன, விவரம் சொல்லக்கூட முடியாது.

'' 'உதயா' விளம்பரத்தை, 'ரேயன்' கொடுத்திருப்பதைப் பார்த்துவிட்டு வந்தேன். இதைப் பெரிதாய்...'' என்று தொடங்கியவன் அவள் முகத்தைப் பார்த்துவிட்டுப் பேச்சை நிறுத்தினான்.

அபிராமி மனம் சோர்ந்திருப்பாள். பேசி உற்சாகப்படுத்திவிட்டு வரலாம் என்றுதான் சிவசந்திரன் அங்கே வந்தான். ஆனால், அவள் முகம் ஏதோ பெரிய விஷயம் என்று காட்ட, உள்ளே வந்து, ''என்னம்மா?'' என்று வினவினாள்.

அவள், கற்சிலையாய் இறுகி நிற்பதைக் கவனித்து, ''இங்கே வா'' என்று, அவளைத் தோளோடு அணைத்து இதமாக கூந்தலை ஒதுக்கிக் கன்னம் தொட்டு, முதுகை வருடி, அவளை ஆறுதல் படுத்த முனைந்தான்.

இறுக்கம் தளர்ந்து, ஒரு விசும்பலுடன் அவள் அவன் மார்பில் சாய, அவளைச் சற்று நேரம் அப்படியே அழவிட்டான். பிறகு, மெல்ல அழைத்துப் போய் அமர வைத்து, ''இப்போது சொல், என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

அவள் மீண்டும் நத்தையாய்ச் சுருட்டுவதை உணர்ந்து, அவள் கைகளை இறுகப் பற்றி, ''என்னை விலக்கி வைக்காதே, அபிராமி. என்னிடம் நீ கவுரவம் பாராட்டலாமா? ம்?'' சிறு கோபம் காட்டிக் கேட்டான்.

கண்ணீரை அடக்கிக் கொண்டு, தலையசைத்தாள் அவள். ''போகாத ஊருக்கு வழி தேடிக்கொண்டு நம் இருவர் வாழ்வையும் நாசமாக்கி விட்டேன் சிவா. எல்லாம் தொலைந்தது சிவா. நான்... நான் அடியோடு தோற்றுவிட்டேன்'' என்று மீண்டும் விசும்பினாள்.

''தப்பும்மா. அப்படிச் சொல்லக்கூடாது'' என்று பிடியிலிருந்த கைகளைத் தூக்கி முத்தமிட்டு, அவன் தொடர்ந்து பேசினான். ''நீ தோற்றுப் போக முடியாது அபி. நீயோ, நானோ, யாருமே தோற்றுப் போக முடியாது.''

நம்பிக்கையுற்று அவள் நோக்க, அவன் தொடர்ந்தான், ''இது எங்கோ, காதில் விழுந்ததுதான். ஆனால், நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று, யாருமே, தோற்றுப் போனதாகச் சொல்ல முடியாது, அபிராமி. சொல்லவும் கூடாது. ஏனென்றால் தோல்வி என்பது மனித உரு அல்ல. நம்முடைய ஒரு முயற்சி தோற்றுப் போகலாம். அவ்வளவே. அந்த முயற்சி தோற்றதின் காரணத்தைக் கண்டுபிடித்து அதைத் தவிர்த்தால் அடுத்த

முயற்சியில் வெற்றி பெற்றுவிடலாம். கவலைப்படாதே. நீ ஜெயிப்பாய்'' என்றான் நம்பிக்கையோடு.

ஒரு கணம் மலர்ந்த அபிராமியின் முகம் உடனேயே கூம்பிப் போயிற்று.

''ஷ்.. அதற்குள் என்ன? இப்போது, இதைச் சீர் செய்ய முடிகிறதா என்று பார்ப்போம். நீ, தீனதயாளுவிடம் பேசினாயா?..'' என்று அவன் கேட்டதற்கு, ''ஆமாம். ஆனால்..'' என்று கவலை கப்பிய முகத்துடன் அவள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, போன் குரல் கொடுத்தது.

கலக்கத்துடன் அவள் நோக்க, ரிசீவரை எடுத்து, அவள் கையில் கொடுத்தான் சிவசந்திரன்.

பேசியது மைத்ரேயன். ''என்ன கண்ணு, பேப்பரில் விளம்பரம் பார்த்தாயா? எப்படித் தட்டிக்கொண்டு போய்விட்டேன் பார். அதிருக்கட்டும். என் காலை நக்குவதற்கு, நீயும் சாந்தியும் சேர்ந்து, எப்போது வரப் போகிறீர்கள்?''

''சீச்சீ. போனை வை.'' என்று அதட்டி, ரிசீவரை வைத்துவிட்ட போதும், அபிராமியின் உடல் நடுங்கத் தொடங்கிவிட்டது. ''சிவா, சிவா, நான் எவ்வளவு பெரிய தப்புப் பண்ணிவிட்டேன். நல்லது என்று எண்ணித்தான் செய்தேன். ஆனால்... சிவா மீள முடியாத தோல்விதான் என்றாலும், ஐபி கொடுத்துவிட்டு, ஏதோ ஒரு வேலையில் சேர்ந்து வயிற்றைக் கழுவிக் கொள்ளவேணும் என்னால் முடியும். மற்ற மூவருக்கும், அவரவர் தகுதிக்கு ஏற்ப வெளியே வேலை கிடைக்கும். ஆனால், சாந்திக்கா? ஐயோ. அப்போதே, அவ்வளவு மட்டமாக நடத்துவார். இப்போது..? நினைக்கவே பயமாக இருக்கிறதே. அவர்களுக்கு உதவுவதாக நினைத்து, நரகத் தீயில் அல்லவா, தள்ளிவிட்டு விட்டேன். கடவுளே. இந்தப் பாவத்துக்கு, எனக்கு மன்னிப்பே கிடைக்காது, சிவா'' என்று, பதறிக் கதறலானாள்.

இந்த முறை, அவளைப் பலமாக உலுக்கித்தான் நிதானத்துக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது.

''அபி, அபிராமி, இதோபார். உனக்கு ஒரு துணைவன் நான் இருப்பது நினைவில்லையா? உன் அமைதிக்காக, அந்த சாந்தி ஒருத்தியின் வாழ்வுக்கு உதவுவது, என்னால் முடியாத காரியம் அல்ல. அவள், அந்த மைத்ரேயனிடம் போய் நிற்க நேரமால் பார்த்துக் கொள்ளலாம். புரிகிறதா? இதற்காகவெல்லாம் கவலைப்படாதே.''

'அத்தானிடம் கண்ணீர் வடித்துக் காரியம் சாதி' என்று, சுரேகா சொன்னது நினைவு வர, அபிராமி மனம் குன்றினாள். ஆனால், சாந்திக்காக அவள் அந்தக் குன்றலைச் சகித்துதான் ஆக வேண்டும்.

உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தவளிடம் ஒற்றை விரலால் உதட்டை வருடி விடுவித்தபடி, சிவசந்திரன் கேட்டான். ''எனக்குத் தெரிந்தவரை, ஒரு விளம்பரத்தைத் தீனதயாளு மாற்றிக் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான். ஆனால், நடப்பதைப் பார்த்தால், விஷயம் ரொம்பப் பெரிதாகத் தெரிகிறது! என்ன விஷயம்? சொல்லு. என்ன செய்ய முடியும் என்று பார்க்கலாம்'' என்று விசாரித்தான்.

''ஒன்றும் செய்வதற்கில்லை, சிவா.''

''அதை நாம் இருவரும் சேர்ந்து பேசிவிட்டு முடிவு பண்ணலாம். சொல்லு.''

பண நஷ்டத்தைத் தான் ஏற்றுக் கொள்ளுவதாக, சிவா சொல்லக்கூடும். ஆனால், அதை அவள் எப்படி ஒப்புவாள்? அவளால் முடியாதே. அதுவும் சுரேகா இவ்வளவு அசிங்கமாகப் பேசிவிட்ட பிறகு.

''சொல்லு அபிராமி?'' என்றான் அவன் சற்று அதட்டலாக.

''நீங்கள் பணம் தருவதாகச் சொல்லக்கூடாது.''

''இல்லை. உன்னால், ஒப்புக்கொள்ள முடியாத எதையும் நான் செய்ய மாட்டேன். சொல்லு.''

ஒருவாறு, அபிராமி விஷயத்தைச் சொன்னாள். ''பத்து லட்சத்து இருபத்தையாயிரம், சிவா. கம்ப்யூட்டர் மற்றும் பொருட்கள் எல்லாவற்றையும் விற்றால் ஒரு.. ஒன்றரை லட்சம் வரை கிடைக்கலாம். மற்ற விளம்பரங்கள் மூலம் வரக்கூடியது. ஒரு நாலரை லட்சம். அதிலும் ஒன்று கடன்தான். எப்படியும் ஐந்து லட்சத்துக்கு மேல், பாக்கி நின்று போகும். புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். இதை நான் உங்களிடம் கேட்கவோ, நீங்கள் தந்தால் வாங்கிக் கொள்ளவோ முடியாது, சிவா. அதனால், நா..ன் வேண்டுமானால், ஐபி கொடுத்துவிடட்டுமா? 'அபிராமி'யை மூடிவிட்டு ஏதாவது வேலையில் அமர்ந்து வருகிற வருமானத்தில் இந்தக் கடனைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைக்கிறேன். கே.. கேவலம்தான். ஆனால், வேறு வழியில்லை சிவா.''

அவள் மனம் ரத்தக் கண்ணீர் வடிப்பதை அவன் உணராமலில்லை.

அவள் சொல்லாமல் விட்டதையும் அவனால் ஊகிக்க முடிந்தது.

ஒன்றுமே இல்லை என்று வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாம இன்ஸால்வென்சி கொடுத்த ஒருத்தியை உன் வீட்டு மருமகளாக ஏற்பார்களா என்றும் தவித்துக் கொண்டுதான் இருப்பாள். அதை வாய்விட்டுச் சொன்னால், தந்தைக்கு எதிராக மகனைத் தூண்டிவிடுவது போல ஆகும் என்று உள்ளே தவிக்கிறாள்.

நிராசையுற்ற அவளது பார்வை சொல்வது, அதைத்தான்.

எந்த நிலையிலும், அவன் மனைவி அவள்தான் என்று அவனே சொன்னாலும், அவளது தன்மானம். இப்போது அதை ஏற்க விடாது.

'அபிராமி' என்றால், எல்லோருக்கும் தெரியவேண்டும். மதிப்பும் மரியாதையுமாகப் பார்க்கவேண்டும் என்று தொழில் தொடங்கியவன் ஆயிற்றே. அவனை உயிராக நேசித்த போதும், இந்த இரு குறிக்கோள்களுக்காகத் திருமணத்தையே தள்ளிப் போட்டவள்.

இந்தத் தொழில் அழிந்தால், அபிராமிக்கு அது மரண காயம் ஆகிவிடும். வாழும் நாள் முழுவதும், அந்த வலி, அவளுக்கு நிரந்தரம் என்பதோடு, மனம் குன்றி, முடங்கிப் போய்விடுவாள். அப்புறம், பழைய அபிராமியைப் பார்ப்பது அரிது.

இதற்கு, வேறு வழி பார்த்தே ஆக வேண்டும். இந்தச் சிக்கலில் இருந்து, அபிராமியை நல்லபடியாக மீட்டே ஆக வேண்டும். கட்டாயமாக.

குறுக்கு வழிக்குள்ள நரிகள் மூன்று சேர்ந்து பின்னிய சிடுக்கு. அவிழ்ப்பது அவ்வளவு எளிதாயிராது.

ஒவ்வொருவரைப் பற்றியும் சிவசந்திரன் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தான்.

மைத்ரேயன், அவனுக்குச் சற்றும் சம்பந்தப்பட்ட ஆளில்லை. அந்த ஆளிடம், அவனுக்கு அதிகாரமும் இல்லை.

சுரேகாவை நினைக்கையில், அவன் முகம் கடுத்தது. அவளுடைய தந்தையின் மூலம்தான் அவளை வழிக்குக் கொண்டுவர வேண்டும். அது, பலிக்கும் என்றாலும், இன்றையச் சிக்கலை, அந்த முயற்சி தீர்க்காது.

அடுத்து, தீனதயாளு, பல வகையிலும், அவன் சம்பந்தப்பட்ட மனிதர்.

ஒரு வழி புலப்பட, வெறித்த பார்வையுடன் உட்கார்ந்திருந்த அபிராமியின் பக்கம், சிவசந்திரன் திரும்பினான்.

கண்ணில் பரிவுடன், அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

''எதற்கும் சற்றுப் பொறு, அபிராமி. அவசரப்பட்டு முடிவெடுக்காதே பிரச்னை எல்லாமே தீனதயாளு, உரியபடிப் பணம் தராமல், அழிச்சாட்டியம் செய்தால்தானே? அவர் பணத்தைத் தந்துவிட்டால், எல்லாம் சரியாகி விடும். அப்படித்தானே? இப்போதே, என் மனதில் ஒரு திட்டம் தோன்றியிருக்கிறது அபி. அந்த தீனதயாளுவை ஒரு மிரட்டு.''

பதறிப் போய், அவன் வாயைப் பொத்தினாள் அபிராமி. ''வேண்டாம் சிவா. அப்ப டியெல்லாம் வேண்டாம் சிவா. அதைவிட, நான் ஒருத்தி அழிவதே மேல்.'' என்றாள் பயமும் கலக்கமுமாக.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

தன் வாயை பொத்தியிருந்த அபிராமியின் கைகளை மென்மையாக அகற்றி, ''எப்படியெல்லாம் வேண்டாம், அபிராமி?'' என்று வியப்புடன் கேட்டான் சிவசந்திரன்.

''மிரட்டி, பயமுறுத்தி எல்லாம் வேண்டாம் சிவா. மாட்டிக் கொண்டால் உங்கள் வாழ்வும் வீணாகிப் போகும்'' என்றாள் அவள் சன்னக் குரலில், ''உங்களுக்கே ஆபத்தும் நேரக்கூடும்!''

புன்னகைத்து, ''கண்ட கண்ட திரைப்படங்களை எல்லாம் பார்க்கிறாய் என்று தெரிகிறது'' என்று விளையாட்டாய் அவள் காதை திருகுவது போல பாவனை செய்தான் சிவசந்திரன். ''இல்லாவிட்டால், இப்படியொரு மடத்தனமான பேச்சு, உன் வாயிலிருந்து வர வாய்ப்பில்லை. நீ நினைக்கிற மாதிரி ஒன்றும் இல்லை. அப்பா, வியாபாரிகள் சங்கத் தலைவர். அவர் மூலமாக ஒரு வேலை செய்யலாம் என்று எண்ணம். முடிகிறதா என்று பார்க்கிறேன். அதுவரை அழாமல் தவிக்காமல் சும்மா உட்கார்ந்திருப்பாயா? டெலிபோனைக் கூட எடுக்க வேண்டாம். நீ, அலுவலகத்துக்கு வர நேரமாகும் என்று நானே தெரிவித்து விடுகிறேன். இங்கேகூட, உன்னைக் குத்திக் கிளற, சுரேகாவோ மைத்ரேயனோ முயற்சிக்கக் கூடும். இந்தா, இந்த செல்போனை வைத்துக்கொள். தேவை என்றால் நான் உன்னை இதில் கூப்பிடுகிறேன். வரட்டுமா? சீக்கிரம் வந்துவிடுகிறேன்'' என்று தன் செல்போனை, அவளிடம் கொடுத்துவிட்டு கிளம்பினான்.

கிளம்புமுன் சிதம்பரத்தை அழைத்து, விஷயத்தை சுருக்கமாகச் சொன்னான். தீனதயாளுவை சந்திக்க தன்னுடன் வருமாறு கூப்பிட்டான்.

அபிராமிக்கு அதுவும் குன்றலாகத்தான் இருந்தது. சிதம்பரத்திடம் 'வெற்றி' என்று சொல்ல முடியாமல் உதவி கேட்க வேண்டியிருக்கிறது. இந்த பல லட்சம் பணத்துக்கு அடிபோடுவதாக அவர் எண்ணுவாரோ?

சிதம்பரம் அப்படி ஏதும் சொல்லவில்லை. மகனின் திட்டத்துக்கு முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்தார்.

பன்னிரண்டு மணியளவில் சிவசந்திரன், அபிராமியின் ஃப்ளாட்டுக்கு திரும்பி வந்தான்.

இரண்டு செக்குகளை அவளிடம் நீட்டினான்.

வாங்கிப் பார்த்த அபிராமியின் கண்கள் அகன்றன.

தீனதயாளுவின் கையெழுத்துடன் கூடிய காசோலைகள். இன்னமும் பதினைந்து நாட்களிலும், பதினேழு நாட்களிலும் தரப்பட வேண்டிய செக்குகள்.

''எப்படி சிவா?''

''ஒரு சின்ன மிரட்டல்.. ஊகூம் அப்படி பார்க்காதே. இது அடிதடி மிரட்டல் இல்லை. முதலில், நம் வெண்புறா தயாரிப்புகளை அவரது சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு சப்ளை பண்ண மாட்டோம் என்றோம். அடுத்து, எங்கள் நண்பர்கள் தரமாட்டார்கள்; வியாபாரிகள் சங்கத்தில் மற்றவர்களிடமும் உங்களை நம்ப முடியாது என சொல்லப் போகிறோம் என்று முடிக்குமுன்பே, தீனதயாளு நடுநடுங்கிப் போனார். 'உங்கள் சொந்தக்காரப் பெண் சுரேகா தானே இப்படிச் செய்யச் சொன்னது' என்று இழுத்தார். சின்னப்பெண் சொன்னால் யோசிப்பதில்லையா என்று அப்பா ஓர் அதட்டல் போடவும் மிரண்டு போனார். ரங்கநாதனிடம், அதாவது சுரேகாவின் அப்பாவிடம் பேசப் போவதாக கூறவும் எல்லாம் சரியாகிவிட்டது. அப்பா மெய்யாகவே ரங்கநாதன் அங்கிளிடம் சுரேகாவைப் பற்றி பேசுவதாக இருக்கிறார். சுரேகாவின் பணம் இல்லாவிட்டால், மைத்ரேயன் பல் பிடுங்கிய பாம்பு. அதனால், இனி நீ கவலைப்பட தேவையிராது'' என்று முடித்தான் சிவசந்திரன்.

சரியாகப் பார்த்தால், அழிவு தடுக்கப்பட்டுவிட்டது என்று, அபிராமி சந்தோஷப்பட வேண்டும்.

மகிழ்ச்சிதான். இல்லை என்று சொல்லமுடியாது. எப்படிப்பட்ட தோல்வியிலிருந்து சிறு வடுகூட படாமல் தப்பியிருக்கிறாள்.

ஆனால், உள்ளுர ஓர் அவமானமும் தகித்துக் கொண்டே இருந்தது. 'என்னால் முடியும்' என்ற அவளது தன்னம்பிக்கைக்கு எவ்வளவு பெரிய அடி.

''உங்கள் தந்தையிடம் நேரில் வந்து நன்றி சொன்னால் நன்றாயிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றாள் அபிராமி.

''நன்றி, எனக்குக் கிடையாதா? திட்டம் முழுக்க என்னதுதான் அபிராமி!''

''அள்ளித் தருகிறதே என்று கைக்கு, வாய் நன்றி தெரிவிக்க வேண்டுமா?''

''போச்சுடா அதை, இதைச் செய்தேனே என்று இனி ஒரு சலுகை கேட்க முடியாமல், வஜ்ரப் பசை போட்டு, வாயை ஒட்டிவிட்டாயே'' என்று சிரித்தான் சிவசந்திரன்.

முயன்று, லேசாக முறுவலித்தாள் அபிராமி. ''சார் இப்போது அலுவலகத்தில்தானே இருப்பார்?''

சிவசந்திரன் செய்ததை அவள் குறைவாக மதிப்பிடவில்லை. 'உடுக்கை இழந்தவன் கை'யாய் உதவி செய்தான். அவன் செய்த உதவிக்கு ஈடு இணையே கிடையாது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அந்தக் கைக்கும் நாம் நன்றி தெரிவித்துக் கொண்டிருப்பது இல்லையே! ஆனால், அவன் தந்தை விஷயம் வேறு.

இருவருமாக வெண்புறா அலுவலகத்துக்கு சென்றனர்.

அபிராமி, சிதம்பரத்துக்கு நன்றி செலுத்தினாள்.

முறுவலோடு ஏற்றவர், அவளது முகத்தை கவனித்துவிட்டு, ''என்னம்மா, முகமே சரியில்லை? ஏதோ, உள்ளே வருத்தப்படுகிற மாதிரி இருக்கிறதே. இந்த அளவுக்கு விட்டுவிட்டோமே என்றா? 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பதுபோல, தொழில் என்றால், ஓரிரு சரிவுகள் நேரத்தான் செய்யும், அபிராமி'' என்றார் சிதம்பரம்.

''அம்மையாருக்கு, நம்மிடம் உதவி பெறுமாறு ஆகிவிட்டதே என்கிற வருத்தம் அப்பா'' என்றான் மகன். ''தன்மானத் தங்கம் அல்லவா?'' என்று கிண்டலாகவே பிட்டு வைத்தான் சிவசந்திரன்.

''அப்படியில்லை'' என்று மறுத்த அபிராமி பிறகு, ''நான் சுய முயற்சியால் வெல்லவேண்டும் என்று நினைத்தேன். இப்போதானால், உங்கள் உதவியின்றி என் நிறுவனம் பிழைத்திருக்கவே முடியாது என்கிற நிலையாகி விட்டதே. அதுதான், கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது'' என்று ஒருவாறு ஒப்புக்கொண்டாள்.

''அதுதான் பிழைத்துவிட்டதல்லவா? அப்புறம் என்ன வருத்தம்? அபிராமி, யார் உதவியும் கூடாது என்று இந்தக் காலத்தில் யாருமே வாழ முடியாது. காலையில் எழுந்ததிலிருந்து சிறிதும் பெரிதுமாக எத்தனை பேரின் உதவிகளை ஏற்கிறோம் யோசித்துப் பார்'' என்றான் சிவசந்திரன்.

அபிராமி தன்னை வருத்திக்கொள்வது பிடிக்காமல், அவன் கூறிய விளக்கத்தை அவள் ஏற்கவில்லை!

''அது வேறு, சிவா. ஒருவகையில் அதெல்லாம் வியாபாரம்தான். பணத்தை கொடுக்கிறோம். பொருளோ வேலையோ வாங்கிக்கொள்கிறோம், பண்டமாற்று மாதிரி. இது அப்படியா?''

''சரி, இப்போது செய்த உதவிக்கு 'கன்சல்டன்சி' மாதிரி ஏதோ ஒரு கணக்குப் போட்டு பணம் தந்துவிடு. அப்புறம் மனது சரியாகிவிடும், சரிதானா? ஆனால், ஐந்து பத்து என்று போட்டு

என்னை கேவலப்படுத்தி விடாதேம்மா. குறைந்தது ஐநூறு ரூபாயாவது தந்துவிட வேண்டும். இல்லா விட்டால், ஒப்புக்கொள்ளவே மாட்டேனாக்கும்'' என்று போலியாக மிரட்டி, அவளை சிரிக்க வைக்க முயன்றான். அவன்.

ஆனால், ''பாருங்கள் சார், இந்த சிவாவை'' என்று புகார் செய்தாள் அபிராமி.

வியப்பினால் மலர்ந்த கண்களால், இருவரையும் மாறிப் மாறிப் பார்த்தார் சிதம்பரம். ''உங்கள் இருவருக்குமே விஷயமே தெரியாது போல இருக்கிறதே!'' என்று ஆச்சரியப்பட்டார். ''ஒருவர்கூட டீ.வி–யில் பிசினஸ் செய்தியை பார்க்கவில்லையா? ஓகோ! இருவருமே இதே கவலையில் மூழ்கி இருந்தீர்கள் போல!''

''விளம்பரம் பற்றி, ஏதாவது புதுச்சட்டமா? என்ன சார்? என்ன செய்தி?'' என்று அபிராமி கேட்டாள்.

''என்னப்பா, இவள் கவலை அவசியமில்லை என்பதாக என்ன வந்தது?'' என்று சிவசந்திரன் கேட்டான்.

லேசாக முறுவலித்து, ''இந்தியாவில் சென்ற ஆண்டு வெளியான மிகச்சிறந்த விளம்பரத்துக்கான முதல் பரிசு, அபிராமிக்கு கிடைத்திருக்கிறது. அட்வர்டைசிங் க்ளப், இன்று அறிவித் திருக்கிறார்கள். அர்த்தம் புரிகிறதா? இனி அகில இந்திய அளவில், பெரிய பெரிய விளம்பரங்கள் எல்லாம் வரும்..'' என்று அவர் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே செல்போன் கிணுகிணுத்தது.

அவசரமாக கைப்பையை திறந்து, ஒலியெழுப்பிக் கொண்டிருந்த 'செல்'லை எடுத்து சிவசந்திரனிடம் கொடுத்தாள், அபிராமி. ''உங்களது. காலையில் தந்தீர்களே'' என்று அவனிடம் நீட்டினாள்.

வாங்கி கேட்டுவிட்டு, ''ரொம்ப சந்தோஷம், பார்கவி. இதோ, உங்கள் மேடமே இங்கேதான் இருக்கிறாள். அவளிடமே சொல்லுங்கள்'' என்று புன்னகையோடு செல்லை அபிராமியிடம் நீட்டினான்.

பரபரப்புடன் கேட்டபோது, ''உங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. மேடம். சிவசந்திரன் சார்தான் காலையில் நீங்கள் வர தாமதமாகும் என்று சொன்னாரா, அதனால் அவரிடமே கேட்கலாம் என்று அவருக்குப் போட்டேன். நல்லவேளையாக, நீங்களும் அங்கேயே இருக்கிறீர்கள். மேடம், இந்த ஆண்டு நம் விளம்பரத்துக்கு முதல் பரிசு கிடைத்திருப்பதாக ஃபேக்ஸ் வந்திருக்கிறது. அதோடு, அகில இந்தியாவுக்குமாக ஒரு கோடி, ஒன்றரைக் கோடி அளவில் 'பட்ஜெட்' போடவேண்டும். அதுபற்றி பேச வாருங்கள் என்று அழைத்து, ஸ்மைல் பற்பசைக்காரர்களும், டிரெஸ்வெல் மில்லும் ஃபேக்ஸ் அனுப்பியிருக்கிறார்கள். அப்புறம், டீ.வி. ஸ்பாட் எடுக்க முடியுமா என்று மூன்று முக்கியமான இடங்களில் இருந்து கேட்டார்கள். எங்களுக்கு சந்தோஷத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை மேடம்'' என்று தன் பங்குக்கு பரபரத்தாள் பார்கவி.

ஒரு கோடி, ஒன்றரை கோடி என்றதும் அபிராமி, 'மேடம்' ஆகி விட்டாளா? நிலை உயரும்போது மரியாதை தானாக வந்துவிடுமோ? மற்றபடி, பார்கவி ஒன்றும் பணம் என்றதும் சலாம் போடுகிறவள் அல்ல... என்று எண்ணும் போதே நிலைமையின் அளவும் முக்கியத்துவமும் அவள் மனதிலும் தெளிவாகப்பட்டது.

‘ஸ்மைலு’ம், ‘டிரஸ்வெல்’லும் அவரவர் துறையில் பெரிய நிறுவனங்கள். அவளது கனவு நூறு சதவீதமாய் நிறைவேறுகிறதா?

‘அபிராமி’ என்ற பெயரை, உலகம் மரியாதையுடன் பார்க்கப் போகிறதா?

கண்முடித் திறந்து, தன்னை நிதானப்படுத்திக்கொண்டு, ‘‘பரிசுக்கு நன்றி தெரிவித்தும், மற்ற இருவருக்கும் எங்கே, எப்போது பேசுவது என்று கேட்டும் கடிதங்கள் தயார் பண்ணி வையுங்கள் பார்கவி. நான் முடிந்தவரை சீக்கிரமாக வந்துவிடுகிறேன். பார்கவி, ஒரு கிலோ இனிப்பு வாங்கி எல்லோருக்கும் கொடுங்கள்’’ என்று பணித்து, செல்லை அணைத்து, சிவசந்திரனிடம் நீட்டினாள் அபிராமி.

புன்னகையோடு காத்திருந்த மற்ற இருவருக்கும், நீர்த்திரையிட்ட கண்கள் பளபளக்க, விவரத்தை எடுத்துச் சொன்னாள்.

சிவா ஆவலாக அவள் கையைப் பற்றி குலுக்க, சிதம்பரம் முன்னே வந்து, அவள் தலையைத் தொட்டு ஆசீர்வாதித்தார்.

‘‘என்னம்மா, நிம்மதிதானா? இனி இந்தச் சுண்டைக்காய்களால் எதுவும் செய்ய முடியாது. முழுக்க முழுக்க, உன் முயற்சியாலேயே முழு முன்னேற்றம் அடைந்துவிட்டாய். நீ நினைத்த முன்னேற்றம், பெருமை! மரியாதை! திருப்தி ஆயிற்றா?’’ என்றுவினவினார்.

மகிழ்ச்சியோடு தலையாட்டினாள் அபிராமி.

உடனே மகனைப் பார்த்து, ‘‘அப்படியானால் திருமணத்தை சீக்கிரம் நடத்திவிடப்பா. இல்லையென்றால், இன்னும் எதையேனும் சாதிக்க வேண்டும் என்று மருமகள் மறுபடியும் தள்ளிப் போட்டுவிடுவாள்’’ என்று மிரட்டுவதுபோல அவர் கூற இவர்கள் இருவரும் நகைத்தனர்.

‘‘திருமண அழைப்பைக்கூட என் மனதில் அச்சுக் கோத்து விட்டேன். அபிராமி அட்வர்டைசிங் உரிமையாளர் அபிராமிக்கும் வெண்புறா ப்ராடக்ட்ஸ் எம்.டி. சிவசந்திரனுக்கும் இன்ன தேதியில், இன்ன நேரத்தில் நடைபெற இருக்கும் திருமணத்துக்கு சுற்றம் சூழ வந்திருந்து வாழ்த்தியருள வேண்டுமென இரு வீட்டாரும் இணைந்து அழைக்கிறோம்! அழைப்பு வாசகம் சரிதானா?’’

‘‘சூப்பர், அப்பா’’ என்றான் சிவசந்திரன் பெருமிதப் புன்னகையோடு.

கண்களில் நீர்மல்க நின்றாள் அபிராமி. அவளுக்கென்று அழைக்க யாருமில்லை என்பதால் தன்னையே ஒதுக்கிக் கொண்டுவிட்டாரே இந்த மாமனிதர்!

‘‘நீ சொன்னால் போதுமா? வாசக நேர்த்தி பற்றி விளம்பரக் கம்பெனி அம்மாதான் சொல்ல வேண்டும்’’ என்று சிரித்தார் சிதம்பரம்.

சட்டெனக் குனிந்து, அவர் காலைத் தொட்டு, ''உங்கள் பெருந்தன்மை மாமா'' என்றாள் அபிராமி.

''முதல் தடவையாக, மாமா என்று அழைத்திருக்கிறாய். நன்றாயிரும்மா'' என்று ஆசீர்வதித்துவிட்டு, ''எழுந்திரு. இந்த சாஸ்திரத்துக்காக விழ வேண்டிய ஒன்றிரண்டு தருணங்கள் தவிர, இதெல்லாம் வேண்டாம், என்ன? திருமணத்துக்கு நாள் பார்க்கலாம். அப்படித்தானே?''

''ம்'' என்று புன்னகையோடு தலையாட்டினாள் அபி.

''சந்தோஷம். இன்னும் ஒரு சின்ன விஷயம். இனி விளம்பர நிறுவனத்தை என்ன செய்யப் போகிறாய்?''

திகைப்புடன் அபிராமியும் சிவசந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''நடத்த வேண்டியதுதானே?''

''நிச்சயம் நடத்த வேண்டும். நீ ஏற்றம் புரிய வந்தவள் அபிராமி. இவ்வளவு பாடுபட்டு வளர்த்ததை இடையில் விடுவது மகா பாதகம். ஆனால், இப்படி நடத்தக்கூடாது. கூட பத்து ஆட்களை போட்டு உன் மேற்பார்வையில் அவர்களை வேலை செய்யச் சொல்லு. இப்படி எல்லாம் நீயாக, இரவுபகல் அலுவலகமே கதி என்று இருக்கக் கூடாது. சொல்வது புரியும் என்று நினைக்கிறேன். முக்கிய மாக எனக்கு பேரன் கிடைப்பது தள்ளிப் போகக்கூடாது. தெரிகிறதா? பேசிக்கொண்டிருங்கள். நான் இதோ வருகிறேன்'' என்று இங்கிதமாய் வெளியேறினார் சிதம்பரம்.

சிவசந்திரன் குறும்பும் ஆவலுமாக நோக்க, கன்னம் சிவக்கப் புன்னகை புரிந்தாள் அபிராமி.

(நிறைவு)